# பத்திரம் எழுதலும் சட்டமும்

எழுதியவர் :
தி. ரா. வெங்கடேசய்யர், பி.எ.பி.எல்.
அட்வொகேட்
(Author of 'Law of Promissory Notes')

Z211;98:1
N73

சென்னை
1973

பதிப்புரிமை, மொழி பெயர்ப்புரிமை
எழுதியவரிடம் நிற்கும்
Copy Right
[ All Rights Reserved ]

# பத்திரம் எழுதலும் சட்டமும்

எழுதியவர் :

தி. ரா. வெங்கடேசய்யர், பி.எ.பி.எல்.

அட்வொகேட்

(Author of 'Law of Promissory Notes')

சென்னை

1 9 7 3

பதிப்புறிமை, மொழி பெயர்ப்புறிமை

எழுதியவரிடம் நிற்கும்

Copy Right

[All Rights Reserved]

சென்னை திருவல்லிக்கேணி வெங்கடாசல செட்டி தெருவு
நெ. 5ல் உள்ள பாரதி விஜயம் அச்சகத்தில்
அச்சடிக்கப்பெற்றது.
முதல் பதிப்பு - வெளியீடு — 1973

விலை ரூ. 15/-

எழுதியவரால் பிரசுரிக்கப்பட்டது - விலாசம்
சென்னை திருவல்லிக்கேணி ஆலங்காத்தா
பிள்ளை தெருவு கதவு எண் 23.

# முகவுரை.

பத்திரம் எழுதுவது ஒரு தனி கலையாகும். அதை பிழையின்றியும் மெச்சத்தக்கபடியும் எழுதுவதற்கு சட்டஞானமும் பரந்த பாஷா ஞானமும் வேண்டும். பிழையிருந்தால் சொத்தில் ஏற்பட வேண்டிய உறிமை பாதிக்கப்படுமாதலால் பொருத்தமான வார்த்தைகளை கொண்டு சந்தேகத்திற்கு இடம் தராமல் பத்திரத்தை நினைத்தபடி எழுதிக் கொள்ள வேண்டும். இது தவிற சொன்னதையே சொல்லாமலும் சொல்லவேண்டியதை விட்டுவிடாமலும் கூடியவரை பத்திரத்தை சுருக்கி எழுதுவதே நல்ல முறையாகும்.

இப்புஸ்தகத்தில் பத்திரத்தை சரியாக எழுதுவதற்கு தெரிந்துகொள்ளவேண்டிய சட்ட விதிகளை முதலில் சொல்லி அதன்படி எழுதும் உதாரணம் ஒன்றும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு வகை பத்திரத்திற்கு மாற்று நிபந்தனைகள் கூடிய ஒரே உதாரணம் கொடுத்திருப்பதால் அதை துணையாக கொண்டு ஒப்பந்தத்தின் நிபந்தனைகள்படி வேண்டியதை சேர்த்தும் வேண்டாததை நீக்கியும் பத்திரத்தை மாற்றி எழுதிக் கொள்ள வேண்டும். ஹிந்து வாரீசு சட்டம் இயற்றி 16 வருஷங்களுக்கு மேலாகியும் அதன் விதிகள் இன்றும் பலருக்கு தெரியாமலேயே இருந்து வருகிறது. ஆகையால் அவைகளையும் முஹம்மதிய வாரீசு முறையையும் ஆங்கில பாஷையிலேயே 5வது அனுபந்தத்திலும், தமிழ் பாஷையில் பாகம் பிரிவினை அத்தியாயத்திலும் இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இனி பிறக்கப் போகும் குழந்தைக்கு கொடுக்கக் கூடிய உறிமையைப் பற்றிய விதிகள் இதில் செடில்மென்டு அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இவைகளை நன்ருக தெரிந்து கொண்டு உறிமையுள்ளவர்களை சேர்த்தும் உறிமைகளை நினைத்தபடியும் சட்டப்படி செல்லத்தக்கதாயும் எழுதிக் கொள்ள வேண்டும்.

சட்டம் ஆங்கில பாஷையில் இருப்பதால் அதை தமிழில் மொழிபெயர்க்க வேண்டியதாகிறது. இது எளிதான காரியமல்ல. இதில் சில சட்ட பிரிவுகள் மொழிபெயர்க்கப்பட்டுள்

ஏன. சிலவற்றின் கருத்துக்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதில் கூடுமானவரை ஆங்கில சட்டவார்த்தைகள் தமிழில் கொடுக்கப்பட்டுள்ளன. Promissory Note (பிராமிசரி நோட்டு) -க்கு பணம் முக்கிய அம்சமாகையால் அதை "பண உறுதி சீட்டு" என்றும், Subrogation (சப்ரொகேஷன்) என்பதை "தீர்த்த அடமானத்தை அமுல் செய்பாத்யதை" என்றும், F O L (எப்.ஒ.எல்) என்பதை "த.பா.க" (தண்ணீர் பாய்ச்சப் படும் கக்கூஸ்) என்றும், Easement (ஈஸ்மெண்டு) என்பதில் (ஒளி, காற்று, தாங்கு, வழிநடை, தண்ணீர் இவைகளைப் பற்றிய பாத்யதைகள் அடங்கியிருப்பதால் அதை "ஒ.கா.தா. வ.த. பாத்யதைகள்" என்றும் இப்புஸ்தகத்தில் சுருக்கி சொல்லப்பட்டிருக்கிறது. இப்படியாக ஆங்கில சட்டவார்த்தைகளை தமிழில் எழுத முயற்சித்தால் தமிழ் பாஷை வளர்ச்சி அடைய அனுகூலமாயிருக்கும்.

பத்திரம் எழுதுவதில் எனக்கு ஏற்பட்டுள்ள அனுபோகத்தை அறிந்த சிலர் கேட்டுக் கொண்டதால் இதை எழுத முற்பட்டேன். பத்திரங்களை பிழையின்றி எழுதுவதற்கும், தமிழ் பாஷை வளர்ச்சிக்கும், மக்களுக்குள் சட்ட ஞானம் பரவுதலுக்கும், சட்டமாணவர்களுக்கும் அறிஞர்களுக்கும் இப்புஸ்தகம் தகுந்த துணை புரியுமானால், அதுவே எனக்கு திருப்தி அளித்ததாகும்.

சென்னை
1-7-1973

*தி. ரா. வெங்கடேசய்யர்*

# விளக்கம்

## உதாரணம் — ஆரம்பம்

தேதி———இன்னருக்கு இன்னர்——எழுதிக் கொடுப்பது என்று உதாரணங்களின் ஆரம்பத்தில் இருப்பதை கீழ் கண்டபடி விஸ்தரித்து (புள்ளி) இடத்தில் வேண்டியதை சேர்த்து எழுதிக் கொள்ளவும்.

.........வருஷம்.........மாதம்......ம்......தேதி.......(ஊர்) ......தெருவு கதவு எண்......உள்ள வீட்டிலிருக்கும்......மதம் (இன்னர்) குமாரர்/பாரியாள்.........ஜீவனம்......வயதுள்ள (இன்னர்) என்கிற உங்களுக்கு......(ஊர்)......தெருவு கதவு எண்.........உள்ள வீட்டிலிருக்கும்...—...மதம் (இன்னர்) குமாரர்/பாரியாள்.........ஜீவனம்......வயதுள்ள (இன்னர்) ஆகிய நான் எழுதிக் கொடுத்த (இன்னது) பத்திரம் என்னவென்றல் :—

பிறகு [ஷெ "உங்களுக்கு" "நான்" என்ற வார்த்தைகள் முறையே உங்களுடையவும் என்னுடையவும் வாரீசுகளேயும், உயில் நிறைவேற்றுளர்களேயும், நிர்வாகிகளேயும், சட்ட முறை பிரதிநிதிகளேயும், மாற்றுமர்களேயும் கூட குறிக்கும்] என்று சேர்த்து எழுதிக் கொள்ளவும்.

## குறிப்புகள்

(1) இரு பார்டிகளில் 18 வயது முடியாத மைனர் நபர் இருந்தால் அவருக்கு கார்டியன் இன்னர் என்பதையும் அவர் விவரத்தையும் முதலில் சொல்லி கையெழுத்துக்குப் பிறகும் இன்னருடைய கார்டியன் என்றும் குறித்து எழுதிக் கொள்ளவும். ஹிந்து மைனரிடி சட்டபடி மைனர் சொத்துக்கு கார்டியனக இருக்க கூடியவர்கள் முறையே தகப்பனர், தாயார், அவர்கள் உயில் மூலம் நியமித்த நபர், கோர்டு நியமித்த நபர்; கல்யாணமான பெண்ணுக்கு கணவர்; குடும்ப சொத்தில் மைனர் பாகத்திற்கு குடும்ப மானேஜர். முஹம்மதிய சட்டபடி மைனர் சொத்துக்கு கார்டியன்கள் முறையே தகப்பனர், அவர் உயில் மூலம் நியமித்த நபர்; தகப்பனரின் தகப்பனர்; அவர் உயில்மூலம் நியமித்த நபர்; கோர்ட்டு நியமித்த நபர்.

(2) உதாரணங்கள் ஒரு நபர் மற்றொரு நபருக்கு எழுதிக் கொடுப்பதாக இருக்கிறது. பலர் இருந்தால் அவர்களே 1வது நபர், 2வது நபர் .........வது நபர் என்றும், நபர்கள் கூட்டு இருந்தால் 1வது கூட்டு, 2வது கூட்டு, ......வது கூட்டு என்றும் சொல்லி எழுதிக் கொள்ளவும்.

(3) உதாரணங்களில் புள்ளிகள் இருக்கும் இடங்களிலும் வரியில் காலியுள்ள இடங்களிலும் சந்தர்பம் காட்டும் விவரத்தை எழுதிக் கொள்ளவும்.

(4) உதாரணங்களில் "ரூ. /=" என்று வருவதை எண்ணிலும் எழுத்திலும் எழுதிக் கொள்ளவும்.

(5) உதாரணங்களில் வெவ்வேறு விவரங்கள், நிபந்தனை கள் இருந்தால் வேண்டாததை நீக்கி வேண்டியதை சேர்த்து எழுதிக் கொள்ளவும்.

(6) கிரயப்பத்திர உதாரணத்தில் சொத்து விவரத்தில் கண்டுள்ளதில் இல்லாததை நீக்கி, இருப்பதை மட்டும் குறித்து எழுதிக் கொள்ளவும். F.O.L என்பதை "த.பா.க" (தண்ணீர் பாய்ச்சப்படும் கக்கூஸ்) என்றும், Easement என் பதை "ஒ.கா.தா.வ.த பாத்யதைகள்" (ஒளி, காற்று, தாங்கு, வழிநடை, தண்ணீர் இவைகளைப் பற்றிய உறிமைகள்) என் றும் சுருக்கி எழுதிக் கொள்ளலாம்.

### உதாரணம் - முடிவு

## பணப்பத்து விவரம்

"பணப்பத்து விவரம்" என்று உதாரணங்களின் முடி வில் இருப்பதில் எழுதிக் கொடுத்தவருக்கு செலுத்திய தொகைகளை தேதியுடனும், அவருக்காக வெளியாருக்கு செலுத்திய அல்லது செலுத்த வேண்டிய தொகைகளையும், மைனர் பாக பிடிப்பு, சொத்து ஒப்புவித்து பெற நிறுத்தும் தொகை, வரி பாக்கிகள், குடக்கூலிக்காரர்கள் முன்பணம், எலெக்டிரிக் சார்ஜு பாக்கி முதலியவைகளை தனித்தனியே குறித்து மிகுதியுள்ளதை உதவி பதிவாளர் முன்னிலையில் கட்டும்படி எழுதிக் கொள்வது நல்ல முறையாகும்.

### உதாரணம் - முடிவு

## ஷெடியூல் சொத்து விவரம்

உதாரணங்களின் முடிவில் "ஷெடியூல் (சொத்து விவ ரம்)" என்று இருப்பதை கீழ் கண்டபடி விஸதரித்து (புள்ளி) யிடத்தில் வேண்டியதை சேர்த்து எழுதிக் கொள்ளவும். .........ரிஜிஸ்டிரேஷன் டிஸ்டிரிக்ட்.........சப்ரிஜிஸ்டிரேஷன் டிஸ்டிரிக்ட்.........ஜில்லா.........தாலுக்கா.........ஊர், டிவி ஷன் எண்.........வார்டு எண்.........(தெருவு).........கதவு எண்.........உள்ள வீடு மனை [மேல் கூரை வீடு அடி நில லீஸ் ஹோல்டு பாத்யதை கூடிய வீடு மனை] [காலி மனை] யானது:—

| | | | |
|---|---|---|---|
| ............ | ............ | ............க்கு | வடக்கு |
| ............ | ............ | ............க்கு | கிழக்கு |
| ............ | ............ | ............க்கு | தெற்கு |
| ............ | ............ | ............க்கு | மேற்கு |

இந்த நாற்பாங்கெல்லைக்குட்பட்டதும் பைமாஷ் எண் .........பழைய சர்வே எண்.........ரீசர்வே எண்.........டவுன் சர்வே எண்.........பட்டா எண்.........விஸ்தீரணம் வடக்கு-

தெற்கு.........அடி கிழக்கு–மேற்கு.........அடி ஆக.........
சதுரடியுள்ளது.........வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு பக்கங்களில் உள்ள சுவர்கள் இந்த சொத்தை சேர்ந்தவை. லீஸ் ஹோல்டு அடிமனை (இன்னார்)க்கு சொந்தமானது.

சொத்து "நஞ்சை புஞ்சை" நிலமானால் கீழ்கண்டபடி விவரம் குறித்து எழுதிக் கொள்ளவும்.

......ரிஜிஸ்டிரேஷன் டிஸ்டிரிக்ட்......சப்ரிஜிஸ்டிரேஷன் டிஸ்டிரிக்ட்......ஜில்லா.........தாலுக்கா.........எண் கிராமத்திலிருக்கும் நஞ்சை (புஞ்சை) நிலமானது :—

| தரம் | புலத்தின் பெயர் | சர்வே எண் | விஸ்தீரணம் | தீர்வை |
|---|---|---|---|---|
| ... | ... | ... | ... | ... |

## குறிப்புகள்

(1) வீடுமனையில் ஒரு பகுதி மட்டும் மாற்றுவதானால் மொத்த விஸ்தீரணத்தையும் குறித்து அதில் மாற்றப்படும் விஸ்தீரணத்தையும் செக்பந்தியையும் சொல்லி எழுதிக் கொள்ளவும். மொத்தத்திற்கும் பிளான் வரைந்து அதில் மாற்றப்படும் பாகத்தை வர்ணமிட்டு அளவுகளுடன் காண்பித்து பத்திரத்தில சேர்த்து ரிஜிஸ்டர் செய்து கொள்ளவும். பின்பாக வீடுமனையானால் தெருவுக்குப் போக வர உள்ள சந்து வழியையும் அளவுகளுடன் பிளானில் காணபிக்கவும். ஷெடியூலிலும் அவைகளை சொல்லி எழுதிக் கொள்ளவும். சந்து வழி பலர் உபயோகத்திற்கு இருந்தால் "பொது சந்து வழி" அல்லது "இன்னார் இன்னாருக்கு சொந்தமான சந்து வழி" என்று சொல்லி எழுதவும்.

(2) மாற்றப்படும் வீடுமனையில் அடிநிலம் சொந்தமானதாக இல்லாவிட்டால் "மேல் கூரை வீடு" என்றுமட்டும் சொல்லாமல் அடிமனையில் உள்ள "லீஸ்ஹோல்டு (அனுபோக) சொந்த பாத்யதை உள்பட" என்று சொல்லி எழுதிக் கொள்ளவும்.

(3) மாற்றப்படும் சொத்து நிலமானால் அதில் உள்ள மரங்கள் அல்லது பயிர் இவைகளைப் பற்றிய விவரத்தையும் குறித்துக் கொள்ளவும்.

(4) ஒரு சர்வே எண்ணில் அடங்கிய நிலத்தில் ஒரு பகுதியை மட்டும் மாற்றினால் மொத்த விஸ்தீரணத்தையும் செக்பந்தியுடன் சொல்லி எழுதவும்.

## பத்திர பரிசிலனையும் எழுதலும்

பத்திரம் எழுதுவதற்கு முன் சொத்தைப்பற்றி ஏற் கெனவே பதிவாயுள்ள பத்திரங்களேயும், பட்டா, வீட்டு வரி ரசீது, நிலவரி ரசீது கிஸ்தி ரசீது அடிமனே குடக்கூலி ரசீது, வில்லங்க சர்டிபிகேட்டுகள், இவைகளே தேதிவாரியாக வைத் துக் கொண்டு பார்த்து குறிப்புகள் எடுத்துக் கொள்ளவும். பிறகு வில்லங்க சர்டிபிகேட்டுகள் குறைவாக இருக்கின் றனவா என்பதையும், அவைகளில் கண்ட பத்திரங்கள் எல் லாம் இருக்கின்றனவா என்பதையும் கவனிக்கவும். அவைகள் படி யார் சொந்தக்காரர் என்பதையும் வில்லங்கங்கள் என் னென்ன இருக்கின்றன என்பதையும் தெரிந்து கொள்ளவும். சொந்தக்காரர் இறந்துபோய் இருந்தால் அவர்வாரீசு யார்என் பதை விசாரித்து தெரிந்து கொள்ளவும். பல வாரீசுகள் இருந் தால் வம்சாவளி எழுதிக் கொண்டு சொத்து யார் யாருக்கு சொந்தம் என்பதை கண்டு கொள்ளவும். உறிமையுள்ளவர் கள்மைனராகஇருந்தால் அவர் பாகத்தைசட்டப்படிபராதீனம் செய்ய கார்டியனுக்கு அதிகாரம் இருக்கிறதா என்பதையும் கோர்ட்டு அனுமதி வேண்டுமா என்பதையும் தெரிந்து கொள் ளவும். [மைனரின் பிறந்த தேதியை குறித்துக் கொள்வது அவசியமாகும்]. இறந்த சொந்தக்காரர் உயில் அல்லது செடில்மெண்டு செய்திருந்தால் அதன்படி சொத்து யாருக்கு சொந்தம் என்பதையும், அவருக்கு பூரா பாத்யதை உண்டா அல்லது அனுபவிக்கும் (ஆயுள்) பாத்யதை மட்டும்தானு என்பதையும் தெரிந்து கொள்ளவும். உயிலானுல் கோர்டில் "பிரோபேட்" வாங்கவேண்டுமா என்பதையும் கவனிக்கவும். உயில் ரிஜிஸ்டராகாமலும் இருக்கலாமாகையால் அப்படி ஒன்றுமில்லே என்று விசாரித்து தெரிந்து கொண்டு அதைப் பற்றிய உறுதிமொழியையும் பத்திரத்தில் எழுதிக் கொள்ள வும்.

உறிமை காட்டும் அசல் பத்திரங்கள் இல்லே என்ருல் அவை எப்பொழுது எப்படி காணுமற் போயிற்று என்பதை யும் அதற்கு என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன என்பதையும் விசாரித்து தெரிந்து கொள்ளவும். அசல் உரிமை காட்டும் பத்திரம் இல்லாவிட்டால் அது டிபாசிட் அடமானத்தில் இருக்கலாம் என்ற சந்தேகம் ஏற்படுவதால் காணுமற் போயிருப்பதை எழுதும் பத்திரத்தில் சொல்லி அது யாருக்கும் பொறுப்பாக கொடுக்கப்படவில்லே என்ற உறுதி மொழியையும் சேர்த்து எழுதிக் கொள்ளவும். அசல் பத்திரம் வேறு பாகஸ்தரிடம் இருந்தால் அதை எழுதும் பத்திரத்தில் குறித்துக் கொள்ளவும். காணுமல் போயிருப்பது தீர்ந்து போன அடமானப்பத்திரமானுல் அதன் தேதியை குறித்து, அது தீர்ந்து விட்டது என்ற உறுதி மொழியையும் சேர்த்து எழுதிக் கொள்ளவும். முடியுமானுல் "அடமானம் தீர்ந்து விட்டது" என்ற ஒப்புதலேயும் அடமானம் பெற்றவரிடமிருந்து எழுதி வாங்கிக் கொள்ளவும். வில்லங்க சர்டிபிகேட்டை

சாதாரணமாக 13 வருஷங்களுக்கு வாங்கி பார்க்கும் பழக்கம் இருந்து வருகிறது. இது சில சமயங்களில் தவறுதலுக்கு காரணமாகும். ஆகையால் சந்தேகம் தீர எத்தனை வருஷங்களுக்கு சர்டிபிகேட் வேண்டும் என்பதை தீர யோசித்து அதன்படி வாங்கி பார்க்கவும். பல வருஷங்களாக பத்திரம் எதுவுமே ரிஜிஸ்டர் செய்யப்படாதிருந்தால் கடைசியாக பதிவாயிருக்கும் பத்திர தேதியிலிருந்து பத்திரம் எழுதும் தேதி வரை சர்டிபிகேட் வாங்கிக் கொள்வது உசிதம். எழுதும் தேதி வரை பத்திரம் எதுவும் ரிஜிஸ்டராகாதிருந்தால் "இதுவே இந்த சொத்தைப் பற்றிய முதல் பத்திரம்" என்று சொல்லி எழுதிக் கொள்ளவும்.

பத்திரத்தில் கண்ட சொத்தின் கதவு எண், சர்வே எண், செக்பந்தி இவை மாறியிருந்தால் சரியாக தெரிந்து கொண்டு அவை எழுதும்போது உள்ளபடி குறித்துக் கொள்ளவும். பழைய எண்களையும் "பழைய" என்று சொல்லி சேர்த்து எழுதிக் கொள்ளவும்.

பத்திரங்கள் சரியாக இருப்பதாக தோன்றினல் மேற்கொண்டும் எழுதும் தேதிவரை வில்லங்க சர்டிபிகேட் வாங்கி பார்த்து திருப்திகரமாக இருந்தால் பத்திரத்தை எழுதிக் கொள்ளவும்.

கடைசியாக, பத்திரங்களை தேதி வாரியாக வைத்து நெம்பர் கொடுத்து ஜாப்தா தயார் செய்து பத்திரங்களுடன் சேர்த்து வைத்துக் கொள்ளவும்.

# பொருள் அடக்கம்


| விளக்கம் | பக்கம் |
|---|---|
| உதாரணம்-ஆரம்பம் ... ... ... | v |
| உதாரணம்-முடிவு ... ... ... | vi |
| பத்திர பரிசீலனை ... ... ... | viii-ix |


## அத்தியாயம் I


| | |
|---|---|
| சட்டம்—விக்ரயம் ... | 1 |
| உதாரணம் | |
| 1. விக்ரய ஒப்பந்தம் ... ... ... | 1–3 |
| 2. விக்ரயப் பத்திரம் ... ... ... | 3–5 |
| 3. அடிமனை விக்ரயம் ... ... ... | 5–6 |
| 4. அடமானம் பெற்றவரால் விக்ரயம் ... ... | 7 |
| 5. வீடுமனை பாகம் விக்ரயம்... ... ... | 8–9 |
| 6. வீடுகட்டும்மனை விக்ரயம்... ... ... | 9–10 |
| பரிவர்தனை-சொத்து மாற்றம் ... ... | 11 |


## அத்தியாயம் II


| | |
|---|---|
| சட்டம் - அடமானம் ... ... ... | 12 |
| உதாரணம் | |
| 7. ஈடு காட்டி அடமானம் ... ... ... | 12–13 |
| குறிப்பு ... ... ... | 14 |
| 8. மேற் கொண்டு (2வது 3வது) ஈடு ... ... | 14 |
| 9. அடமானம் புதுப்பித்தல் ... ... ... | 15 |
| சட்டம் - நிபந்தனை கிரய அட்மானம் ... ... | 16 |
| ,, சுவாதீன அடமானம் ... ... ... | 16 |
| உதாரணம் | |
| 10. சுவாதீன அடமானம் ... ... ... | 16-17 |
| 11. பத்திர வைப்பு அடமானம் ... ... | 17–18 |
| 12. பண உறுதி சீட்டு ... ... ... | 19 |
| குறிப்பு ... ... ... | 19 |
| 13. பத்திரங்கள் ஜாப்தா ... ... | 19 |
| 14. அடமானத்தை மாற்றுதல் ... ... | 20 |
| 15. கீழ் அடமானம் ... ... ... | 21 |
| 16. மேற்கொண்டுபொறுப்புகொடுத்தல் ... ... | 22 |
| 17. அடமான பாத்யதை விடுதலை ... ... | 22–23 |
| 18. அடமான வட்டி விகிதம் மாற்றுதல் ... ... | 23–24 |
| 19. அடமான தீர்ப்பு குறிப்பு ... ... ... | 24 |

## அத்தியாயம் III


| | | பக்கம் |
|---|---|---|
| சட்டம் - குத்தகை அல்லது வாடகை | ... ... | 25 |
| உதாரணம் | | |
| 20. | வீடுகுடக்கூலி ஒப்பந்தம் ... ... ... | 25–26 |
| 21. | நெல் சாகுபடி ஒப்பந்தம் ... ... | 26–27 |
| 22. | சவுக்கு பயிர் குத்தகை ஒப்பந்தம் ... ... | 28–29 |
| 23. | டிபோ மனைவாடகை ஒப்பந்தம் ... ... | 29–30 |
| 24. | கோழி, கால்நடை பண்ணை ஒப்பந்தம் ... | 31–32 |
| 25. | ஹோடல் குத்தகை ஒப்பந்தம் ... ... | 32–34 |


## அத்தியாயம் IV


| | | |
|---|---|---|
| சட்டம் - செடில் மென்டும் உயிலும்... | ... ... | 35–36 |
| உதாரணம் | | |
| 26. | நிபந்தனையுடன் செடில்மென்டு ... ... | 37–38 |
| 27. | ஆயுள் பாத்யதையுடன் செடில்மென்டு ... | 38 |
| 28. | பல ஆயுள் பாத்யதை பிறகு மாற்றம் ... | 39 |
| 29. | அனுபவிக்கும் பாத்யதை செடில்மென்டு ... | 40 |
| 30. | செடில்மென்டை ரிவோக் செய்தல் ... ... | 40–41 |
| சட்டம் - உயில் | ... | 41 |
| உதாரணம் | | |
| 31. | மகளுக்கும் பேரனுக்கும் கொடுத்தல் ... ... | 41–42 |
| 32. | கடவுளுக்கு கொடுத்தல் ... ... ... | 43 |
| 33. | உயிலில் கார்டியன் நியமித்தல் ... ... | 44–45 |


## அத்தியாயம் V


| | | |
|---|---|---|
| சட்டம் - பொது நலனுக்கில்லாது ஒப்படைப்பு... | ... | 46 |
| உதாரணம் | | |
| 34. | நம்பிக்கை ஒப்படைப்பு ... ... ... | 46–47 |
| சட்டம் - பினுமிதார் மாற்றுதல் | ... ... ... | 47 |
| உதாரணம் | | |
| 35. | பினுமிதார் மாற்றுதல் ... ... ... | 47–48 |
| 36. | ஏலம் எடுத்தவர் மாற்றுதல் ... ... | 48 |
| 37. | டிரஸ்ட் பத்திரப்படி மாற்றுதல் ... ... | 49 |


## அத்தியாயம் VI


| | | |
|---|---|---|
| சட்டம் - ஹிந்து வாரீசு சட்டம் | ... ... ... | 50–52 |
| ,, | முஹம்மதியர் வாரீசு முறை ... ... | 52–57 |
| உதாரணம் | | |
| 38. | பாகப்பிரிவினை பத்திரம் ... ... ... | 57–59 |
| | குறிப்புகள் ... ... ... | 59–60 |

| | | பக்கம் |
|---|---|---|
| 39. | பாக பாத்யதை விடுதலை ... ... ... | 60-61 |
| 40. | கருதப்படும் பாக பாத்யதை ரிலிஸ் ... ... | 61-62 |

## அத்தியாயம் VII

| | | |
|---|---|---|
| சட்டம் - கூட்டு ஒப்பந்தம் ... ... ... | | 63 |
| உதாரணம் | | |
| 41. | கூட்டு ஒப்பந்தம் ... ... ... | 63-66 |
| 42. | கூட்டு கலைத்தல் பத்திரம் ... ... ... | 66-67 |
| சட்டம் - பவர் (அதிகார) பத்திரம் ... ... ... | | 67-68 |
| உதாரணம் | | |
| 43. | பொது அதிகாரம் (பல காரியங்களுக்கு) ... | 68-70 |
| 44. | கடை நடத்த அதிகாரம் ... ... ... | 70-71 |
| 45. | ஒரு காரியம் செய்ய அதிகாரம் ... ... | 71-72 |

## அத்தியாயம் VIII

| | | |
|---|---|---|
| சட்டம் - தத்து எடுப்பு ... ... ... | | 73 |
| உதாரணம் | | |
| 46. | தத்து எடுப்பு பத்திரம் ... ... ... | 74 |
| சட்டம் - ஈஸ்மென்டு பாத்யதை ... ... ... | | 74 |
| 47. | ஒளி, காற்று பற்றிய ஒப்பந்தம் ... ... | 75 |
| சட்டம் - வாடகை - கிரய ஒப்பந்தம் ... ... ... | | 75-76 |
| உதாரணம் | | |
| 48. | வாடகை-கிரய ஒப்பந்தம் ... ... ... | 76-77 |
| சட்டம் - நஷ்டஈடு ... ... ... | | 78 |
| உதாரணம் | | |
| 49. | மைனர் தொகைக்கு இன்டெம்னிடி ... ... | 78 |
| 50. | பத்திரம் காணுமல் போனதற்கு ... ... | 79 |
| 51. | இன்டெம்னிடி ரிலீஸ் ... ... ... | 79-80 |
| 52. | ஆயுள் பாத்யதை ரிலீஸ் (சரண்) ... ... | 80-81 |
| 53. | மேஜரான பிறகு கார்டியன் விடுதலை... ... | 81 |
| 54. | பணி செய்ய ஒப்பந்தம் ... ... ... | 81-82 |

## அத்தியாயம் IX

| | | |
|---|---|---|
| உதாரணம் | | |
| 55. | மேஜரானவர் கிரய உறுதி செய்தல்... ... | 83 |
| 56. | மேஜரான பிறகு கிரய தொகைக்கு ரசீது ... | 83-84 |
| 57. | சொத்தை ஒப்புவித்து கிரய தொகை பெறுதல் ... | 84 |
| 58. | மைனர் கிரயத் தொகையை கட்டிய ரசீது ... | 85 |
| 59. | திருத்தல் பத்திரம் ... ... ... | 85-86 |
| | குறிப்பு ... ... ... | 86 |
| 60. | கிரய ஒப்பந்தம் ரத்து செய்தல் ... ... | 86-87 |

## அனுபந்தம் 1

## முத்திரை கட்டணம் (Stamp Duties)

அனுபந்தம் 6ம் பார்க்கவும்


பக்கம்

சட்டம் - முத்திரை சட்டம் ஷெடியூல் எண்ணும் கட்டண விகிதமும் ... 88

கட்டணம் :—கிரயம், பரிவர்த்தனை, ஈடுகாட்டி அடமானம், மேற்கொண்டு பொறுப்பு, சுவாதீன அடமானம் ... 89

,, —பத்திர வைப்பு அடமானம், விளைச்சல் அடமானம், அடமான சொத்தை திருப்பிக் கொடுப்பது ... 90

,, —பிராமிசரி நோட்டு, பாண்டு செக்யூரிடி பாண்டு ... 91

,, —கடன் ஒப்புதல், குத்தகை, ... 92

,, குத்தகை சரண், தானம், செடில்மென்டு ... 93

,, —செடில்மென்டு ரிவோகேஷன் உயில், டிரஸ்ட், டிரஸ்ட் ரிவோகேஷன், பினாமிதார் மாற்றுதல், டிரஸ்டு சொத்தை உரிமையாளருக்கு மாற்றுதல் ... 94

,, —பாகப்பிரிவினை, பாகவிடுதலை, கூட்டு ஒப்பந்தம், கூட்டு கலைத்தல், அதிகாரப் பத்திரம் ஜெனரல், ஸ்பெஷல் ... 95

,, —அதிகாரப் பத்திரம் மற்றவை, தத்து எடுப்பு, ஈஸ் மென்டு ஒப்பந்தம், குத்தகை கிரய ஒப்பந்தம், ஜீவனாம்சை பத்திரம், பணி செய்ய ஒப்பந்தம் ... 96

,, —இன்டெம்னிடி, ரிலீஸ். ரசீது, திருத்தல், டியூப்ளிகேட், பிரமாண வாக்குமூலம், அவார்டு ... 97

கடன் தீர்ப்பு உடன்பாடு, நகல் ... 98


## அனுபந்தம் 2

## பதிவு கட்டணம் (Registration Fees)


சட்டம் : ரிஜிஸ்டிரேஷன் சட்டம் பிரிவுகள் 99,100

,, —கிரயம், பரிவர்த்தனை, தானம் சுவாதீன அடமானம், பாகப்பிரிவினை, குத்தகை அல்லது வாடகை ... 101

,, —பணி செய்தல், தத்து எடுப்பு, உயில் டிபாசிட் செய்ய, ரிஜிஸ்டரில் எழுத, வாபீசு பெற, அதிகாரம், திருத்தல், மேற்கொண்டு பொறுப்பு ... 102

பக்கம்

கட்டணம் —ரசீது, முத்திரை கட்டணம் இல்லாதது, டியூப்ளிகேட், ஜெனரல் தேடுகை, ஒரு தேடுகை, டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்டிரரரிடம் பதிவு செய்ய 103

,, —மதருஸ் ரிஜிஸ்டிரார் ஆபீசில் பதிவு செய்ய, வீட்டில் பதிவு செய்ய 104

## அனுபந்தம் 3

## விண்ணப்பங்கள்

1. பத்திரத்தை வீட்டில் பதிவு செய்ய மனு ... ... 105

2. முத்திரை கட்டணம் குறைத்ததை குறிக்க மனு-(கிரயம்) 105

3. முத்திரை கட்டணம் குறைக்க மனு (டியூப்ளிகேட்) ... 105

4. கட்டாய ரிஜிஸ்டர் மனு ... ... 106

வில்லங்க சர்டிபிகேட் மனு ... ... 106

நகல் மனு ... ... 107

பட்டா மாற்ற மனு ... ... 107

,, (ஆங்கிலத்தில்) ... ...108-109

## அனுபந்தம் 4

முத்திரை கட்டணம் பற்றிய வாக்குமூலம் ... ... 110

கட்டிடத்தை பற்றிய வாக்குமூலம் ... ...110-111

ஷை ஆங்கிலத்தில் ... ...111-112

வருமான வரி இலாகாவுக்கு வாக்குமூலம் ... ...113-114

## அனுபந்தம் 5

## (வாரீசு சட்டம் ஆங்கிலத்தில்)

ஹிந்து வாரீசு சட்டம் 1956 விதிகள் ... 115-119

முஹம்மதிய வாரீசு முறை 120-123

## அனுபந்தம் 6

முத்திரைக்கட்டணம் மேற்கொண்டு விதிப்பு ... ... 124

# அத்தியாயம்—1

## விக்ரயம்—SALE

**சட்டம் :—**ஒரு சொத்தில் தனக்குள்ள சொந்த பாத்யதையை ஒருவர் மற்றொருவருக்கு விலை பெற்றோ, அதற்கு உறுதி பெற்றோ, கொஞ்சம் விலை பெற்றோ மிகுதிக்கு உறுதிபெற்றோ மாற்றுவது "விக்ரயம்" எனப்படும். விக்ரய ஒப்பந்தம் செய்துகொண்டதால் மட்டும் வாங்குபவருக்கு சொத்தில் உறிமை வராது. அசையா சொத்தை ரூ. 100/-க்கும் அதற்கு அதிகமான விலைக்கும் (ரிஜிஸ்டரான) பதிவான பத்திரம் மூலம்தான் விக்ரயம் செய்ய வேண்டும். ரூ. 100/-க்கு குறைவான விலைக்கு பதிவான பத்திரம் மூலமாகவோ சொத்தை ஒப்புவித்தோ விக்ரயம் செய்யலாம்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 54 படி]

விக்ரயப் பத்திரம் வேறு விதமாக இல்லாவிட்டால் விக்ரயம் செய்பவருடைய எல்லா பாத்யதைகளும், மரம் செடிபோல் பூமியோடு சேர்ந்துள்ளவையும், சுவர், கட்டிடம் போன்ற பதிக்கப் பட்டுள்ளவைகளும், கதவு, ஜென்னல் போல் சாஸ்வதமாய் அனுபவிக்க இணைக்கப்பட்டுள்ளவைகளும், பூட்டு, சாவி, கட்டை முதலியதும், ஈஸ்மென்டு பாத்யதைகளும், விக்ரய தேதி முதல் வரும் வாடகையும் விக்ரயம் பெறுபவருக்கு சேரும்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 8 படி]

ஒருவர் தன் சொத்தை மற்றொருவருக்கு பூரா பாத்யதையுடன் அடையும்படி சொல்லி கொடுத்த பிறகு அந்த சொத்தை மாற்றம் பெற்றவர் அடைந்த பாத்யதையை இன்னது செய்ய வேண்டும் என்றாவது அதை அனுபவிக்க வேண்டியது இந்தவிதமென்றாவது சொல்வது செல்லாது. ஆனால் மாற்றம் கெய்யப்பட்டது சொத்தின் ஒரு பகுதியானால் அதே சொத்தின் மற்றொரு பகுதியை நன்மை பயக்க கூடியபடி தான் அனுபவிப்பதற்கு மாற்றம் செய்த பகுதியை அனுபவிக்க வேண்டிய விதத்தை சொல்லவும், அதன்படி நடக்க செய்யவும், மீறி நடந்தால் தக்க பரிகாரம் கேட்கவும், மாற்றுபவருக்கு பாத்யதை உண்டு.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 11 படி]

சொத்தில் ஒரு பகுதியை மட்டும் விக்ரயம் செய்தால் விக்ரயம் செய்பவரே பத்திரங்கள் எல்லாவற்றையும் வைத்துக்கொள்ள பாத்யதை உண்டு. ஆனால் தேவையானபோது நகல் எடுத்துக்கொள்ளவும், விவரங்கள் குறித்துக் கொள்ளவும் வாங்குபவருக்கு பாத்யதை உண்டு. பூரா சொத்தையும் பல பகுதிகளாக விற்றால் அதிக விலை கொடுத்து வாங்குபவருக்கு பத்திரங்கள் சேரும்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 55 (3) படி]

### உதாரணம் (1) விக்ரய ஒப்பந்தம்

### SALE AGREEMENT

தேதி — இன்னாருக்கு — இன்னார் எழுதிக்கொடுப்பது
[இதைவிஸ்தரித்து எழுத விளக்கம் பார்க்கவும்,]

1. எனக்கு சொந்தமான கீழ் ஷெடியூலில் கண்ட ஊர், தெருவு, கதவு எண்.........உள்ள வீடு மனை [ஜில்லா, தாலுகா

.........கிராமத்தில் உள்ள நஞ்சை புஞ்சை நிலம்] சொத்தை நான் இதனுல் உங்களுக்கு ரூ. /-க்கு வில்லங்க சுத்தி யாய் விக்ரயம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறேன். இதற்கு நீங்களும சம்மதித்து இதில் கையெழுத்து செய்திருக் கிறீர்கள்.

2. இந்த ஒப்பந்தத்திற்கு முன் பணமாக (அச்சாரமாக) ரூ. /-இதில் கையெழுத்து செய்ததும் [இது பதி வாகும் போது உதவி பதிவாளர் முன்னிலையில்] நான் உங்க ளிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

3. இன்று முதல்.......நாளைக்குள் ஷெ சொத்தை சேர்ந்த பத்திரங்களை நான் உங்களுக்கு காண்பித்து என்னுடைய தனிப்பட்ட சொந்த பாத்யதையை உங்களுக்கு நான் நிரூ பிக்க சம்மதிக்கிறேன்........நாளைக்குள் நீங்கள் கேட்கும் வரு ஷங்களுக்கு வில்லங்க சர்டிபிகேட் என் செலவில் வாங்கிக் கொடுத்து வில்லங்கத்தைப் பற்றிய விவரத்தையும் நிரூபிக்க சம்மதிக்கிறேன்.

4. பத்திரங்கள் சரிவர இல்லை என்று உங்களுக்கு தோன்றினுல் நீங்கள் இன்று கொடுத்திருக்கும் முன் பணத்தை (அச்சாரத்தை) வாபீஸ் செய்து விடுகிறேன்.

**5.** பத்திரங்கள் சரிவர இருப்பதாக உங்களுக்கு தோன் றினுல் இன்று முதல்......மாதத்திற்குள் உங்கள் செலவில் நீங்கள் விக்ரயத்தை முடித்துக் கொள்ள வேண்டியது. இந்த தவணை இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நிபந்தனையாகும்.

6. விக்ரயப் பத்திரம் பதிவாகும் (ரிஜிஸ்டராகும்) போது விக்ரயத் தொகையிலிருந்து ஷெ முன் பணம் (அச்சாரம்) அடமான பாக்கி, சொத்துவரி, அர்பன் நிலவரி, அடிநில குடக்கூலீ, மின்சார வசதி இவைகளின் பாக்கி, குடக்கூலிக் காரர்கள் முன்பணம், மைனர் கிரயதார் பாக பிடிபபு, மற்றும் ஷெ சொத்தை சேர்ந்த சகல பாக்கிகளும், பிடிப்புகளும் போக மிகுதி கிரயத்தொகையை உதவி பதிவாளர் (சப் ரிஜிஸ்டிரார்) அவர்கள் முன்னிலையில் நான் உங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுகிறேன்.

7. அதே சமயத்தில் விக்ரய சொத்தை பூராவாய் காலி செய்து (குடக்கூலிக்காரர்களை உங்களுக்கு மாற்றுதல் செய்து கொள்ளும்படி தெரிவித்து) கிரய சொத்தை உங்களி டம் ஒப்புவித்து விடுகிறேன்.

8. கிரயபத்திரத்தை உங்கள் பெயருக்கோ அல்லது நீங்கள் நியமிக்கும் நபர் பெயருக்கோ ரிஜிஸ்டர் செய்து கொடுக்க சம்மதிக்கிறேன்.

9. மேற்கண்டபடி விக்ரயத்தை நீங்கள் முடித்து கொள்ள தவறினுல் இன்று என்னிடம் கொடுத்திருக்கும்

முன் பணத்தை (அச்சாரத்தை) நீங்கள் இழந்துவிட வேண்டியது. நான் மேற்கண்டபடி கிரயத்தை முடித்துக் கொடுக்க தவறினல் நீங்கள் கோர்ட்டு மூலம் விக்ரயம் பெறவும் அல்லது உங்கள் இஷ்டம் போல் முன் பணத்துடன் (அச்சாரத்துடன்) ரூ. /-நஷ்டத்திற்காக சேர்த்து என்னிடமிருந்து நீங்கள் வசூல் செய்து கொள்ளவும் நான் சம்மதிக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த கிரய ஒப்பந்தம்.

### ஷெடியூல் (சொத்து விவரம்)

[இதை எழுத விளக்கம் பார்க்கவும்.]

கிரயம் செய்பவர்.

மேற்கண்டபடி கிரயம் பெற நானும் ஒப்புக் கொண்டேன்.

**சாக்ஷிகள்** கிரயம் பெறுபவர்.

## உதாரணம் (2) விக்ரயப்பத்திரம்

**SALE DEED**

தேதி—இன்னர் இன்னருக்கு—எழுதிகொடுப்பது
[இதை விவரித்து எழுத விளக்கம் பார்க்கவும்]

1. ல் ஏற்பட்ட சப் ரிஜிஸ்டிரார் ஆபீசு தஸ்தாவேஜு எண் விக்ரயப் பத்திரம் [பாகப்பிரிவினே, செட்டில்மெண்டு, உயில்] மூலமாக கீழ் "எ" ஷெடியூலில் கண்ட வீடுமனேயை [மேல் கூரைவீடு, அடி நில லீஸ் ஹோல்டு பாத்யதை கூடிய வீடு மனேயை] [காலி மனேயை] [நஞ்சை புஞ்சை நிலத்தை] நான் அடைந்தது முதல் அது எனக்கு மட்டுமே சொந்தமாய் என் சுவாதீன அனுபோகத்தில் இருந்து வருகிறது.

2. அந்த சொத்தின் பேரில் இப்பொழுதுள்ள அடமானத்தை தீர்க்கவும் [வீடு கட்ட, வியாபார, கலியாண, குடும்ப, செலவுகளுக்காகவும்] மேலே குறிப்பிட்டதும் கீழ் "எ" ஷெடியூலில் விவரமாய் கண்டுள்ளதுமான சொத்தை நான் இதனல் உங்களுக்கு ரூ. /-க்கு சர்வ வில்லங்க சுத்தியாய் விக்ரயம் செய்து கொடுத்திருக்கிறேன். அதற்கு நாம் ஒப்புக்கொண்ட விக்ரயத் தொகையையும் அடியில் கண்ட பணப்பத்து விவரப்படி நான் உங்களிடமிருந்து பூராவாய் பெற்றுக்கொண்டு விட்டேன்.

3. மேற்கண்ட விக்ரய சொத்தை நான் இன்று உங்கள் சுவாதீனமும் செய்து விட்டேன். ஆகையால் இனி நீங்களே அந்த சொத்தை அதைச்சேர்ந்த இரும்பு, மரவகை கூடிய கட்டிடங்களேயும், அவைகளிலும், வெளி வீடு, மோட்டார்

விடுதி இவைகளிலும் உள்ள பதிபொருள்கள் (**fixtures**), இணைபொருள்கள் (**fittings**) உள்படவும், தண்ணீர் குழாய் இணைப்பு, தண்ணீர் இயந்திரம், மின்சார வசதி இயந்திரம், பூமி நீர் சூத்திரம் (**pump**), கிணறு, செப்டிக் கிணறு, ஜல தாரை, த. பா க. (தண்ணீர் பாய்ச்சப்படும் கக்கூஸ் (**F.O.L.**) ஒ. கா. தா. வ. த. பாத்யதைகள் (ஒளி, காற்று, தாங்கு. வழி நடை, தண்ணீர் இவைகளுக்கான வசதிகள்) (**Easements**) மரம் செடிகொடிகள், மதில் சுவர்கள், முள்வேலி, கம்பிவேலி மற்றும் ஷெ சொத்தைச் சேர்ந்த சகல பொருள்களுடனும் உரிமைகளுடனும், வசதிகளுடனும், நீங்களே சர்வ சுதந்திர மாய் எல்லா வகை மாற்றங்களும் செய்ய உரித்ததாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும்.

4. இந்த கிரய சொத்தில் இப்பொழுது என்னைத் தவிர வேறே யாருக்கும் சொந்த பாத்யதை கிடையாதென்றும், அதன்பேரில் இதனுல் தீர்க்கப்படும்............(தேதி)............ அடமானம் தவிர வேறே எவ்வித அடமானமாவது, சார்ஜு, ஜப்தி, கோர்ட்டு ஆர்டர், வழக்கு, வியாஜ்ஜியம், உயில், டிரஸட், ஜீவனும்சை பாத்யதை, மஹர் பாத்யதை, முதலிய எவ்வித வில்லங்கமும் கிடையாதென்றும் உறுதியாய் சொல் லுகிறேன். அப்படி ஏதேனும் ஏற்பட்டால் நானே முன் னின்று என் சொந்த செலவில் அதை தீர்த்துக் கொடுத்தும் அதனுல் உங்களுக்கு உண்டாகும் நஷ்டங்களை கட்டிக் கொடுத்தும் ஈடு செய்ய சம்மதிக்கிறேன். இது தவிர ஷெ நஷ்டங்களை வசூல் செய்து கொள்ள என்னுடைய கீழ் "பி" ஷெடியூலில் கண்ட சொத்தை ரூ. /-க்கு............ வருஷங்களுக்கு நஷ்ட ஈடு பொறுப்பு (இன்டெம்னிடி) ஆக கொடுத்திருக்கிறேன்.

5. இந்த விக்ரய சொத்துக்கு நாளதுவரை செலுத்த வேண்டிய சொத்துவரி பாக்கி, அதற்கான டிகிரி, அர்பன் நிலவரிபாக்கி, கிஸ்த்பாக்கி, அடிமனை குடக்கூலி, மின்சார வசதி பாக்கி, மற்றும் எவ்வித பாக்கிகளும் கிடையாது. அவைகளுக்காக நீங்கள் ஏதாவது கட்ட வேண்டியது ஏற்பட் டால் அதையும் நான் உங்களுக்கு செலவுடன் வட்டி சேர்த்து கட்டிக் கொடுக்க சம்மதிக்கிறேன்.

6. இந்த விக்ரய சொத்தை காலி செய்து [குடக்கூலிக் காரர்களை உங்களுக்கு மாற்றுதல் செய்து கொள்ளும்படி தெரிவித்து] இன்று உங்களிடம் ஒப்புவித்து விட்டேன். இனி நீங்களே அதை எவ்வித ஆக்ஷேபணையுமின்றி அனுப வித்துக் கொள்ளவும். [இன்று முதல்............மாதத்திற்குள் இந்த கிரய சொத்தை நான் காலி செய்து உங்களிடம் ஒப்புவித்து விடுகிறேன். அப்படி ஒப்புவிக்கும்போது அதற் காக விக்ரயத் தொகையிலிருந்து நான் உங்களிடம் நிறுத்தி யிருக்கும் ரூ. /- இதை பெற்றுக் கொள்ளுகிறேன்].

7. [எங்களில்............நபரான மைனரின் விக்ரயத் தொகை பாகம் ரூ. /-இதை நீங்களே நிறுத்திக் கொண்டு அவன் மேஜரானவுடன் அவனிடம் கொடுத்து விடவும். அதுவரை ஷி தொகைக்கு ரூ. 100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. /-ஆக அவன் கார்டியனுன (எங்களில்............நபரிடம்) கொடுத்துக் கொண்டு வரவும். மேஜராவதற்குள் ஷி மைனரின் பேரில் சரியான அசையா சொத்து வாங்க ஏற்பாடு செய்தால் அதற்கு ஷி நிறுத்திய தொகையை நீங்கள் கொடுத்துவிட வேண்டியது.]

8. இந்த விக்ரயத் தொகையிலிருந்து மேற்கண்ட அடமானத்தை தீர்க்க உங்களிடம் நிறுத்தியிருக்கும் தொகையை அடமானம் பெற்றவருக்கு நீங்களே செலுத்தி பத்திரங்களை வாபீஸ் பெற்று இதற்கு ஆதாரமாக எடுத்துக் கொள்ளவும். அப்படி தீர்க்கும் அடமானத்தில் உங்களுக்கு சப்ரொகேஷன் என்கிற "தீர்த்த அடமானத்தை அமுல் செய்" பாத்யதை உண்டு.

9. இந்த விக்ரய சொத்துக்கு உங்கள் பெயருக்கு பட்டா மாற்றிக் கொள்ளவும், கார்பொரேஷனிலும், பஞ்சாயத்து போர்டிலும், மின்சார வசதி போர்டிலும் உங்கள் பெயரை சொந்தக்காரர் என்று பதிவு செய்து கொள்ளவும் நான் தேவையான கையெழுத்து செய்து உங்களுக்கு உதவி செய்ய சம்மதிக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த சுத்த விக்ரயப் பத்திரம்

**பணப்பத்து விவரம்**

............

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

"எ"............"பி"

**சாக்ஷிகள்** விக்ரயம் செய்பவர்.

## உதாரணம் (3) அடிமனை விக்ரயம்

## GROUND SALE TO HOUSE OWNER

தேதி—இன்னார் இன்னாருக்கு—எழுதிக் கொடுப்பது.

1. உங்களுக்கு சொந்தமான—ஜில்லா, தாலூக்கா, ஊர், தெருவு, கதவு எண் உள்ள—மேல் கூரை வீடானது எனக்கு சொந்தமான கீழ் ஷெடியூலில் கண்ட அடிமனையில் இருக்கிறது. அந்த அடிமனைக்கு நீங்கள் இப்பொழுது பிரதி மாதமும் எனக்கு வாடகை செலுத்திக்கொண்டு வருகிறீர்கள்

மதருஸ் நகர குடக்கூலிக்கார பாதுகாப்பு சட்டப்படி என் அடிமனேயை விக்ரயம் பெற உங்களுக்கு பாத்யதை இருக்கிறது.

2. மேற்படி என் அடிமனேயை காலி செய்யும்படி நான் உங்கள் பேரில் தொடர்ந்த மதருஸ் சிடி சிவில் கோர்ட்டு ஒ. எஸ். எண்............வியாஜ்ஜியத்தில் ஷை என் அடி மனேயை மதிப்பிட்டு மனே ஒன்றுக்கு ரூ. /-ஆக அதன் அளவுக்கு கூடுதலாகும் தொகை ரூ. /-இதை நீங்கள் எனக்கு கொடுத்து என் அடி மனேயை விக்ரயம் பெற்றுக் கொள்ளும்படியும் அந்த தொகையை மாதம் ஒன்றுக்கு ரூ. /-ஆக கட்டும்படியும்...........தேதியில் உத்தரவாயிற்று.

3. அதன்படி ஷை கிரயத் தொகை பூராவையும் வட்டி சேர்த்து அடியில் கண்ட பணம் பத்து விவரப்படி நீங்கள் கட்டி நான் பெற்றுக்கொண்டு விட்ட படியால் கீழ் ஷெடியூலில் கண்ட என் அடிமனேயை நான் இதனுல் உங்களுக்கு சர்வ வில்லங்க சுத்தியாய் விக்ரயம் செய்து கொடுத்து விட்டேன். ஆகையால் இன்று முதல் என் குடக்கூலிக்காரராக இல்லாமல் நீங்களே அடி மனேக்கும் சொந்தக்காரராய் அதை எல்லா வகை மாற்றங்களும் செய்ய உருத்ததாய் சர்வ சுதந்திரமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும்.

4. இந்த விக்ரய அடி மனே எனக்கு மட்டுமே சொந்தமான தென்றும், அதன்பேரில் இப்பொழுது எவ்வித அடமானமாவது, சார்ஜ், ஜப்தி, வழக்கு, வியாஜ்ஜியம், உயில், டிரஸ்ட் முதலிய எவ்வித வில்லங்கமும் கிடையாதென்றும் உறுதியாய் சொல்லுகிறேன். அப்படி ஏதேனும் ஏற்பட்டால் நானே முன்னின்று என் சொந்த செலவில் அதை தீர்த்துக் கொடுத்தும் அதனுல் உங்களுக்கு உண்டாகும் நஷ்டங்களே கட்டிக் கொடுத்தும் ஈடு செய்ய சம்மதிக்கிறேன்.

5. இந்த விக்ரய அடிமனேக்கு இப்பொழுது கட்ட வேண்டிய வரி பாக்கிகள் ஒன்றும் கிடையாது. அவைகளுக்காக நீங்கள் ஏதாவது கட்டவேண்டி ஏற்பட்டால் அதையும் நான் உங்களுக்கு கட்டிக் கொடுக்க சம்மதிக்கிறேன்.

6. இந்த விக்ரய அடிமனேக்கு உங்கள் பெயருக்கு பட்டா மாற்றிக் கொள்ளவும் கார்பொரேஷனில் உங்கள் பெயரை சொந்தக்காரர் என்று பதிவு செய்து கொள்ளவும் நான் தேவையான கையெழுத்து செய்து உங்களுக்கு உதவி செய்ய சம்மதிக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த அடி மனே சுத்த விக்ரயப் பத்திரம்.

பணப்பத்து விவரம்

............

ஷெடியூல் (சொத்து விவரம்)

............

சாக்ஷிகள்

விக்ரயம் செய்பவர்

## உதாரணம் (4) அடமானம் பெற்றவரால் விக்ரயம்

## SALE BY MORTGAGEE

தேதி—இன்னுருக்கு இன்னுர்—எழுதிக் கொடுப்பது.

1. ............தேதியில்............சப் ரிஜிஸ்டிரார் ஆபீசு டாகுமென்ட் எண்............மூலமாக கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை [ஜில்லா, தாலூக்கா, ஊர், தெருவு, கதவு எண்............ வீடு மனையை] அதன் சொந்தக்காரரான —(இன்னுர்)—என்னிடம் ஈடு காட்டி அடமானம் வைத்து ரூ............/-கடன் வாங்கினுர். அந்த கடனை ஒப்புக்கொண்ட படி அவர் திருப்பிக் கொடுக்காததால் அவருக்கு நான் சட்டப் படி நோடீஸ் கொடுத்து கடனை கேட்டும் அவர் அதை திருப்பிக் கொடுக்கவில்லை.

2. ஆகையால் மேற்படி அடமான வாசகப்படி அட மான சொத்தை விற்பனை செய்ய எனக்குள்ள அதிகாரத்தை கொண்டு............என்ற ஏல கம்பெனி மூலமாக நான் ஏலம் போட்டதில் நீங்கள் ......... (தேதி).........ல் ரூ. /-க்கு ஏலத்தில் எடுத்து ஏலத்தொகை பூராவையும் ஏல நிபந்தனை படி கட்டிவிட்டீர்கள்.

3. மேற்கண்டபடி பூரா ஏல தொகையும் ஏல கம்பெனி மூலமாக எனக்கு சேர்ந்துவிட்டபடியால் நான் ஏலம் போட்ட கீழ் ஷெடியூலில் கண்ட வீடு மனையை நான் இதனுல் உங்களுக்கு விக்ரயம் செய்து கொடுத்திருக் கிறேன். ஆகையால் நீங்களே மேற்படி சொத்தை உங்கள் சுவாதீனம் செய்து கொண்டு மேற்படி என் அடமான பாத் யதையின்றி ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும். அதைச் சேர்ந்த பத்திரங்களையும் என் அடமானப் பத்திரத்தையும் நான் உங்களிடம் இன்று கொடுத்துவிட்டேன்.

4. என் அடமான பத்திரப்படி அடமான சொத்தை ஏலம் போட எனக்கு அதிகாரம் இருக்கிறது என்றும், சட்டப் படி நோடீஸ் கொடுத்து ஏலம் போட்டிருக்கிறேன் என்றும் உறுதியாய் சொல்லுகிறேன். இந்த உறுதி மொழியில் தவறு தல் இருந்து உங்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால் அதை நான் கட்டிக்கொடுக்க சம்மதிக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் எழுதிக்கொடுத்த விக்ரயப் பத்திரம்.

ஷெடியூல் (சொத்து விவரம்)

சாக்ஷிகள்

விக்ரயம் செய்பவர்.

## உதாரணம் (5) வீடு மனை பாகம் விக்ரயம்

## SALE OF HOUSE AND GROUND PORTION

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது.

1. ......... தேதியில் ஏற்பட்ட............ சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு தஸ்தாவேஜு எண்............மூலமாக—(இன்னர்)—யிடமிருந்து நான் சுத்த விக்ரயம் பெற்று [செடில்மென்டு, பாகப்பிரிவினை, உயில் மூலம் அடைந்து] அது முதல் எனக்கு மட்டுமே சொந்தமாய் என் சுவாதீன அனுபோகத்திலிருக்கும் [ஊர், தெருவு, கதவு எண்.............. உள்ள] வீடு மனையில் கீழ் ஷெடியூலில் கண்ட பின்பாகத்தை மட்டும் தெருவுக்குப் போகும் சந்து வழியுடன் அதன் பேரில் உள்ள அடமானத்தைத் தீர்ப்பதற்கு நான் உங்களுக்கு ரூ. /-க்கு சுத்த விக்ரயம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டேன்.

2. அதை அனுசரித்து அடியில் கண்ட பணப் பத்து விவரப்படி நான் உங்களிடமிருந்து ஷை கிரயத்தொகை ரூ. /- பூராவாய் பெற்றுக்கொண்டு கீழ் ஷெடியூலில் கண்டுள்ளதும் இத்துடன் இணைத்திருக்கும் பிளானில்......... நிறத்தில் காண்பிக்கப்பட்டிருப்பதுமான ஷை வீடு மனையின் பாகத்தை தெருவுக்குப் போகும் சந்து வழியுடன் நான் இதனல் உங்களுக்கு சர்வ வில்லங்க சுத்தியாய் விக்ரயம் செய்து கொடுத்திருக்கிறேன்.

3. மேற்கண்டபடி நான் விக்ரயம் செய்திருக்கும் வீடு மனை பாகத்தை அதைச் சேர்ந்த சந்து வழியுடன் இன்று உங்கள் சுவாதீனம் செய்து விட்டேனுகையால் இனி நீங்களே அதை அதிலுள்ள பதிபொருள்கள், இணை பொருள் கள், ஈஸமென்டு பாத்யதைகள் மற்றம் ஷை சொத்தை சேர்ந்த சகல உறிமைகளுடனும் வசதிகளுடனும் சர்வ சுதந்திரமாய் எல்லா வகை மாற்றங்களும் செய்ய உறித்தாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும்.

4. நான் கிரயம் செய்யாத என் முன் பாகத்தில் இப்பொழுது தண்ணீர் குழாயும், மின்சார வசதி மீடரும், த. பா. க வும் தெருவுக்குப் போகும் சாக்கடையும் இருக்கிறது. இன்று முதல் ........... மாதம்வரை நீங்கள் அவைகளை உபயோகித்துக் கொள்ள நான் சம்மதித்திருக்கிறேன். அதற்குள் உங்கள் பாகத்தில் அவைகளை நீங்கள் தனியாக போடடுக் கொள்ள வேண்டியது. கிரய பாகத்தை பிரிக்கும் சந்து சுவரை நான் அதில் ஒரு வழி மட்டும் வைத்து இப்பொழுதே எழுப்பிக் கொள்ளக் கடவேன். அப்படி நான் எழுப்பும் சுவர் எனக்கு சொந்தமாகும். ஷை அனுமதி தவணை முடிந்ததும் என் முன் பாகத்தில் உள்ள குழாயிக்கும்

மின்சாரவசதி அளவு பார்க்கவும் த. பா. க வுக்கும், நீங்கள் வராதபடி ஷ சந்து சுவர் வழியையும், என் பாகம்வரும் சாக்கடையையும் நான் அடைத்து விட எனக்கு பாத்யதை உண்டு.

5. இந்த விக்ரய சொத்துக்கு நாளது வரை செலுத்த வேண்டிய சொத்து வரி, அர்பன் நிலவரி முதலிய பாக்கிகள் ஒன்றும் கிடையாது. அவைகளுக்காக நீங்கள் ஏதாவது கட்டவேண்டி எற்பட்டால் அதையும் நான் உங்களுக்கு கட்டிக் கொடுக்க சம்மதிக்கிறேன்.

6. விக்ரயத் தொகையிலிருந்து............(தேதி)......... அடமானத்தை தீர்க்க உங்களிடம் நிறுத்தியிருக்கும் தொகையை அடமானம் பெற்றவருக்கு செலுத்தி "அடமான தீர்ப்பு குறிப்பு" ரிஜிஸ்டர் செய்து கொண்டு பத்திரங்களை வாபீசு பெற்று அடமான பத்திரத்தை மட்டும் நீங்கள் எடுத்துக் கொண்டு மற்ற பத்திரங்களை என்னிடம் கொடுத்து விட வேண்டியது, அந்த அடமானத்தில் உங்களுக்கு சப்ரோகேஷன் என்கிற "தீர்த்த அடமானத்தை அமுல் செய் பாத்யதை" உண்டு.

7. உதாரணம் (2) 5ல் உள்ளபடி.

8. நீங்கள் இதனல் கிரயம் பெற்றிருக்கும் வீடு மனை பாகத்திற்கு தனி கதவு எண்ணும், உங்கள் பெயரில் பட்டா வும் பெறுவதற்கு நான் தேவையான கையெழுத்து செய்து உங்களுக்கு உதவி செய்ய சம்மதிக்கிறேன்.

இந்தப் படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த வீடு மனை பாகம் விக்ரயப் பத்திரம்.

**பணப்பத்து விவரம்**

............

**ஷெடியூல் (சொத்துவிவரம்)**

............

சாக்ஷிகள்.

கிரயம் செய்பவர்.

## உதாரணம் (6) வீடு கட்டும் மனை விக்ரயம்

## SALE DEED OF LAY-OUT PLOT

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது.

1. மதரும் விஸ்தரித்த எல்லை.........தாலூக்கா......... கிராமத்தில் எனக்கு சொந்தமாய் இருக்கும் புஞ்சை நிலம் மொத்தம்... ......ஏகர் உள்ளதை வீடு கட்டும் மனைகளாக விற்பனை செய்ய—(இன்னர்)—க்கு ரூ. /-க்கு கிரயம் செய்து கொடுக்க ஒப்பந்தம் செய்திருக்கிறேன். அந்த ஒப்பந்தப்படி அவர் ஷ நிலத்தை 1 மனை முதல் 2 மனை வரை

பிளாட்டுகளாக பிரித்து லே அவுட் அனுமதி பெற்ற பிறகு மனை 1க்கு ரூ. /- ஆக அவர் நியமிக்கும் நபருக்கு நான் கிரயம் செய்து கொடுக்க ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

2. அவர் இப்பொழுது ஷை நிலத்தை பிளாட்டுகளாக பிரித்து அதற்கு............எண் லே அவுட் அனுமதி பெற்று அதில் அடங்கிய கீழ் ஷெடியூலில் கண்ட பிளாட் எண்...........உள்ள காலி மனையை அதன் அளவுபடி ரூ. /-க்கு உங்களுக்கு விக்ரயம் செய்து கொடுக்கும்படி என்னை கேட்டுக் கொண்டிருக்கிறார்.

3. அதன்படி நான் உங்களிடமிருந்து ரூ. /- பூராவாய் அடியில் கண்ட பணப்பத்து விவரப்படி பெற்றுக் கொண்டு கீழ் ஷெடியூலில் கண்ட பிளாட்............ எண் உள்ள காலி மனையை நான் இதனால் உங்களுக்கு சுத்த கிரயம் செய்து அதை இன்று உங்கள் சுவாதீனம் செய்து விட்டேன். ஆகையால இன்று முதல் ஷை வீடு கட்டும் காலி மனையை அதைச் சேர்ந்த ஈஸமென்ட் பாத்யதையுடனும் மற்றுமுள்ள வசதிகளுடனும் நீங்களே சர்வ சுதந்திரமாய் எல்லா வகை மாற்றங்களும் செய்ய உறித்தாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும்.

4. இந்த கிரய மனையின் பேரில் இப்பொழுது எவ்வித அடமானமாவது, சார்ஜு, ஜப்தி, கோர்டு ஆர்டர், வழக்கு, வியாஜ்ஜியம், உயில், டிரஸ்ட் முதலிய எவ்வித வில்லங்கமும் கிடையா தென்றும் உறுதியாய் சொல்லுகிறேன். அப்படி ஏதேனும் ஏற்பட்டால் நானே அதை தீர்த்துக் கொடுத்தும் அதனால் உங்களுக்கு உண்டாகும் நஷ்டங்களை கட்டிக் கொடுத்தும் ஈடுசெய்ய சம்மதிக்கிறேன்.

5. இந்த கிரயமனைக்கு ரோடு, விளக்கு, மற்றும் தேவையான வசதிகளுக்கும் விதிக்கப்படும் "பெடர்மென்ட் சார்ஜ்" என்பதை நீங்களே கட்டிக் கொள்ள வேண்டியது.

6. இந்த மனையை சேர்ந்த பத்திரங்கள் (இன்னார்)யிடம் இருக்கிறது. அவைகளின் நகல்களை மட்டும் உங்களிடம் கொடுத்திருக்கிறேன். ஷை அசல் பத்திரங்களை தேவையான போது உங்களுக்கு பார்க்க ஏற்பாடு செய்ய சம்மதிக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் எழுதிக் கொடுத்த வீடு கட்டும் மனை — பிளாட் — விக்ரயப் பத்திரம்.

**பணப்பத்து விவரம்**

............

**(ஷெடியூல்) சொத்து விவரம்**

............

இத்துடன் இணைத்திருக்கும் பிளானில் இதனால் கிரயம் செய்யப்பட்ட பிளாட் ............ நிறத்தில் காண்பிக்கப்பட்டிருக்கிறது.

**சாக்ஷிகள்.**

கிரயம் செய்பவர்.

# பரிவர்த்தனை-சொத்து மாற்றம்

## EXCHANGE

**சட்டம் :**—ஒருவர் தன் சொந்த சொத்தை மற்றொருவருக்கு கொடுத்து அதற்கு பதிலாக அந்த மற்ற வருடைய சொத்தை தான் பெற்றுக்கொள்வது "பரிவர்த்தனை" எனப்படும். அப்படி மாற்றப்படும் சொத்துக்கள் இரண்டும் பணமாகவோ அவைகளில் ஒன்று பூராவாய் பணமாகவோ இருக்கக் கூடாது. ஒரு சொத்தின் விலை அதிகமாகவும் மற்றொன்றின் விலை குறைவாகவும் இருந்தால் ஒருவர் சொத்தும் மற்றொருவர் சொத்தும் பணமும் கொடுக்க வேண்டியதாகும்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 118 படி]

பரிவர்த்தனையில் இருபார்டிகளும் ஒருவருக் கொருவர் சொத்தை மாற்றிக் கொள்வதால் அவர்களை "உங்களுக்கு" "நான்" என்று குறிக்காமல்" "1வது நபர்" "2வது நபர்" என்று குறிப்பிட்டு திருத்தி எழுதிக்கொள்ளவும் இரு பார்டிகளும் கையெழுத்து செய்து ரிஜிஸ்டர் செய்யவேண்டும்.

# அத்தியாயம்—2

## அடமானம்—MORTGAGE

**சட்டம் :**—ஒருவர் தன் அசையா சொத்தை பொறுப்பு கொடுத்து கடன் வாங்குவது "அடமானம்" எனப்படும்.

ஒரு அசையா சொத்தை கடன் கொடுப்பவருக்கு சுவாதீனம் செய்யாமல் அதன் பொறுப்பின் பேரில் கடன் வாங்குவது "ஈடுகாட்டி அடமானம்." இந்த கடனை ஒப்புக் கொண்டபடி திருப்பிக் கொடுக்காவிட்டால் சொத்து மாற்று சட்டம் 69, 69-எ பிரிவுகள்படி கோர்டுக்குப் போகாமலே அடமான சொத்தை கடன் கொடுத்தவரே விற்றோ அதற்கு ரிசீவர் நியமித்தோ கடனை வசூல் செய்து கொள்ளலாம். ஆனால் இந்த அதிகாரம் அடமானப் பத்திரத்தில் கண்டிருக்கவேண்டும். தவிர அடமான சொத்து மதருஸ் டவுனிலோ அல்லது அரசாங்கம் குறிக்கும் இடத்திலோ இருக்கவேண்டும்.

அடமானத் தொகை ரூ 100/- அல்லது அதற்கு அதிகமாக இருந்தால் 2 சாக்ஷிகள் அத்தாக்ஷி செய்த பதிவான பத்திர மூலம் அடமானம் செய்ய வேண்டும். ரூ 100/-க்கு குறைவானல் பதிவு செய்த பத்திர மூலமாகவோ அல்லது ஈடு தவிர மற்றவைகளில் சொத்தை ஒப்படைத்தோ செய்யலாம்.

[சொத்து மாற்றுசட்டம் 58, 59, 69, 69-எ பிரிவு படி]

**உதாரணம் (7)** ஈடுகாட்டி அடமானம்

### SIMPLE MORTGAGE DEED

தேதி — இன்னருக்கு இன்னர் — எழுதிக் கொடுப்பது (இதை விவரித்து எழுத விளக்கம் பார்க்கவும்)

**1.** உதாரணம் (2) 1-ல் உள்ளபடி

2. ஷை சொத்தை — (காரணம்) — க்காக நான் இதனல் உங்களிடம் ஈடுகாட்டி அடமானம் வைத்து வாங்கிக் கொண்ட கடன் ரூ. /- இதை (அடியில் கண்ட பணப் பத்து விவரப்படி) [பூராவாய் உதவி பதிவாளர் முன்னிலையில்] நான் உங்களிடமிருந்து பெற்றுக் கொண்டேனகையால் இதற்கு ரூ, 100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. /- ஆக கூடிய அசலும் வட்டியும் உங்களுக்கு (வேண்டும்போது) [இன்று முதல் ......... வருஷத்திற்குள்] கீழ் கண்டபடி நான் திருப்பிக் கொடுத்து இந்த அடமானத்தை மீட்டுக் கொள்ளுகிறேன்.

3. அப்படி மீட்டுக் கொள்ளும் வரையில் இந்த அடமான அசல் தொகைக்கு ஏற்படும் பிரதி இங்கிளீஸ் மாத வட்டியை அதற்கு அடுத்த மாதம் ............ தேதிக்குள் உங்களிடம் தவருமல் செலுத்திக் கொண்டு வருகிறேன். அப்படி செலுத்த தவறினல் பாக்கி நிற்கும் வட்டிக்கு ரூ. 100/-க்கு மாதம் ஒன்றுக்கு தொடர் வட்டி அதே ரூ. /- ஆக சேர்த்துக் கொடுக்க சம்மதிக்கிறேன்.

4. இந்த அடமான அசல் தொகையை பாக்கியிருக்கும் வட்டியுடன் [இன்று முதல் ......... வருஷத்திற்குள் அல்லது அதற்கு முந்தியே ............ மாத வட்டி பாக்கி ஏற்பட்டு] நீங்கள் கேழ்கும்போது நான் திருப்பிக் கொடுக்க தவறினல் கீழ் ஷெடியூலில் கண்ட அடமான சொத்தை நீங்களே சொத்து மாற்று சட்டம் 69 பிரிவின்படி பகிரங்க ஏலத் திலாவது அல்லது பேரம் பேசிய விலைக்காவது விற்பனை செய்து விற்றுவரும் தொகையிலிருந்து இதில் உங்களுக்கு சேரவேண்டிய பாக்கிகளை ஏல சிலவுடனும் நோடீஸ் சார்ஜு டனும் எடுத்துக் கொள்ளவும். விற்று வரும் தொகை உங்களுக்கு சேரவேண்டிய தொகைகளுக்கு குறைவு பட்டால் அப்படி குறைவுபடும் தொகையை என்னுலும் என் இதர சொத்துக்களாலும் தொடர்ந்து வசூல் செய்து கொள்ளவும்.

5. இது தவிற இந்த அடமானத்தில் உங்களுக்கு சேர வேண்டிய பாக்கிகளை சொத்து மாற்று சட்டம் 69-எ பிரிவின் படி அடமான சொத்துக்கு ரிசீவர் நியமித்தாவது அல்லது ஷ தொகைகளுக்கு உங்கள் இஷ்டம்போல் தாவா செய்தா வது சிலவுடன் நீங்கள் என்னிடமிருந்து வசூல் செய்து கொள்ளவும் நான் சம்மதிக்கிறேன்.

6. இந்த அடமான சொத்தில் என்னைத் தவிர வேறே யாருக்கும் சொந்த பாத்யதை இல்லை என்றும், அதன் பேரில் [—(தேதி)—அடமானம் தவிற வேறே] எவ்வித அடமான மாவது, சார்ஜு, ஜப்தி, கோர்டு ஆர்டர், வழக்கு, வியாஜ் ஜியம், உயில், டிரஸ்ட் முதலிய எவ்வித வில்லங்கமும் இப் பொழுது கிடையா தென்றும் உறுதியாய் சொல்லுகிறேன்: அப்படி ஏதேனும் ஏற்பட்டால் நானே முன்னின்று என் சொந்த சிலவில் அதை தீர்த்துக் கொடுத்தும் அதனுல் உங்களுக்கு உண்டாகும் நஷ்டங்களை கட்டிக் கொடுத்தும் ஈடுசெய்ய சம்மதிக்கிறேன்.

7. இந்த அடமான சொத்துக்கு நான் வரிகள் கட்ட தவறி நீங்கள் அவைகளை கட்டியிருந்தால் அவைகளையும் அடமான பாக்கியுடன் வட்டி சேர்த்து கொடுக்க சம்மதிக் கிறேன்.

8. [இந்த அடமானத் தொகையிலிருந்து எனக்காக (தேதி.........) அடமானத்தை தீர்க்க உங்களிடம் நிறுத்தி யிருக்கும் தொகையை செலுத்தி பத்திரங்களை வாபீசு பெற்று உங்களிடம் — வைத்திருந்து இதை நான் தீர்த்ததும் என்னிடம் கொடுத்து விடவும்.]

9. [நீங்கள் எனக்காக இதனுல் பூராவாய் தீர்த்த (தேதி) அடமானத்தில் உங்களுக்கு "சப்ரொகேஷன்" என்கிற "தீர்த்த அடமானத்தை அமுல் செய்பாத்யதை" உண்டு,]

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த ஈடு காட்டி அடமான கடன் பத்திரம்,

பணப்பத்து விவரம்

............

ஷெடியூல் (சொத்து விவரம்)

............

சாக்ஷிகள்,

அடமானம் செய்பவர்

குறிப்பு (i) **EITHER OR SURVIVOR**— அடமானம் பெறுபவர்கள் இரண்டு நபர்களாக இருந்தால் வேண்டுமானுல் "உங்களுக்காவது, உங்களில் யாருக்காவது அல்லது எஞ்சினருக்காவது" என்று பண உறுதிவரும் இடங்களில் சேர்த்துக் கொள்ளவும்.

(ii) **MORTGAGOR AND SURETY** — அடமானம் வைப்பவருடன் ஜாமீன்தார் சேர்ந்தால் "எங்களில் 1வது நபர் அடமானம் செய்பவராகவும் அதற்கு எங்களில் 2வது நபர் பிணையாளாகவும் [ஜாமீன்தாரராகவும்] என்றுசொல்லிசேர்த்துக் கொள்ளவும்.

**உதாரணம்** (8)—மேற்கொண்டு ஈடு (2வது, 3வது,)—

**FURTHER CHARGE [2nd, 3rd]**

—தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. உதாரணம் 2 (1) ல் உள்ளபடி

2. ஷெ சொத்தை —(தேதி) —யில் ............ சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு தஸ்தாவேஜு எண் ............ மூலமாக ஏற்கெனவே நான் உங்களிடம் (இன்னரிடம்) ஈடு காட்டி அடமானம் வைத்து ரூ. /- கடன் வாங்கியிருக்கிறேன். இந்தக் கடன் திருப்பிக் கொடுக்கப்படாமல் பாக்கி நிற்க—(காரணம்)—க்காக ஷெ சொத்தை நான் இதனுல் உங்களிடம் மேற்கொண்டும் (இத்தனையாவது) அடமானமாக வைத்து ரூ. /- அடியில் கண்ட பணப்பத்து விவரப்படி (இந்தப் பத்திரம் ரிஜிஸ்டராகும்போது உதவி பதிவாளர் முன்னிலையில்) நான் உங்களிடமிருந்து பெற்றுக் கொண்டிருக்கிறேன். இதற்கு ரூ. 100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. /- ஆக கூடிய அசலும் வட்டியும் உங்களுக்கு வேண்டும்போது (இன்று முதல் ............ வருஷத்திற்குள்) கீழ்கண்டபடி திருப்பிக் கொடுத்து இந்த அடமானத்தை மீட்டுக் கொள்ளுகிறேன்.

3. உதாரணம் (7) 3ல் உள்ளபடி

4. உதாரணம் (7) 4ல் உள்ளபடி

5. உதாரணம் (7) 5ல் உள்ளபடி

6. உதாரணம் (7) 6ல் உள்ளபடி

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த மேற்கொண்டு [2வது, 3வது] ஈடு அடமானக் கடன் பத்திரம்.

**பணப்பத்து விவரம்**

............

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

அடமானம் செய்பவர்.

## உதாரணம் (9)—அடமானம் புதுப்பித்தல்

## (MORTGAGE RENEWAL)

—தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது.

1. உதாரணம் 2 (1)ல் உள்ளபடி

2. மேற்படி சொத்தை—(தேதி)—யில் சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு தஸ்தாவேஜு எண்.........மூலமாக நான் உங்களிடம் ஈடுகாட்டி அடமானம் வைத்து ரூ. /-கடன் வாங்கியிருக்கிறேன். இந்தக் கடனை நான் ஒப்புக்கொண்டபடி இப்பொழுது திருப்பிக் கொடுக்க முடியாமல் இருந்து வருகிறது. இதை நான் உங்களுக்கு தெரிவித்ததும் அடமானப் பத்திரத்தை புதுப்பித்துக் கொடுக்கும்படி நீங்கள் கேட்டீர்கள். அதன்படி செய்ய நானும் ஒப்புக் கொண்டேன். —மேற்படி அடமானத்தில் நான் உங்களுக்கு செலுத்த வேண்டிய கடன் ரூ. /- இதற்கு ரூ. 100/-க்கு மாதம ஒன்றுக்கு வட்டி ரூ. /- ஆக கூடுதலாகும் அசலும் வட்டியும் உங்களுக்கு வேண்டும்போது (இன்று முதல்.........வருஷத்திற்குள்) கீழ்கண்டபடி நான் திருப்பிக்கொடுத்து இந்த அடமானத்தை மீட்டுக் கொள்ளுகிறேன்.

3. உதாரணம் (7) 3ல் உள்ளபடி

4. உதாரணம் (7) 4ல் உள்ளபடி

5. உதாரணம் (7) 5ல் உள்ளபடி

6. உதாரணம் (7) 6ல் உள்ளபடி

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த புதுப்பித்த ஈடு காட்டி அடமானப் பத்திரம்.

**பணப்பத்து விவரம்**

............

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

அடமானம் செய்பவர்

# நிபந்தனை கிரய அடமானம்

## MORTGAGE BY CONDITIONAL SALE

**சட்டம் :**—அடமானம் செய்பவர் சொத்தை வெளிப்படையாக கிரயம் செய்து குறித்த தேதியில் விலையை திருப்பிக்கொடுத்து விட்டால் கிரயம் செல்லாது என்றுவது, திருப்பிக் கொடுக்காவிட்டால் கிரயம் ஊர்ஜிதமாகி விடும் என்றுவது, திருப்பிக் கொடுத்து விட்டால் கிரயம் பெற்றவர் மறு கிரயம் செய்ய வேண்டுமென்றுவது எழுதிக்கொள்வது நிபந்தனை கிரய அடமானம். இப்படி எழுதப்படும் கிரயப் பத்திரத்தில் ஷ நிபந்தனை இருந்தால் அது அடமானம் என்றே கருதப்படும்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 58 (சி) படி]

# சுவாதீன அடமானம்

## USUFRUCTARY MORTGAGE

**சட்டம் :**—கடன் வாங்குபவர் கடன் கொடுப்பவருக்கு தன் சொத்தை ஒப்புவித்து கடனை திருப்பிக்கொடுக்கும் வரை அதில் வரும் வாடகைகளையும் பலனையும் வட்டிக்கு ஈடாகவோ ஒரு பகுதி வட்டிக்கும் மிகுதியை அசலுக்கும் அல்லது அசலுக்கு மட்டுமோ வரவு வைத்துக் கொள்ள வேண்டும் என்று ஒப்பந்தம் செய்வது சுவாதீன அடமானமாகும்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 58 (டி) படி]

### உதாரணம் (10) சுவாதீன அடமானம்

### USUFRUCTARY MORTGAGE DEED

தேதி—இன்னருக்கு—இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. உதாரணம் 2 (1)ல் உள்ளபடி

2. மேற்படி சொத்தை நான் இதனல் உங்களிடம் சுவாதீன அடமானமாக ஒப்புவித்து—(காரணம்)—க்காக நான் உங்களிடமிருந்து அடியில் கண்ட பணப்பத்து விவரப் படி ரூ. /- கடனுக பெற்றுக் கொண்டிருக்கிறேன்.

3. [மேற்படி கடனுக்கு வட்டி இல்லாமலும் மேற்படி சொத்துககு வாடகை யில்லாமலும நீங்களே மேற்படி சொத்தை ஆண்டு அனுபவித்துக் கொண்டு வரவும். நானுகவே எப்பொழுது இந்த கடனை திருப்பிக் கொடுககிறேனே அப்பொழுது நீங்கள் மேற்படி சொத்தை என்னிடம் திருப்பிக் கொடுத்து என் மறு சுவாதீனம் செய்து விட வேண்டியது.]

[இந்த கடனை நீங்கள் கேட்கும் போது (இன்று முதல் .........வருஷத்திற்குள்] வட்டி இல்லாமல் திருப்பிக் கொடுத்து நான் இதை மீட்டுக்கொண்டு அடமான சொத்தை என் மறு சுவாதீனம் செய்து கொள்ளுகிறேன்]

[இந்த கடனுக்கு ரூ. 100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. /-ஆக செலுத்த ஒப்புக் கொண்டிருக்கிறேன். அடமான சொத்தின் வாடகை வருமானம் வட்டியை விட அதிக

மானால் அதை அசல் கடனுக்கு நீங்கள் வரவு வைத்துக் கொள்ள வேண்டியது. வாடகை வருமானம் குறைவானால் பாக்கி ஏற்படும் வட்டியை அசலுடன் சேர்த்துக் கொடுக்க சம்மதிக்கிறேன். இந்த கடனை மேற்கண்டபடி நீங்கள் கேட்கும் போது (இன்று முதல்.........வருஷத்திற்குள்) நான் திருப்பிக் கொடுக்க தவறினால் கீழ் ஷெடியூலில் கண்ட அடமான சொத்தை நீங்களே சொத்து மாற்று சட்டம் 69 வது பிரிவின்படி பகிரங்க ஏலாத்திலாவது, பேரம் பேசிய விலைக்காவது விற்பனை செய்து இதில் உங்களுக்கு சேர வேண்டிய பாக்கியை ஏல செலவுடனும் நோட்டீஸ் சார்ஜுடனும். விற்றுவரும் தொகையிலிருந்து வசூல் செய்து கொள்ளவும். அப்படி ஏலம் போடுவதானாலும் அடமான பாக்கிக்கு தாவாசெய்வ—தானாலும் அதற்கு முந்தியே அடமான சொத்தை ரிஜிஸ்டர் பத்திர மூலம் என்னிடம் மறு சுவாதீனம் கொடுத்து விடவேண்டியது, நானாகவே கடனை திருப்பிக் கொடுக்கும் போதும் அதேபோல் செய்ய வேண்டியது.

4. உதாரணம் (7) லே் உள்ளபடி

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த சுவாதீன அடமானக் கடன் பத்திரம்.

**பணப்பத்து விவரம்**

............

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

அடமானம் செய்பவர்

**குறிப்பு:**—மேற்படி உதாரணத்தில் 3வது பாராவில் முதலில் சொல்லியபடி செய்வது மட்டுமே "தூய சுவாதீன அடமானம்" மற்றவை "சுவாதீன கலப்பட அடமானம்"

# பத்திரவைப்பு அடமானம்

## TITLE DEEDS DEPOSIT MORTGAGE

**சட்டம்:**—கடன் வாங்குபவர் தன் அசையா சொத்தைச் சேர்ந்த உரிமை காட்டும் பத்திரங்களை அந்த சொத்தின் பேரில் பொறுப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடன் மதராஸ் டவுனிலோ, அல்லது அரசாங்கம் குறிக்கும் எந்த இடத்திலோ (1970ல் காஞ்சீபுரம், தர்மபுரி குறிக்கப்பட்டுள்ளது) கடன் கொடுத்தவரிடம் ஒப்புவிப்பது "பத்திரவைப்பு அடமானம்" எனப்படும்.

## உதாரணம் (11) — பத்திரவைப்பு (பதிவு செய்ய)

**TITLE DEEDS DEPOSIT (For Registration)**

......... வருஷம் ......... மாதம் ......... தேதி ......... ல் இருக்கும் (இன்னர்) குமாரர்/பாரியாள் (இன்னர்) என்கிற உங்களுக்கு............ல் இருக்கும் (இன்னர்) குமாரர்/பாரியாள் (இன்னர்) ஆகிய நான் எழுதிக்கொடுத்த பத்திர வைப்பு அடமானமாவது என்னவென்ருல்—நான்—(காரணம்) —காக இன்று ரூ. /- உங்களிடமிருந்து கடன் பெற்றுக் கொண்டிருக்கிறேன். அதற்கு எனக்கு சொந்தமான கீழ் "எ" ஷெடியூலில் கண்ட சொத்தின் பேரில் பொறுப்பு ஏற்படுத்தும் நோக்கத்துடன் அதைச் சேர்ந்த கீழ் "பி" ஷெடியூலில் கண்ட பத்திரங்களை உங்களிடம் ஒப்புவித்து (டிபாசிட் செய்து) இருக்கிறேன். மேற்படி கடனுக்கு ரூ 100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. /- ஆக பிரதி இங்கிலீஷ் மாத வட்டியை அதற்கு அடுத்த மாதம்......... தேதிக்குள் உங்களிடம் செலுத்திக் கொண்டு வந்து அசல் கடனை பாக்கியிருக்கும் வட்டியுடன் நீங்கள் கேட்கும்போது (இன்று முதல்.........வருஷத்திற்குள்) உங்களிடம் திருப்பிக் கொடுத்துவிட சம்மதிக்கிறேன்.

2. மேற்படி பத்திரங்களில் கண்டதும் கீழ் "எ" ஷெடியூலில் குறிப்பிட்டதுமான சொத்து எனக்கு மட்டுமே சொந்தமானதென்றும், அதன்பேரில் இப்பொழுது எவ்வித வில்லங்கமும் கிடையாதென்றும் உறுதியாய் சொல்லுகிறேன். அப்படி ஏதாவது இருந்து உங்களுக்கு நஷ்டம் உண்டானல் அதை நான் உங்களுக்கு கட்டிக்கொடுக்க சம்மதிக்கிறேன்.

3. இந்த கடனை நான் தீர்த்ததும் மேற் கண்டபடி நான் டிபாசிட் செய்திருக்கும் பத்திரங்களை நீங்கள் என்னிடம் திருப்பிக் கொடுத்து விடவேண்டியது.

4. இந்த டிபாசிட் அடமானம்............டவுனில் செய்யப்பட்டது.

இந்தப்படிக்கு நான் எழுதிக்கொடுத்த பத்திர வைப்பு அடமானம்.

**"எ" ஷெடியூல் (சொத்துவிவரம்)**

............

**"பி" ஷெடியூல் (பத்திரங்களின் விவரம்)**

| வரிசை எண் | தேதி | இன்னர் இன்னருக்கு எழுதி கொடுத்தது | பத்திர இயல்பு | பதிவு எண் |
|---|---|---|---|---|
| ...... | ...... | ...... | ...... | ...... |

**சாக்ஷிகள்,** டிபாசிட் செய்பவர்.

## உதாரணம் (12) பண உறுதி சீட்டு
## PROMISSORY NOTE

............வருஷம்..........மாதம்..........தேதி......... ல் இருக்கும் (இன்னார்) குமாரர்—பாரியாள் (இன்னார்) என்கிற உங்களுக்கு............ல் இருக்கும் (இன்னார்) குமாரர்—பாரியாள் (இன்னார்) ஆகிய நான் எழுதிக்கொடுத்த பண உறுதி சீட்டு (பிராமிசரி நோட்டு) என்னவென்றால் :—என் (காரணம்) சில விற்காக நான் இதில் கையெழுத்து செய்து உங்களிடம் கொடுத்து ரூ. /- உங்களிடமிருந்து கடன் வாங்கிக் கொண்டிருக்கிற படியால் அதற்கு ரூ. 100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. /-ஆக கூடிய அசலும் வட்டியும் உங்களுக்கு வேண்டும் போது உங்களுக்காவது உங்கள் உத்தரவு பெற்றவர்களுக்காவது நான் கொடுக்க சம்மதிக்கிறேன்.

இப்படிக்கு

**சாக்ஷிகள்.**

கடன்பெற்றவர்

குறிப்பு :—**JOINTLY AND SEVERALLY**—எழுதிக்கொடுப்பவர் ஒருவருக்கு மேல் இருந்தால் வேண்டுமானால் “நாங்கள் சேர்ந்தும் தனித்தனியாகவும் கொடுக்க சம்மதிக்கிறோம்” என்று மாற்றிக் கொள்ளவும்.

## உதாரணம் (13)—பத்திரங்களின் ஜாப்தா
## LIST OF TITLE DEEDS

.........வருஷம்.........மாதம்.........தேதி.........ல் இருக்கும் (இன்னார்) குமாரர்—பாரியாள் (இன்னார்) என்கிற உங்களுக்கு............ல் இருக்கும் (இன்னார்) குமாரர்—பாரியாள் (இன்னார்) ஆகிய நான்............தேதியில் உங்களுக்கு பண உறுதி சீட்டு எழுதிக்கொடுத்து உங்களிடமிருந்து ரூ. /- கடன் வாங்கிக் கொண்டிருக்கிறேன். அதற்கு கீழ் கண்ட என்னுடைய அசையா சொத்தைச் சேர்ந்த பத்திரங்களை ............டவுனில் உங்களிடம் இப்பொழுது டிபாசிட் செய்கிறேன்.

| வரிசை எண் | தேதி | இன்னார் இன்னருக்கு எழுதி கொடுத்தது | பத்திர இயல்பு | பதிவு எண் |
|---|---|---|---|---|
| ...... | ...... | ...... | ...... | ... |

ஷெபத்திரங்கள் என்னுடைய (ஊர், தெரு, கதவு, எண்.........) வீடு மனையை (ஜில்லா, தாலூக்கா, கிராமம், சர்வே எண்... ......நஞ்சை புஞ்சை நிலத்தை) சேர்ந்தவை.

**சாக்ஷிகள்.**

டிபாசிட் செய்பவர்

## உதாரணம் (14) அடமானத்தை மாற்றுதல்

## TRANSFER OF MORTGAGE

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. …………ல் ஏற்பட்டு ……………… சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில் புஸ்தகம் 1 வால்யும் ……… பக்கங்கள் …………ல் பதிவாயிருக்கும்…………நெ. தஸ்தாவேஜு மூலமாக கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை அதன் சொந்தக்காரரான (இன்னர்) என்னிடம் ஈடு காட்டி அடமானம் வைத்து ரூ. /- கடன் வாங்கியிருக்கிறார், அதில் இப்பொழுது அசல் ரூ, /-ம் வட்டி பாக்கி ரூ. /-ம் எனக்கு சேரவேண்டியதாயிருக்கிறது.

2. ஷை தொகை எனக்கு இப்பொழுது தேவையாயிருப்பதால் நான் உங்களை கேட்டுக் கொண்டதின் பேரில் ஷை அடமானத்தை நீங்கள் மாற்றுதல் பெற்றுக் கொண்டு அதில் எனக்கு சேரவேண்டிய ஷை பாக்கியை கொடுக்க ஒப்புக் கொண்டீர்கள், அதன்படி ஷை அடமானத்தை நான் இதனல் உங்களுக்கு மாற்றுதல் செய்து அடியில் கண்ட பணப்பத்து விவரப்படி (இந்த பத்திரம் ரிஜிஸ்டராகும்போது உதவி பதிவாளர் முன்னிலையில்) நான் உங்களிடமிருந்து, ரூ. /- பெற்றுக் கொண்டு விட்டேன்.

3. ஆகையால் நான் இதனல் மாற்றுதல் செய்துள்ள அடமானப் பத்திர ஷரத்துகள்படி எனக்கு சேரவேண்டிய ஷை அசல் வட்டி பூரா பாக்கிகளையும் மேற்கொண்டு ஏற்படும் வட்டியையும் நீங்களே வசூல் செய்து எடுத்துக் கொள்ளவும். இனி ஷை அடமானப் பத்திரத்திலும் அதில் சேர வேண்டிய தொகைகளிலும் எனக்கு எவ்வித பாத்யதையும் கிடையாது.

4. இதனல் மாற்றுதல் செய்த அடமானத்தின்பேரில் இப்பொழுது எவ்வித வில்லங்கமும் கிடையாது. ஏதாவது இருந்தால் நானே என் சொந்த சிலவில் அதை தீர்த்து கொடுத்தும் அதனல் உங்களுக்கு உண்டாகும் நஷ்டங்களை கட்டிக் கொடுத்தும் ஈடு செய்ய சம்மதிக்கிறேன்.

**பணப்பத்து விவரம்**

…………

ஷெடியூல் (சொத்து விவரம்)

…………

**சாக்ஷிகள்.**

அடமானம் மாற்றுபவர்

**குறிப்பு**:—ஒருவர் பேரிலேயே ஒரே நபர் பல அடமானங்களாக ஒரே சொத்தை வைத்திருந்தால் அவைகள் எல்லாவற்றையும் ஒரே பத்திரம் முலம் மாற்றலாம். ஆனல் தீர்ப்பு குறிப்பு ஒவ்வொரு அடமானத்திலும் தனித்தனியே எழுதி ரிஜிஸ்டர் செய்ய வேண்டும்.

## உதாரணம் (15) கீழ் அடமானம்

### SUB—MORTGAGE

தேதி – இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. உதாரணம் 14 (1) ல் உள்ளபடி

2. மேற்படி என் அடமான பாத்யதையை நான் இதனல் உங்களிடம் கீழ் அடமானம் வைத்து என் (காரணம்) சிலவிற்காக நான் உங்களிடமிருந்து அடியில் கண்ட பணப்பத்து விவரப்படி [இந்த பத்திரம் ரிஜிஸ்டராகும் போது உதவி பதிவாளர் முன்னிலையில்] ரு /- கடனுக பெற்றுக் கொண்டேன். இதற்கு ரூ. 100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. /-ஆக கூடிய அசலும் வட்டியும் உங்களுக்கு வேண்டும்போது (இன்று முதல் ............. வருஷத்திற்குள்) திருப்பிக் கொடுத்து இதை மீட்டுக் கொள்ளுகிறேன். அதுவரை பிரதிமாத வட்டியை அதற்கு அடுத்த மாதம் ..........தேதிக்குள் உங்களிடம் தவருமல் செலுத்திக் கொண்டு வருகிறேன். தவறினுல் பாக்கி வட்டிக்கு அதே விகிதம் தொடர் வட்டி சேர்த்துக் கொடுக்க சம்மதிக்கிறேன்.

3. இந்த கீழ் அடமான அசல் தொகையை பாக்கி யிருக்கும் வட்டியுடன் நீங்கள் கேழ்கும்போது (இன்று முதல் ................. வருஷத்திற்குள்) நான் திருப்பிக் கொடுக்க தவறினுல் என் அடமான பத்திர ஷரத்துகள்படி அடமான சொத்தை நீங்களே விற்பனைசெய்து இதில் உங்களுக்கு சேர வேண்டிய தொகையை எடுத்துக் கொண்டு மிகுதி கிறய தொகையை என்னிடம் கொடுத்து விடவும். உங்களுக்கு சேரவேண்டிய தொகை குறைவுபட்டால் அப்படி குறைவு படும் தொகையை நான் உங்களுக்கு கட்டிக் கொடுக்க சம்மதிக்கிறேன். இது தவிற அடமான சொத்துக்கு ரிசீவர் நியமித்தாவது அடமான பாக்கிக்கு தாவா செய்தாவது நீங்கள் வசூல் செய்துகொள்ளவும் நான் சம்மதிக்கிறேன்.

4. மேற்கண்ட என் அடமான பாத்யதையின்பேரில் இப்பொழுது எவ்வித வில்லங்கமாவது கலனவது கிடையாதென்றும் உறுதியாய் சொல்லுகிறேன். ஏதாவது இருந்தால் நானே முன்னின்று என் சொந்த சிலவில் அதை தீர்த்துக் கொடுத்தும் அதனல் உங்களுக்கு உண்டாகும் நஷ்டங்களை கட்டிக் கொடுத்தும் ஈடுசெய்ய சம்மதிக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த கீழ் (அடமான பாத்யதை) அடமானப் பத்திரம்.

**பணப்பத்து விவரம்**

............

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

**சாக்ஷிகள்.** .........

அடமானம் வைப்பவர்

## உதாரணம் (16) மேற்கொண்டு பொருப்பு கொடுத்தல்

## ADDITIONAL SECURITY DEED

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. ........... யில் ஏற்பட்ட ........... சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு தஸ்தாவேஜீ நெ. ............ மூலமாக என்னுடைய (ஊர், தெருவு, கதவு நெ,) வீடு மனையை நான் உங்களிடம் ஈடு காட்டி அடமானம் வைத்து ரூ. /- கடன் வாங்கி யிருக்கிறேன். அதில் பின் பாகம் இப்பொழுது விழுந்து விட்டிருப்பதால் ஷை கடனுக்கு மேற்கொண்டும் பொருப்பு கொடுக்கும்படி நீங்கள் என்னை கேட்டீர்கள்.

2. அதன்படி கொடுக்க நான் ஒப்புக் கொண்டு கீழ் ஷெடியூலில் கண்ட சர்வ வில்லங்க சுத்தியாய் இருக்கும் என்னுடைய (காலி மனை, வீடு மனை, நஞ்சை புஞ்சை நிலம்) சொத்தை ஷை கடனுக்கே மேற்கொண்டு பொருப்பாக இருக்க நான் இதனல் உங்களுக்கு கொடுத்திருக்கிறேன். ஷை அடமானப் பத்திரத்தின் நிபந்தனைகள்படியே கீழ் ஷெடி யூலில் கண்ட சொத்தின் பேரிலும் நீங்கள் தொடர்ந்து ஷை கடனை வசூல் செய்து கொள்ளவும்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த மேற் கொண்டும் பொருபபு கொடுக்கும அடமானப் பத்திரம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

பொருப்பு கொடுப்பவர்

## உதாரணம் (17)—அடமான பாத்யதை விடுதலை

## RELEASE OF MORTGAGE RIGHT

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது.

1. ......(தேதி)——யில் ஏற்பட்டு.........சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில்.........எண் தஸ்தாவேஜாக பதிவாயிருக்கும் பத்திர மூலமாக கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தையும் உங்களு டைய இதர சொத்துக்களையும் சேர்த்து நீங்கள் என்னிடம் ஈடு காட்டி அடமானம் வைத்து ரூ. /-கடன் வாங்கி யிருக்கிறீர்கள், அந்த அடமான சொத்துக்களில் கீழ் ஷெடி யூலில் கண்ட சொத்தை மட்டும் அந்த அடமானத்திலிருந்து விடுதலை செய்து கொடுக்கும் படி நீங்கள் என்னை கேட்டதின் பேரில் அதில் எனக்கு சேரவேண்டிய அசல் ரூ. /- வட்டி பாக்கி ரூ. /-இவைகளுக்கு பகுதி வரவு வைத் துக்கொள்ள ரூ. /-எனக்கு கொடுத்தால் நான் விடு தலை செய்வதாக ஒப்புக்கொண்டேன்.

2. இதை அனுசரித்து அடியில் கண்ட பணப்பத்து விவரப்படி (இந்த பத்திரம் ரிஜிஸ்டராகும் போது உதவி பதி வாளர் முன்னிலேயில்) நீங்கள் எனக்கு ரூ. /-செலுத்தி நான் பெற்றுக்கொண்டு விட்டபடியால் ஷெ என் அடமானத் திலிருந்து கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை மட்டும் நான் இதனல் உங்களுக்கு விடுதலே செய்து கொடுத்துவிட்டேன்.

3. ஆகையால் கீழ் கண்ட சொத்தின் பேரில் இனி எனக்கு அடமான பாத்யதை ஒன்றும் கிடையாது. ஷெ அடமானத்தில் மேற் கொண்டு எனக்கு சேர வேண்டிய பாக்கிகளே அதில் அடங்கிய இதர சொத்துக்களிலிருந்து நான் வசூல் செய்து கொள்ள கடவேன்.

4. இதனல் விடுதலே செய்த சொத்தை சேர்ந்த பத்தி ரங்களேமட்டும் இன்று உங்களிடம் திருப்பிக் கொடுத்து விட்டேன்.

இந்தப் படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த அட மான பாத்யதை விடுதலே—ரிலீஸ்பத்திரம்.

பணப்பத்து விவரம்

............

ஷெடியூல் (சொத்து விவரம்)

............

**சாக்ஷிகள்**

விடுதலே செய்பவர்

## உதாரணம் (18) அடமான வட்டி விகிதம் மாற்றுதல்

## AGREEMENT VARYING INTEREST

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக்கொடுப்பது

1. ............ல் நான் உங்களிடமிருந்து ரூ. /- கடன் வாங்கி அதற்கு ............ சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு புஸ்தகம் 1 வால்யூம் ............ (பைல் நெ. ............) பக் கங்கள் ............ல் பதிவாயிருக்கும் அடமான பத்திரம்படி அசல் கடன் தொகைக்கு ரூ. 100/- க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ. /- ஆக உங்களுக்கு கொடுக்க நான் ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

2. மேற்படி அடமான அசல் தொகையை நீங்கள் வசூல் செய்ய நடவடிக்கை எடுக்காதிருக்க ஒப்புப் கொண்ட தாலும் தற்கால விலேவாசிகளே உத்தேசித்தும் அதில்கண்ட வட்டி விகிதத்தை அதிகப்படுத்தி கொடுக்கும்படி நீங்கள் கேட்டு நானும் அதற்கு ஒப்புக் கொண்டேன். [எனக்கு இப்பொழுது வருமானம் குறைந்திருப்பதாலும் மாதவட்டியை

இது வரையில் தவருமல் கட்டிக் கொண்டு வந்திருப்பதை உத்தேசித்தும் நான் கேட்டுக் கொண்டபடி வட்டி விகிதத்தை குறைத்து கொள்ள நீங்கள் ஒப்புக் கொண்டீர்கள்.]

3. அதன்படி ஷெ அடமான அசல் கடனுக்கு இன்று முதல் ரூ. 100/-க்கு மாதம் ஒன்றுக்கு வட்டி ரூ, /- ஆக நான் உங்களுக்கு அதிகப்படுத்தி (குறைத்து) கொடுத்துக் கொண்டுவர ஒப்புக் கொண்டேன்.

4. இதற்கு நீங்களும் ஒப்புக் கொண்டு இதில் கையெழுத்து செய்திருக்கிறீர்கள்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

அடமானம் செய்தவர்

அடமானம் பெற்றவர்

## உதாரணம் (19) அடமான தீர்ப்பு குறிப்பு

## DISCHARGE ENDORSEMENT

............வருஷம்............மாதம்............தேதி இதில் கண்ட அடமானம் பெற்ற ............ல் இருக்கும் (இன்னூர்) குமாரர்—பாரியாள் (இன்னூர்) ஆகிய நான்—இந்த அடமானம் செய்த ............ல் இருக்கும் (இன்னூர்) குமாரர்—பாரியாள் (இன்னூர்) என்கிற உங்களிடமிருந்து—இதில் எனக்கு சேரவேண்டிய அசல் ரூ. /- வட்டி பாக்கி ரூ. /- ஆக மொத்தம் ரூ. /-இதை இந்த குறிப்பு ரிஜிஸ்டராகும்போது உதவி பதிவாளர் முன்னிலையில் (இதில் கையெழுத்து செய்து) பெற்றுக் கொண்டு விட்டேன். இனி இதில் எனக்கு சேரவேண்டியது பாக்கி ஒன்றும் கிடையாது.

**சாக்ஷிகள்** அடமானம் பெற்றவர்

**குறிப்பு:** ஒரு அடமானத்தில் பல சொத்துக்கள் அடங்கியிருந்தால் தீர்ப்பு குறிப்பை ரிஜிஸ்டர் (பதிவு) செய்தால்தான் எல்லா சொத்துக்களுக்கும் தீர்ந்ததை நிரூபிக்க முடியும்.

# அத்தியாயம்—3

## குத்தகை (வாடகை) ஒப்பந்தம்

### LEASE

**சட்டம் :**—கொஞ்ச காலத்திற்கோ, சாசுவதமாகவோ, தொகை, பணம், தானியம், பணி, மதிப்புள்ள எதையாவது அப்போதைக்கப்போது பெற்றுக் கொண்டு வர சம்மதித்து ஒருவர் தன் அசையா சொத்தை மற்றொருவர் அனுபவிப்பதற்கு மாற்றுவது குத்தகை அல்லது வாடகை ஒப்பந்தம் ஆகும்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 105 படி]

தவணை ஒரு வருஷத்திற்கு அதிகமானாலும் அல்லது வருஷ வாடகை ஒப்பந்தமானாலும் இரு பார்டிகளும் கையெழுத்து செய்த பதிவான பத்திர மூலம்தான் அதை முடித்துக் கொள்ள வேண்டும். மற்றவை பதிவான பத்திர மூலமாகவும் அல்லது வாய்மொழி ஒப்பந்தத்துடன் சொத்தை சுவாதீனம் செய்தும் முடித்துக் கொள்ளலாம்:

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 107 படி]

### உதாரணம் (20)—வீடு குடக்கூலி ஒப்பந்தம்

### HOUSE—RENTAL AGREEMENT

தேதி—இன்னாருக்கு இன்னார்—எழுதிக் கொடுப்பது.

1. உங்களுக்கு சொந்தமான கீழ் ஷெடியூலில் கண்ட வீடுமனையை நான் குடியிருப்பதற்கு இன்று முதல் [நீங்கள் என்னிடம் ஒப்புவிக்கும் தேதியிலிருந்து] ............ வருஷங்களுக்கு மாதம் ஒன்றுக்கு வாடகை ரூ. /- உங்களுக்கு கொடுக்க ஒப்புக்கொண்டு வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

2. இந்த ஒப்பந்தம் இங்கிளீஷ் மாதம் 1-ம் தேதியிலிருந்து அந்த மாதம் கடைசிவரை மாத குடக்கூலி ஒப்பந்தமாக கருதப்படும். அதன்படி முதல் மாதத்தில் உள்ள நாட்களுக்கும் அப்புறம் பிரதி மாதமுமாக அதற்கு அடுத்த மாதம் ............ தேதிக்குள் வாடகையை தவறாமல் உங்களிடம் செலுத்தி நான் ரசீது பெற்றுக் கொண்டு வர சம்மதிக்கிறேன்.

3. இதற்கு (இத்தனை)—மாத வாடகை ரூ. /- அட்வான்சாக நான் இப்பொழுது உங்களிடம் செலுத்தியிருக்கிறேன். ஷெ வீடுமனையை நான் காலி செய்யும்போது இதை வாபீசு பெற்றுக் கொள்ளுகிறேன். [கடைசி (இத்தனை) மாத வாடகைக்கு நீங்கள் அதை வரவு வைத்துக் கொள்ள வேண்டியது.] [இந்த அட்வான்சில் ஒரு மாத வாடகையை மட்டும் உங்களிடம் நிறுத்தி விட்டு மிகுதி அட்

வான்சை மாத வாடகையில் ரூ.         /- ஆக பிரதிமாதமும் கழித்துக் கொண்டு மிகுதியை உங்களிடம் நான் தவருமல் செலுத்திக் கொண்டு வர சம்மதிக்கிறேன்.]

4. நான் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் இடத்தை மொத்தமாகவோ பகுதிகளாகவோ வேறு யாருக்கும் கீழ் குடக்கூலிக்கு விடுவதில்லே. அப்படி செய்வதானுல் உங்கள் கையெழுத்திட்ட அனுமதியின் பேரில் செய்யக்கடவேன்.

5. ஷெ இடத்தை குடியிருப்பதற்கு மட்டுமே உபயோகிக்க கடவேன். அதை வியாபாரத்திற்காவது, கிடங்காகவாவது, தொழில்சாலேயாகவாவது உபயோகிப்பதில்லே.

6. நான் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் இடத்திற்கு மின்சார வசதிக்காக [(இத்தனே)-பல்புக்கு அதிகப்படாமல் உபயோகப்படுத்தி பல்பு 1 க்கு ரூ.         /- ஆகவும் விசிறி 1 க்கு ரு.         /- ஆகவும்] சப்மீட்டர் அளவுபடி ஏற்படும் தொகையை பிரதி மாதமும் நான் உங்களிடம் தவருமல் செலுத்திக் கொண்டுவர சம்மதிக்கிறேன்.

7. இந்த ஒப்பந்தம் முடியும்வரை ஷெ இடத்தை நான் சரியான நிலமையில் வைத்துக் கொண்டும் அதற்கு எவ்வித பழுதும், கெடுதலும் ஏற்படாதபடி பார்த்துக் கொண்டும்வர சம்மதிக்கிறேன்.

8. நான் வாடகையை தவருமல் செலுத்தும் வரையில் நீங்கள் வீட்டுவரி நிலவரி முதலியவைகளே தவருமல் கட்டிக் கொண்டு நான் அமைதியுடன் ஷெ இடத்தை அனுபவிப்பதற்கு தடை ஏற்படாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது.

9. இதில் கண்ட தவணே முடிந்ததும் அல்லது அதற்கு முந்தியே—(இத்தனே)—மாத வாடகை பாக்கி ஏற்பட்டு நீங்கள் கேழ்கும் போதும் மேற்படி இடத்தை காலி செய்து நான் உங்களிடம் ஒப்புவித்துவிட சம்மதிக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த வீடுமனே குடக்கூலி ஒப்பந்தம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

...........

**சாக்ஷிகள்**

வாடகைக்கு பெறுபவர்

வாடகைக்கு விடுபவர்

## உதாரணம் (21) நெல் சாகுபடி ஒப்பந்தம்

## PADDY CULTIVATION AGREEMENT

தேதி—இன்னுருக்கு—இன்னுர்—எழுதி கொடுப்பது.

**1.** உங்களுக்கு சொந்தமான............ஜில்லா.........தாலூக்கா.........கிராமத்தில் இருக்கும் கீழ் ஷெடியூலில் கண்ட நஞ்சை நிலத்தை நெல் சாகுபடி செய்ய உங்களிடமிருந்து—(இத்தனை)—வருஷங்களுக்கு குத்தகைக்கு நான் எடுத்துக் கொண்டு என் சுவாதீனம் செய்து கொண்டிருக்கிறேன்.

2. ஷை நிலங்களை காலத்தில் உழவற உழுது எரு கிடை தழை முதலியது போட்டு அக்கம் பக்கம் நிலம் ஒப்பந்தம் செய் நோத்தி தாழ்வின்றி காலா காலத்தில் சாகுபடி செய்து மாசூல் காலத்தில் உங்களுக்கு தெரியப்படுத்தி உங்கள் உத்தரவின் பேரில் அறுவடைசெய்யக் கடவேன்.

3. அப்படி அறுவடை செய்த நெல் தானியத்தில் உங்களுக்கு சேர வேண்டிய—(இத்தனை)—பங்கு தானியத்தை அளந்து.........போகத்தில்.......மூட்டைதானியமும், .........போகத்தில்.........மூட்டை தானியமும் உங்களிடம் சேர்பித்து ரசீது பெற்றுக் கொண்டு வரக்கடவேன். மிகுதி எனக்கு சேர வேண்டிய பங்கு பாகத்தை நான் எடுத்துக் கொள்ளக் கடவேன்.

4. உங்களுக்கு கொடுக்க வேண்டிய தானியத்தை நான் உங்களுக்கு கொடுக்க தவறினாலும் அது குறைவுபட்டாலும் ஷை நிலங்களை நீங்கள் உடனே மறு சுவாதீனம் செய்து கொள்ளலாம். நான் கொடுக்க தவறிய தானியத்தையும் கால விலைபடி என்னிடமிருந்து சிலவுடன் நீங்கள் வசூல் செய்து கொள்ள நான் சம்மதிக்கிறேன்.

5. ஷை நிலங்களுக்கு சம்பந்தப்பட்ட சர்வே டிமார்கேஷன்கல், மரம் முதலிய வைகளை அப்போதைக் கப்போது கவனித்து சரியான நிலையில் இருக்கும்படி பாதுகாத்து வரக்கடவேன்.

6. மேற்படி நிலங்களில் மடிப்பு சாகுபடி செய்தால் ஒப்பந்தப்படி உங்களுக்கு சேர வேண்டிய மேல் வாரம் கொடுத்துவிடக்கடவேன்.

7. மெற்படி நிலங்களுக்கு உண்டாகிய ஏர், உழவு வேலை வகையருவை நான் ஊர் வழக்கப்படி செய்யக் கடவேன்.

8. மேற்படி நிலங்களுக்கு சர்காருக்கு கட்டவேண்டிய தீர்வையை நீங்களே கட்டிக் கொள்ள வேண்டியது. நான் கட்ட வேண்டி ஏற்பட்டால் உங்களுக்கு செலுத்த வேண்டிய தானிய மதிப்பிலிருந்து அதை நான் எடுத்துக் கொள்ள எனக்கு பாத்யதை உண்டு.

9. இதில் கண்ட குத்தகை வருஷங்கள் முடிந்ததும் மேற்படி நிலங்களை உங்களுக்கு மறு சுவாதீனம் செய்துவிட சம்மதிக்கிறேன்,

ஷெடியூல் (சொத்து விவரம்)

......ரிஜிஸ்டிரேஷன் டிஸ்டிரிக்ட்.........சப் டிஸ்டிரிக்ட் .........ஜில்லா.........தாலூக்கா..........நெ. கிராமத்திலிருக்கும் நிலம

| தரம் | புலத்தின் பெயர் | சர்வே எண் | விஸ்தீரணம் | தீர்வை |
|---|---|---|---|---|
| ...... | ...... | ...... | ...... | ...... |

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த குத்தகை ஒப்பந்தம்.

குத்தகை எடுப்பவர்

இதன்படி நானும் ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

**சாக்ஷிகள்**

குத்தகை விடுபவர்

## உதாரணம் (22)—சவுக்கு சாகுபடி ஒப்பந்தம்

## CASUARINA CULTIVATION AGREEMENT

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது.

1. ............ ஜில்லா ............ தாலூக்கா..........நெ. கிராமத்தில் இருக்கும் உங்களுக்கு சொந்தமான கீழ் ஷெடியூலில் கண்ட நிலங்களில் நான் சவுக்கு மரம் பயிர் செய்ய உங்களிடமிருந்து குத்தகைக்கு எடுத்துக் கொண்டு ஷை நிலங்களை என் சுவாதீனம் செய்து கொண்டிருக்கிறேன்.

2. மேற்படி நிலங்களில் என் சிலவில் நான் சவுக்கு பயிர் விதைத்து தண்ணீர் பாய்ச்சி மரம் எழுப்பி பாதுகாத்து வரக்கடவேன்.

3. ஒரு வருஷமானதும் முதல் தடவையாக வெட்டும் போது உங்களுக்கு தெரியப் படுத்தி சுள்ளிகளை கழித்து வேண்டிய சுள்ளிகளையும் கிளைகளையும் நான் எடுத்துக் கொள்ள கடவேன். மேற்கொண்டு வருஷாவருஷம் வெட்டும் போதும் உங்களுக்கு தெரியப்படுத்தி வெட்டி வரும் சுள்ளிகளையும் கிளைகளையும் நீங்கள் பாதி பாகமாகவும் நான் பாதி பாகமாகவும் பிரித்து எடுத்து கொள்ள கடவோம். நாம் இருவரும் சேர்ந்து அவைகளை விற்றும் கிறயத் தொகையை சமபாகமாக எடுத்துக் கொள்ளலாம்.

4. இன்று முதல் ஏழு வருஷத்திற்குள் சவுக்கு மரங்கள் வெட்ட தகுதியானவுடன் நாம் இருவர்களும் சேர்ந்து அவைகளை வெட்டி கால விலைபடி விற்பனை செய்து வரும் தொகையை நாம் இருவர்களும் சமபாகமாக எடுத்துக் கொள்ள வேண்டியது.

5. இரண்டாவது வருஷத்திலிருந்து சுள்ளிகளையும் கிளைகளையும் வெட்டும் போதும், மரங்கள் வெட்ட தகுதியான வுடன் அவைகளை வெட்டும் போதும், நான் உங்களுக்கு ரிஜிஸ்டர் தபால் மூலம் தெரியப்படுத்தி உங்கள் முன்னிலை யில் வெட்டக் கடவேன். அப்படி செய்யாமல் பயிர்களை வெட்டவாவது தனிமையில் விற்கவாவது எனக்கு அதிகாரம் கிடையாது.

6. உங்களுக்கு தெரியப்படுத்தாமல் நான் வெட்டினு லாவது விற்ருலாவது கிரிமினல் சட்டப்படி ஏற்படும் குற்றத் திற்கும் நான் உட்படுகிறேன்.

7. மேற்கண்ட நிபந்தனைகளுக்கு மீறி நடந்தாலாவது பயிர் சரிவர விதைத்து வளர்க்க தவறினுலாவது அதனுல் உங்களுக்கு ஏற்படும் நஷ்டங்களை நான் கட்டிக் கொடுக்க கடவேன்.

8. ஏழு வருஷத்திற்குள் இந்த குத்தகை ஒப்பந்தத்தை ரத்து செய்ய எனக்காவது உங்களுக்காவது அதிகாரம் கிடையாது. அப்படி செய்தால் ரத்து செய்பவர் நம்மில் மற்ற நபருக்கு நஷ்டம் கட்டிக் கொடுக்க வேண்டியது.

9. இந்த ஏழு வருஷ குத்தகைக்கு என் பாகம் பயிர் மதிப்பு ரூ. /-

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த குத்தகை ஒப்பந்தம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............ ரிஜிஸ்டிரேஷன் டிஸ்டிரிக்ட்............ சப்ரிஜிஸ் டிரேஷன் டிஸ்டிரிக்ட ............ ஜில்லா ............ தாலூக்கா ............ கிராமத்திலிருக்கும் புஞ்சை நிலம்.

| தரம் | சர்வே எண் | விஸ்தீரணம் | செக்பத்தி | தீர்வை |
|---|---|---|---|---|
| ...... | ...... | ...... | ...... | ...... |

**சாக்ஷிகள்**

குத்தகை எடுப்பவர்

குத்தகை விடுபவர்

## உதாரணம் (23)—டிபோ மனை வாடகை ஒப்பந்தம்

## LEASE FOR FIREWOOD DEPOT

தேதி—இன்னுர்க்கு இன்னுர்—எழுதிக் கொடுப்பது

1. உங்களுக்கு சொந்தான கீழ் ஷெடியூலில் கண்ட [ஊர், தெருவு, கதவு எண் .........] உள்ள காலிமனையை

விறகு, மரக்கறி வியாபாரம் செய்ய இன்று முதல்—(இத்தனை) —வருஷங்களுக்கு நான் உங்களிடமிருந்து வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

2. இதற்கு நான் ஒப்புக் கொண்டிருக்கும் மாதவாடகை ரூ. /- இதை பிரதி இங்கிளீஷ் மாதமும் அதற்கு அடுத்த மாதம் ............ தேதிக்குள் உங்களிடம் தவருமல் செலுத்திக் கொண்டு வர சம்மதிக்கிறேன். இந்த ஒப்பந்தம் பிரதி இங்கிளீஷ் மாதம் 1/தேதி முதல் அதன் கடைசி தேதி வரை மாத ஒப்பந்தமாக கருதப்படும்.

3. இதற்கு முன் பணமாக நான் இப்பொழுது உங்களிடம் ரூ. /-செலுத்தி யிருக்கிறேன். அதில் ஒரு மாத வாடகையை மட்டும் உங்களிடம் அட்வான்சாக நிறுத்தி விட்டு மிகுதியை பிரதி மாத வாடகையில் ரூ. /- ஆக கழித்து மிச்சவாடகையை செலுத்திக் கொண்டு வரக் கடவேன்.

4. ஷை இடத்தில் விறகு, மரக்கறி வியாபாரம் மட்டும் செய்துவர சம்மதிக்கிறேன். அதை வேறு வியாபாரத்திற்காவது, குடியிருப்பு இடமாகவாவது உபயோகிப்பதில்லை. அதில் நெருப்பு வரும் அடுப்பு முதலியதை வைப்பதில்லை.

5. அந்த காலிமனை நான்கு பக்கங்களிலும் சவுக்கு கம்பிகள் நிறுத்தி ஜிங்தகடு களாலோ, மூங்கில் கம்பிகளாலோ, சுற்றி அடைத்து வாசக்கால் வைத்து நான் பந்தோபஸ்து செய்து கொள்ள எனக்கு பாத்யதை உண்டு. இவைதவிற நான் வேறு எதுவும் கட்டுவதில்லை.

6. மேற்படி காலிமனையை மொத்தமாகவோ, பகுதிகளாகவோ, வேறு யாருக்கும் நான் கீழ்குடக்கூலிக்கு விடுவதில்லை.

7. என் வியாபாரத்திற்கு தேவையான லைசென்ஸ் பெற்றும் அரசாங்க சட்டங்களுக்கும் விதிகளுக்கும் உட்பட்டும் நான் என் வியாபாரத்தை நடத்திவரக் கடவேன். அதற்கு ஏற்படும் விற்பனைவரி முதலியதையும் நானே கட்டிக் கொள்ளக் கடவேன். மேற்படி காலி மனைக்கு கட்ட வேண்டிய சொத்துவரியை நீங்களே கட்டிக் கொள்ள வேண்டியது.

8. மேற்படி காலி மனையின் தரையை அப்போதைக்கப்போது சமப்படுத்தி சரியான நிலமையில் வைத்துக் கொண்டுவந்து இதில் கண்ட தவணை முடிந்ததும் சமதரையாய் மேடு பள்ளம் இல்லாமல் உங்களிடம் திரும்பி ஒப்புவிக்க கடவேன்.

9. நான்—(இத்தனை)—மாத வாடகை கட்ட தவறினாலும் மேற்படி நிபந்தனைகளுக்கு மீறி நடந்தாலும் ஷை கால தவணையை எதிர்பாராமலே நீங்கள் என்னை காலி செய்து

கொள்ளலாம், அப்படி நீங்கள் காலி செய்து கொள்ளும் போதும் நானுகவே காலி செய்யும் போதும் நான் போட்டிருக்கும் சவுக்கு, மூங்கில் கம்பிகள், ஜிங்தகடுகள், வாசக்கால் கதவு, மேடை இவைகளை அப்புறப்படுத்தாமல் அப்படியே விட்டுவிட்டு போகக்கடவேன். அப்பொழுது வாடகை பாக்கி யிருந்தால் அதையும் நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதன் மதிப்பையும் அட்வான்சில் கழித்து மிகுதியை பெற்றுக் கொள்ள கடவேன்.

இந்தப்படிக்கு நான் எழுதிக்கொடுத்த காலி மனை வாடகை ஒப்பந்தம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

**சாக்ஷிகள்.**

வாடைகைக்கு பெறுபவர்

வாடகைக்கு விடுபவர்

## உதாரணம் (24)—கோழி, கால் நடை பண்ணை வாடகை ஒப்பந்தம் LEASE FOR POULTRY, CATTLE FARM

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக்கொடுப்பது.

1. எனக்கு சொந்தமாய் என் சுவாதீன அனுபோகத்திலிருக்கும் கீழ் ஷெடியூலில் கண்ட புஞ்சை நிலத்தை அதில் கோழி (கால்நடை) பண்ணை நீங்கள் நடத்திக் கொள்ள நான் இதனல் உங்களுக்கு—(இத்தனை)—வருஷங்களுக்கு வாடகைக்கு மாற்றுதல் செய்து கொடுத்திருக்கிறேன்.

2. மேற்படி நிலத்திற்கு நீங்கள் எனக்கு மாத வாடகை ரூ. /-கொடுத்துக் கொண்டு வரவேண்யது. இந்த ஒப்பந்தம் இங்கிளீஷ் மாதம் 1ம் தேதி முதல் அந்த மாத கடைசி தேதி வரை "மாதக் குடக்கூலி" ஒப்பந்தமாக கருதப்படும். அதன்படி முதல் மாதத்திற்குள்ள நாட்களுக்கும் மேற்கொண்டு பிரதி இங்கிளீஷ் மாதமும் அதற்கு அடுத்த மாதம்............தேதிக்குள் என்னிடம் நீங்கள் வாடகையை செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு வரவேண்டியது.

3. இதற்கு முன்பணமாக ரூ. /- உங்களிடமிருந்து நான் பெற்றுக் கொண்டிருக்கிறேன். இதில் ஒரு மாத வாடகையை மட்டும் அட்வான்சாக நான் என்னிடம் நிறுத்திக் கொண்டு மிகுதியை பிரதி மாத வாடகையில் ரூ. /- ஆக கழித்து மிச்ச முள்ளதை நீங்கள் என்னிடம் செலுத்தி ரசீது பெற்றுக்கொண்டு வரவேண்டியது. என்னிடம் நிற்கும் ஒரு மாத வாடகை அட்வான்சை கடைசி மாத வாடகைக்கு நான் வரவு வைத்துக்கொள்ளக் கடவேன்.

4. ஷெ நிலத்தில் கோழி (கால்நடை) பண்ணை நடத்திக் கொள்ள தேவையான குடிசைகளை நீங்கள் சுவர் எழுப்பி

போட்டுக் கொள்ளலாம். பண்ணைக்கு வேண்டிய தொட்டிகளையும் தொழுவங்களையும் கூட நீங்கள் கட்டிக் கொள்ளலாம். பண்ணை காவல் காரர்களுக்கும், மேற் பார்வையாளர்களுக்கும் தேவையான அறைகளையும் சுவர் எழுப்பி ஓடுமூடி கட்டிக் கொள்ளலாம். நிலத்தை சுற்றியும் முள்வேலி அல்லது இரும்பு கம்பி வேலி நிறுத்தி, வாசக்கால், கதவு வைத்து போட்டுக்கொண்டு உங்கள் பண்ணையை நீங்கள் பாதுகாத்துக் கொள்ளலாம். மேற் கொண்டு நீங்கள் எதுவும் கட்டக்கூடாது.

5. ஷெ நிலத்தை நீங்கள் வேறு யாருக்கும் மொத்தமாகவோ பகுதிகளாகவோ கீழ் குடக்கூலிக்கு விடக்கூடாது.

6. ஷெ நிலத்தில் உள்ள தென்னை, பனை மரங்களையும் மற்று முள்ள எந்த மரங்களையும் என் அனுமதியின்றி நீங்கள் வெட்டக் கூடாது.

7. உங்கள் பண்ணைக்கு தேவையான லைஸென்சு வாங்கிக் கொண்டும் அரசாங்க சட்டங்களுக்கும், கார்பொரேஷன் பஞ்சாயத்து போர்டு விதிகளுக்கும் உட்பட்டு நடத்திக் கொள்ள வேண்டியது.

8. நீங்கள் மாத வாடகையை சரிவர செலுத்தாமல்—(இத்தனை)—மாத வாடகை பாக்கி நின்ருலும், மேற்படி நிபந்தனைகளுக்கு மீறி நடந்தாலும் இதில் கண்ட கால தவணைக்கு முந்தியே நான் உங்களை காலி செய்து கொள்ளலாம். இதில் கண்ட தவணை வருஷங்கள் முடிந்ததும் நீங்கள் புதிதாக வாடகை ஒப்பந்தம் செய்து கொண்டால் மறுபடியும் உங்களுக்கே வாடகைக்கு விட சம்மதிக்கிறேன்.

9. நீங்களாகவே தவணை முடிந்ததும் காலி செய்யும் போதும் நான் உங்களை காலி செய்து கொள்ளும் போதும் நீங்கள் கட்டும் குடிசைகளையும், தொட்டிகளையும், தொழுவங்களையும், அறைகளையும், வேலி வாசக்கால் கதவு உள்பட எதையும் எடுக்காமல் அப்படியே விட்டு விட்டுப் போக வேண்டியது.

இந்தப் படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த காலி மனை வாடகை ஒப்பந்தம்.

வாடகைக்கு விடுபவர்

வாடகைக்கு பெறுபவராகிய நானும் இதற்கு ஒப்புக் கொண்டிருக்கிறேன்.

**சாக்ஷிகள்.** வாடகைக்கு பெறுபவர்

## உதாரணம் (25) ஹோடல் குத்தகை ஒப்பந்தம்

## HOTEL LEASE

.........வருஷம்.........மாதம்.........தேதி—(இருப்பிடம்)ல் இருக்கும்—(இன்னார்)—குமாரர்—(இன்னர்)—குத்தகைக்கு விடுபவர் 1 வது நபராகவும்,—(இருப்பிடம்)—ல்

இருக்கும்—(இன்னார்)—குமாரர் — (இன்னார்) — குத்தகைக்கு பெறுபவர் 2 வது நபராகவும், — (இருப்பிடம்) — ல் இருக்கும் — (இன்னார்) குமாரர் — (இன்னார்) — ஜாமீன்தார் 3 வது நபராகவும் நாங்கள் செய்து கொண்ட ஹோடல் குத்தகை ஒப்பந்தம் என்ன வென்றால்:—

1. நம்மில் 1 வது நபர் கீழ் 1 வது ஷெடியூலில் கண்ட [ஊர், தெருவு, கதவு எண்..........உள்ள) இடத்தில்............ பெயரில் இப்பொழுது ஒரு ஹோடல் நடத்தி வருகிறார். அது நம்மில் 1 வது நபருக்கு மட்டுமே சொந்தமானது. அதை நம்மில் 2 வது நபர் இன்று முதல்—(இத்தனை)—வருஷங்களுக்கு இதில் கண்டபடி குத்தகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்த ஹோடலில் உள்ளதும் கீழ் 2 வது ஷெடியூலில் கண்டதுமான சாமான்களை 1 வது நபரிடமிருந்து 2 வது நபர் ஒப்புவித்துக் கொண்டிருக்கிறார், இந்த குத்தகை முடிந்ததும் அந்த சாமான்களை சரிவர திரும்பிக் கொடுப்பதற்கு நம்மில் 3 வது நபர் ஜாமீன் தாரராக சேர்ந்திருக்கிறார்.

2. நம்மில் 2 வது நபர் ஷை ஹோடலுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. /- ஆக நம்மில் 1 வது நபரிடம் குத்தகையாக செலுத்திக் கொண்டு வர வேண்டியது. இதை பிரதி தினமும் ஹோடலை மூடுவதற்கு முன் ரூ. /-ஆக செலுத்திக் கொண்டு வந்து மிகுதி பூராவையும் மாத கடைசி தினம் செலுத்திவிட வேண்டியது.

3. இந்த ஒப்பந்தத்திற்கு அட்வான்சாக ரூ. /- 2 வது நபர் 1 வது நபரிடம் செலுத்தியிருக்கிறார். இதை வாடகை பாக்கியில்லாமலும் சாமான்களில் குறைவு, பழுது இல்லாமலும் ஹோடலை திருப்பிக் கொடுக்கும்போது 2 வது நபர் 1 வது நபரிடமிருந்து வாபீசு பெற்றுக் கொள்ள வேண்டியது.

4. இந்த குத்தகை ஒப்பபந்தம்—(இத்தனை)—வருஷங்களுக்கு அமுலில் இருக்க வேண்டியது. அதற்கு மேல் 1 வது நபரும் 2 வது நபரும் இஷ்டப்பட்டால் அப்பொழுது 1 வது நபர் ஒப்புக் கொள்ளும் குத்தகைக்கு அதே காலத்திற்கு இந்த ஒப்பந்தத்தை புதுப்பித்துக் கொள்ளலாம்.

5, ஷை குத்தகை தவிற ஹோடல் இருக்கும் இடத்திற்கு வாடகை, தண்ணீர் வரி, மின்சார வசதி கட்டணம், விற்பனை வரி, லைசென்ஸ் மற்றும் ஷை ஹோடலுக்காக கட்டவேண்டிய எல்லா தொகைகளையும் 2 வது நபரே கட்டிக் கொள்ள வேண்டியது.

6. மேற்கண்டபடி ஹோடல் குத்தகையை 2 வது நபர் 1 வது நபருக்கு செலுத்த தவறி—(இத்தனை)—நாள் பாக்கி ஏற்பட்டால் ஷை கால தவணைக்குள்ளாகவே 1 வது நபர் ஹோடலை தன் வசப்படுத்திக் கொள்ளலாம்.

7. இந்த ஒப்பந்தம் தீர்ந்ததும் கீழ் ஷெடியூலில் கண்ட சாமான்களை சரியான நிலமையில் 2 வது நபர் 1 வது நபரிடம் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியது. ஷெ சாமான்கள் குறைவு பட்டாலும் பழுது அடைந்து இருந்தாலும் அதனால் ஏற்படும் நஷ்ட மதிப்பை அட்வான்சில் கழித்துவிட வேண்டியது. அப்படி கழித்தும் நஷ்ட மதிப்பு பாக்கியிருந்தால் அதை 2, 3 நபர்கள் 1 வது நபருக்கு செலுத்திவிட வேண்டியது.

8 எக்காரணத்தைக் கொண்டும் ஷெ ஹோடலை 2 வது நபர் வேறு யாருக்காவது மாற்றவோ கீழ் குடக் கூலிக்கு விடவோ கூடாது. அதன் பொறுப்பின் பேரில் கடன் வாங்க 2 வது நபருக்கு பாத்யதை கிடையாது. அப்படி செய்தால் அது 1 வது நபரையும் ஹோடலையும் கட்டுப்படுத்தாது.

9. இதில் கண்ட தவணைவரை 2வது நபரால் ஹோடலை நடத்த முடியாமல் போனால் குத்தகை பாக்கியில்லாமல் சாமான்களை திருப்பிக் கொடுத்தால் இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து கொள்ளலாம். அப்படி செய்தால் 2வது நபர் செலுத்திய அட்வான்சில் பாக்கியுள்ளதை அவர் இழந்து விடவேண்டியது.

10. மேற்படி ஹோடலை சுகாதார முறையிலும் அரசாங்கம், கார்பொரேஷன், மற்ற அதிகாரிகளின் விதிகள் படிக்கும் 2வது நபர் நடத்திக் கொள்ள வேண்டியது. மாறாக நடந்தால் அதற்கு 2வது நபரே ஜவாப்தாரி ஆவார்.

11. மேற்படி ஹோடலின் லாப நஷ்டங்கள் 2வது நபரையே சேர்ந்தது. அது 1வது நபரை பாதிக்காது.

12. இந்த ஹோடலை 2வது நபர் நடத்தும் வரை 1வது நபர் எப்பொழுது வேண்டுமானாலும் உள்ளே சென்று ஒப்படைத்த சாமான்களின் நிலமையை தெரிந்து கொள்ளலாம்.

இந்தப் படிக்கு நாம் சம்மதித்து செய்து கொண்ட ஹோடல் குத்தகை ஒப்பந்தம்.

**1வது ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**2வது ஷெடியூல் (சாமான்கள் விவரம்)**

............

சாக்ஷிகள்,

1வது நபர்

2வது நபர்

3வது நபர்

# அத்தியாயம்—4

## தானசெடில்மென்ட்டும் உயிலும்

**சட்டம்:** தானம்—பிரதி பலன் அடையாமல் ஒருவர் தன் அசையும் அல்லது அசையா சொத்தை தானாகவே மற்றொருவருக்கு மாற்றி அது ஒப்புக்கொள்ளப்பட்டால் "தானம்" ஆகும். ஆனால் தானம் கொடுத்தவர் உயிருடன் உள்ளபோதே தானம் ஒப்புக் கொள்ளப்படவேண்டும். அப்படி செய்யாமல்தானம் பெறுபவர் இறந்துவிட்டால் தானம் பயனற்றதாகிவிடும்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 122 படி]

**சட்டம்:**—செடில்மெண்ட்—(i) கல்யாண விஷயமாகவோ (ii) குடும்பத்தில் பிரித்துக் கொடுக்கவோதான் விரும்பும் நபருக்கோ, தன் ஆதரவில் இருப்பவருக்கு பாதுகாப்பு செய்து வைக்கவோ, அசையும் அல்லது அசையா சொத்தை உயில் இல்லாத எழுத்து மூலம் ஒருவர் மற்றொருவருக்கு மாற்றுவது "செடில்மென்ட்" எனப்படும்.

[முத்திரை சட்டம் பிரிவு 2(24) படி]

அசையா சொத்தை 2 சாக்ஷிகள் அத்தாக்ஷி செய்த பதிவான பத்திரம் மூலம்தான் தானம் அல்லது செடில்மென்ட் செய்ய வேண்டும். அசையும் சொத்தை பதிவான பத்திரமூலமாகவும் சொத்தை ஒப்புவித்தும் செய்யலாம்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 123 படி]

செடில்மென்டு செய்பவரும் செடில்மென்டு பெறுபவரும் ஒப்புக் கொள்ளும் ஒரு சம்பவத்தால் செடில்மென்டு தற்காலிகமாக பயனற்றதாகி விடும் அல்லது ரத்தாகி விடும் என்று ஒப்புக் கொள்வது செல்லும். அப்படி இல்லாமல் செடில்மென்டு செய்பவரே தன் இஷ்டம்போல் ரத்து செய்து விடலாம் என்று ஒப்புக்கொள்வது செல்லாது.

ஒரு ஒப்பந்தத்தை எக்காரணத்தால் ரத்து செய்யலாமோ அதே காரணத்தால் செடில்மென்டையும் ரத்து செய்யலாம்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 126 படி]

### சொத்து மாற்றுதல் (பொது விதி)

உயிருடன் உள்ள ஒரு நபர் உயிருடன் உள்ள மற்றொரு நபர் அல்லது நபர்களுக்கோ, தனக்கும் மற்றொரு நபர் அல்லது நபர்களுக்குமாகவோ இப்பொழுதோ, பின்னாலோ, அடைய சொத்து கொடுப்பது "சொத்து மாற்றுதல்" எனப்படும்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 5 படி]

---

### இனி பிறக்கப் போகும் நபருக்கு சொத்து மாற்றுதலை பற்றிய விதிகள் :

### TRANSFER FOR BENEFIT OF UNBORN PERSON

**சட்டம் :**—ஒரு சொத்தை மாற்றும்போது முன் ஒரு பாத்யதைக்குப் பிறகு அடையும்படி உயிருடன் இல்லாத ஒரு

நபருக்கு கொடுத்தால் மாற்றுபவருடைய பூராபாத்யதையை யும் கொடுத்தால் ஒழிய மாற்றுதல் செல்லாது.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 13]

---

## RULE AGAINST PERPETUITY

ஒரு சொத்தை மாற்றும்போது உயிருடன் உள்ள ஒன்று அல்லது பல நபர்களின் ஜீவதசைக்குப் பிறகு அப்பொழுது இருக்கக்கூடிய ஒரு நபரின் மைனர் தசைக்குப் பிறகு என்றுவது அல்லது அவர் மேஜரானவுடன் என்றுவது அடைய வேண்டுமென்று சொல்லி மாற்றுவது கூடாது.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 14]

---

## VESTED INTEREST

எப்பொழுதிலிருந்து என்று சொல்லாமலும் அல்லது இப்பொழுதிலிருந்தே என்று சொல்லியும் அல்லது கட்டாயம் நடக்கக்கூடிய சம்பவமானவுடன் என்று சொல்லியும் ஒரு சொத்தில் ஒரு பாத்யதையை மாற்றினுல் மாற்றுதல் பெறு பவர் "நிலை உள்ள உரிமை" அடைகிறுர்.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 19]

---

## WHEN UNBORN PERSON ACQUIRES VESTED INTEREST ON TRANSFER FOR HIS BENEFIT

ஒரு சொத்தை மாற்றும்போது உயிருடன் இல்லாத வரின் நன்மைக்காக அவருக்கு பாத்யதை கொடுத்தால் மாற்றுதலின் ஷரத்துகள் எதிரிடையாக இல்லாதிருந்தால் அவருக்கு அனுபோகம் பின்னுல் வருவதானுலும் அவர் பிறந்தவுடன் மேற்படி சொத்தில் அவருக்கு "நிலை உள்ள உரிமை" ஏற்படுகிறது.

[சொத்து மாற்று சட்டம் பிரிவு 20]

"நிலை உள்ள உரிமை" பெற்றவர் சொத்தை அடை வதற்கு முன் இறந்து விட்டால் அவருக்கு செய்த மாற்றம் செல்லும், சொத்து அவர் வாரிசுகளை சேரும்.

---

### ஆயுள் பாத்யதை (Life Interest):

முஹம்மதியர் சட்டம் சுன்னி, ஹனபிபடி ஒருவருக்கு ஆயுள்வரை அனுபவிக்கும் பாத்யதை கொடுத்து பிறகு மற் ஞெருவருக்கு பூரா பாத்யதை கொடுத்தால் ஆயுள்வரை அனுபவிக்கும் பாத்யதை பெற்றவர் பூரா பாத்யதை அடைந்

தவராக கருதப்படுவர். மற்றொருவருக்கு ஒன்றும் வராது. ஷியா, ஷாபி முறைபடி ஆயுள் பாத்யதை கொடுப்பது செல்லத் தக்கதாகும்.

("முஹம்மதிய சட்டம்" புஸ்தகம் பார்க்கவும்)

---

## உதாரணம் (26)—நிபந்தனையுடன் செடில்மென்டு

## CONDITIONAL SETTLEMENT

தேதி—இன்னாருக்கு இன்னார்—எழுதிக் கொடுப்பது

1. ............தேதியில் ஏற்பட்ட.........சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு தஸ்தாவேஜு நெ.........மூலமாக கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை நான் அடைந்தது முதல் அது எனக்கு மட்டுமே சொந்தமாய் என் சுவாதீன அனுபோகத்தில் இருந்து வருகிறது. அதில் இப்பொழுது என்னைத் தவிர வேறே யாருக்கும் சொந்த பாத்யதை கிடையாது.

2. நீ எனக்கு குமாரனான படியால் உன் பேரில் எனக்குள்ள இயல்பான அன்பினாலும் பிரியத்தாலும் ஷெ சொத்தை கீழ் கண்ட நிபந்தனைகளுக்கு உட்படுத்தி நான் உனக்கு இதனால் செடில்மென்டு செய்து கொடுத்திருக்கிறேன்.

3. மேற்படி நிபந்தனைகளாவது!—(i) எனக்கு தள்ளாமையாகி விட்ட படியால் என் ஜீவதசை வரை நீ என்னுடன் இருந்து என்னை சவரக்ஷணை செய்து காப்பாற்றி வர வேண்டியது (ii) என் குமாரத்தியும் உன் சகோதரியுமான (இன்னார்)க்கு இன்று முதல்—(இத்தனை)—மாதத்திற்குள் நீ கல்யாணம் செய்துவைக்க வேண்டியது. (iii) என் ஜீவதசை வரையில் மேற்படி சொத்தில் ஒரு அறையில் மட்டும் நான் இருந்து வரக்கடவேன். (iv) என் ஜீவதசைவரை மேற்படி சொத்தை நீ எவ்வித பராதீனமும் செய்யக் கூடாது. இந்த நிபந்தனைகளுக்கு உட்படுத்தி இன்றே மேற்படி சொத்தை நான் உன் சுவாதீனம் செய்திருக்கிறேன். இன்று முதல் நீ அதில் குடியிருந்து கொண்டும் வாடகைகளை வசூல் செய்து எடுத்துக் கொண்டும் அனுபவித்து வரவேண்டியது. என் ஜீவதசைக்குப் பிறகு நீ அதை சர்வ சுதந்திரமாய் எல்லா வகை மாற்றங்களும் செய்ய உறித்தாய் நிபந்தனைகள் படி நடந்து அடைய வேண்டியது.

4. இதில் எவ்வித கலனுமில்லை. அப்படி ஏதேனும் ஏற்பட்டால் நானே முன்னின்று என் சொந்த சிலவில் அதை தீர்த்துக் கொடுக்ககடவேன்.

இந்த செடில்மென்டு சொத்தின் மதிப்பு ரூ.............../-.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த செடில்மென்டு பத்திரம், செடில்மென்டு பெறுபவராகிய

நானும் ஒப்புக்கொண்டு இதில் கையெழுத்து செய்திருக் கிறேன்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

செடில்மென்டு செய்பவர்
செடில்மென்டு பெறுபவர்

## உதாரணம் (27)—ஆயுள் பாத்யதையுடன் செடில்மென்டு

## SETTLEMENT WITH LIFE INTEREST

தேதி—இன்னருக்கு—இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. உதாரணம் 26 (1)ல் உள்ளபடி.

2. நீ என் மகளான படியால் உன்பேரில் எனக்குள்ள இயல்பான அன்பினுலும் விசுவாசத்தாலும் உன் கல்யாண காலத்தில் உனக்கு ஒரு ஆதரவு செய்து வைப்பதாக சொன்ன என் வாக்குறுதியை அனுசரித்து மேற்படி சொத்தை கீழ் கண்டபடி உனக்கு செடில்மென்டு செய்து கொடுத்து அதை இன்று உன் சுவாதீனம் செய்திருக் கிறேன்.

3. இன்று முதல் மேற்படி சொத்தில் வரும் வாடகை களை நீயே வசூல் செய்து வரிகள் கட்டி, ரிபேர் செய்து மிகுதியுள்ளதை சர்வசுதந்திரமாய் எடுத்துக் கொள்ளவேண் டியது. உனக்கு ஆயுள்வரை அனுபவிக்கும் பாத்யதை மட்டும் கொடுத்திருப்பதால் மேற்படி சொத்தை நீ விற்கவோ அடமானம் வைக்கவோ, வேறு எந்த விதமான பராதீனம் செய்யவோ உனக்கு அதிகாரம் கிடையாது.

4. உன் ஆயுள் வரை நீ அனுபவிக்கும் பாத்யதை முடிந்த பிறகு உன் ஆண் பெண் சந்ததிகள் மேற்படி சொத்தை கைப்பற்றி அதை சர்வசுதந்திரமாய் எல்லா வகை மாற்றங்களும் செய்ய உறித்தாய் ஆண்டு அனுபவித் துக் கொள்ள வேண்டியது.

5. இந்த செடில்மென்டு சொத்தின் பேரில் இப் பொழுது எவ்வித கலனும் கிடையாது. ஏதாவது இருந்தால் நானே அதை தீர்த்துக் கொடுக்க கடவேன்.

6. இந்த செடில்மென்டை எக்காரணத்தைக் கொண் டும் நான் ரத்து செய்வதில்லை. இந்த செடில்மென்டு சொத் தின் மதிப்பு ரூ. /-.

இந்தப்படிக்கு நான் எழுதிக்கொடுத்த செடில்மென்டு பத்திரம்,

ஷெடியூல் (சொத்து விவரம்)

............

சாக்ஷிகள்

செடில்மென்டு செய்பவர்

## உதாரணம் (28)—பல ஆயுள் பாத்யதைக்கு பிறகு மாற்றம்

## SETTLEMENT AFTER MANY LIFE INTERESTS

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிகொடுப்பது

1. உதாரணம் 26 (1)ல் உள்ளபடி.

2. நீ என் பாரியாளான படியால் உன் பேரில் எனக்குள்ள இயல்பான அன்பினுலும் பிரியத்தாலும் என் ஜீவதசையிலேயே உனக்கு ஒரு ஆதரவு செய்துவைக்க இந்த செடில்மென்டு செய்யலானேன்.

3. என் ஜீவதசை வரையில் நான் மேற்படி சொத்தை எவ்வித பராதீனமும் செய்யாமல் அதில் குடியிருந்து கொண்டும், வாடகைகளை வசூல் செய்து எடுத்துக் கொண்டும், வரிகள் கட்டி, தேவையான ரிபேர் செய்து ஆண்டு அனுபவித்து வரக்கடவேன். மேற்படி சொத்தை கிரயம், தானம், அடமானம். மற்றும் எந்த வகை மாற்றமும் செய்ய எனக்கு பாத்யதை கிடையாது.

4. மேற்கண்டபடி என் ஜீவதசைவரை நான் அனுபவிக்கும் பாத்யதை முடிந்த பிறகு நீ மேற்படி சொத்தை கைப்பற்றி என்னைப் போலவே எந்த வகை பராதீனமும் செய்ய பாத்யதை இல்லாமல் அதில் குடியிருந்து கொண்டும் வாடகைகளை வசூல் செய்து எடுத்துக் கொண்டு ஆண்டு அனுபவித்து வரவேண்டியது.

5. இப்படியாக உன் ஜீவதசைவரை நீ அனுபவிக்கும் பாத்யதை முடிந்த பிறகு நம்முடைய ஒரே குமாரன்—(இன்னர்)—மேற்படி சொத்தை கைப்பற்றி வாடகைகளை வசூல் செய்து எடுத்துக் கொண்டு மேற்படி சொத்தை எவ்வித பராதீனமும் செய்யாமல் ஆண்டு அனுபவித்து வரவேண்டியது. ஆனல் அவன் மகள் கல்யாணத்திற்கு ரூ. /-க்கு அதிகப்படாமல் மேற்படி சொத்தின் பேரில் கடன் வாங்கி அதை முடித்து வைக்க அவனுக்கு பாத்யதை உண்டு. இது தவிற வேறு எந்த வகை பராதீனமும் செய்ய அவனுக்கு பாத்யதை கிடையாது. அவன் ஜீவதசைக்குப் பிறகு அவன் ஆண் பெண் சந்ததிகள் மேற்படி சொத்தை சர்வ சுதந்திரமாய் எல்லாவகை மாற்றங்களும் செய்ய உறித்தாய் அடைய வேண்டியது.

6. இந்த சொத்தின் பேரில் இப்பொழுது எவ்வித கலனு மில்லை. ஏதாவது இருந்தால் நானே அதை தீர்த்து விடக் கடவேன்.

7. இந்த செடில்மெண்டு சொத்தின் மதிப்பு ரூ. /-

இந்தப்படிக்கு நான் எழுதிக்கொடுத்த செடில்மெண்டு பத்திரம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்.**

செடில்மெண்டு செய்பவர்

## உதாரணம் (29) அனுபவிக்கும் பாத்யதை செடில்மெண்டு SETTLEMENT OF ENJOYMENT RIGHT

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது.

1. உதாரணம் 26 (1) ல் உள்ளபடி.

2. நீங்கள் என் தாயாரானபடியால் உங்கள் பேரில் எனக்குள்ள இயல்பான அன்பினுலும் விசுவாசத்தாலும் உங்கள் ஜீவதசைவரை நீங்கள் குடியிருந்து கொண்டும் வாடகைக்கு விட்டும் ஜீவித்துவர மேற்படி சொத்தை நான் இதனுல் உங்களுக்கு செடில்மெண்டு செய்து கொடுத்திருக் கிறேன். அதை நீங்கள் எவ்வித பராதீனமும் செய்யாமல் வரிகளைகட்டி வாடகைகளை வசூல்செய்து எடுத்துக்கொண்டு அனுபவித்து வரவேண்டியது. என் தாயார் என்ற காரணத் தால் நான் உங்களுக்கு அனுபவிக்கும் பாத்யதை மட்டும் கொடுத்திருப்பதால் அந்த பாத்யதையை நீங்கள் வேறு யாருக்கும் மாற்றுதல் செய்யக்கூடாது. உங்கள் ஜீவ தசைக்குப்பிறகு மேற்படி சொத்து எனக்கே சேர்ந்ததாகி என் சுவாதீனம் செய்து கொள்ள கடவேன்.

இந்த செடில்மெண்டு சொத்தின் மதிப்பு ரூ. /-

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த செடில்மெண்டு பத்திரம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

செடில்மெண்டு செய்பவர்

## உதாரணம் (30)—செடில்மென்டை ரிவோக் செய்தல் REVOCATION OF SETTLEMENT

.........(தேதி)............ல் இருக்கும் (இன்னர்) குமாரர் (இன்னர்) ஆகிய நான் எழுதி வைக்கும் செடில்மெண்டு ரிவோகேஷன் பத்திரமாவது என்னவென்றுல் :

1. — (தேதி) — ல் சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு புஸ்தகம் 1 வால்யூம் (பைல் ) பக்கம்

ல் பதிவாயிருக்கும் தஸ்தாவேஜு எண் மூல மாக கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை நான் என் குமாரன் (இன்னார்) க்கு சில நிபந்தனைகளுடன் செடில்மென்டு செய்து கொடுத்தேன்.

2. அதன்படி மேற்படி என் குமாரன் எந்த நிபந்தனை யையும் செய்யவில்லை. எனக்கு ஜீவனும்சை தொகை ஒரு மாதம்கூட கொடுக்கவில்லை. என்னுடன் இருந்து என்னை கவனித்து வராமல் மாமியார் வீட்டிலேயே இருந்து வருகிறான். என் குமாரத்தியும் அவன் தங்கையுமான (இன்னார்) க்கு கல்யாணம் செய்து வைக்கவுமில்லை. அந்த சொத்தின் பேரில் உள்ள அடமானத்தையும் நான் சொல் லியபடி தீர்க்கவுமில்லை. எந்த நிபந்தனைபடியும் அவன் நடக்க வில்லை. ஆகையால் மேற்படி செடில்மென்டை நான் இதனால் ரிவோக் செய்து விடுகிறேன்.

இந்தப்படிக்கு நான் எழுதி வைத்த செடில்மென்டு ரிவோகேஷன் பத்திரம்.

ஷெடியூல் (சொத்து விவரம்)

............

**சாக்ஷிகள்**

ரிவோக் செய்பவர்

## உயில் (WILL)

**சட்டம் :** ஒருவர் தான் இறந்த பிறகு தன் சொத்தை என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி எழுதி வைக்கும் சாஸனம் "உயில்" எனப் படும்.

[1925 வாரிசு சட்டம் பிரிவு 2 (எச)]

உயில் எழுதி வைப்பவர் அதில் கையெழுத்து செய்ய வேண்டும், அல்லது குறி வைக்க வேண்டும், அல்லது அவர் முன்னிலையில் அவர் சொல்படி வேரொருவர் கையெழுத்து செய்ய வேண்டும். 2 அல்லது அதற்கு அதிகமான சாக்ஷிகள் அவர் கையெழுத்து செய்ததையோ, குறி வைத் ததையோ, அல்லது அவர் சொல்படி வேரொருவர் கையெழுத்து செய் ததையோ பார்த்திருக்க வேண்டும். ஒவ்வொரு சாக்ஷியும் எழுதி வைப் பவர் முன்னிலையில் கையெழுத்து செய்ய வேண்டும்.

(1925 வாரீசு சட்டம் பிரிவு 63)

உயிலின்படி சொத்து அடையும் நபரோ அவர் மனைவியோ, அல்லது கணவரோ சாக்ஷி கையெழுத்து செய்யக்கூடாது. அப்படி செய்தால் சாக்ஷி செல்லும் சொத்து வராது.

(1925 வாரீசு சட்டம் பிரிவு 67)

ஒருவர் தன் உயிலை திறந்தபடியும் அல்லது அதை ஒரு உறையில் வைத்து சீல் செய்து ரிஜிஸ்டர் செய்யலாம், உறையில் வைத்ததை எழுதி

வைத்தவர் இறந்த பிறகு மரண சர்டிபிகேட் காண்பித்து புஸ்தகம் 3ல் அதை பதிவு செய்து வைக்கலாம்.

(ரிஜிஸ்டிரேஷன் சட்டம் பிரிவு 41, 42 படி)

முஹம்மதிய முறைபடி உத்தரகிரியை சிலவுகளும் கடன்களும் போக மிகுதியுள்ள சொத்தில் 3 ல் 1 பங்குக்கு மேல் உயில் மூலம் சொத்து மாற்றுதல் கூடாது. ஆனல் எழுதி வைத்தவர் இறந்த பிறகு உள்ள வாரீசுகள் ஒப்புக் கொண்டால் அதிக பங்காளுலும் செல்லும். அதை ஒப்புக் கொள்ளும் நபரை கட்டுப்படுத்தும். உயில் செய்பவர் இறக்கும்போது அதன் மூலம் சொத்து பெறுபவர் உயிருடன் இருக்க வேண்டும். அதற்கு முன் இறந்து விட்டிருந்தால் எழுதி வைத்தது செல்லாது.

(முஹம்மதிய சட்ட முறைபடி)

**உதாரணம் (31)—உயில்—WILL**

............வருஷம்...........மாதம்..........தேதி......... ல் இருக்கும் (இன்னர்) குமாரர் (இன்னர்) ஆகிய நான் திரிகரண சுத்தியாயும் நல்ல நினைவுடனும் என் சுய இச்சையாய் முழு மனதுடன் எழுதி வைக்கும் உயில் சாஸனமாவது என்னவென்றல் :—

1. எனக்கு இப்பொழுது—(இத்தனை)—வயதாகிறது. இனி நான் வெகு காலம் ஜீவித்திருக்க முடியாதாகையால் நான் நல்ல தேகஸ்திதியில் இருக்கும் போதே நான் இறந்த பிறகு என் சொத்துக்களை யார் அடைய வேண்டும் என்பது பற்றி இந்த உயில் எழுதிவைக்கிறேன்.

2. எனக்கு இப்பொழுது இருக்கும் சொத்துக்களாவது :—

(i) —(ஊர்)—ல்—(தெருவு, கதவு எண்...........)—உள்ள வீடுமனை.

(ii) பாங்கியில் இருக்கும் தொகை

(iii) அடமானங்களில் வர வேண்டியவை இவை கீழ் "எ" "பி" "சி" ஷெடியூல்களில் முறையே குறிக்கப்பட்டுள்ளன.

3. எனக்கு ஆண் சந்ததிகள் கிடையாது. எனக்கு இருப்பது—(இன்ன)—பெயருள்ள ஒரு மகளும்—(இன்ன)—பெயருள்ள அவள் மகனும் தான்.

4. என் ஜீவதசைக்குப் பிறகு மேற்படி என் மகள் (இன்னர்) கீழ் "பி" "சி" ஷெடியூல்களில் கண்ட சொத்துக்களை சர்வ சுதந்திரமாய் அடைய வேண்டியது. "எ" ஷெடியூல் சொத்தை என் மகள் கைப்பற்றி அதை கிரயம், தானம், அடமானம் முதலிய எந்த வகை பராதீனத்திற்கும் உட்படுத்தாமல் வாடகைகளை வசூல் செய்து எடுத்துக் கொண்டு வரி கட்டி ஆண்டு அனுபவித்து வர வேண்டியது. அவள் அனுபவிக்கும் பாத்யதை முடிந்த

பிறகு அவள் குமாரனும் என் பேரனுமான (இன்னர்) அதை சர்வ சுதந்திரமாய் எல்லா வகை மாற்றங்களும் செய்ய உறித்தாய் அடைய வேண்டியது. எனக்குள்ள மற்ற சொத்துக்களையும் மேற்படி என் பேரனே அடைய வேண்டியது.

5. இதில் கண்ட யாவும் என் ஜீவதசைக்குப் பிறகு அமுலுக்கு வரவேண்டியது. என் ஜீவதசையில் இதை மாற்றவும் ரத்து செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு.

6. மேற்படி என் மகளையே இதற்கு உயில் நிறைவேற்ருளராக நியமித்திருக்கிறேன்.

7. இதற்கு முன் நான் உயில் ஒன்றும் எழுதி வைக்கவில்லை. இதுவே என் கடைசி உயில். [............(தேதி)............ல்............சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு புஸ்தகம் 3 வால்யும்—(பைல்)—............பக்கங்கள்............ல் ஒரு உயில் தஸ்தாவேஜு எண்............ஆக பதிவு செய்து வைத்திருக்கிறேன். அதை இதனல் ரத்து செய்து விடுகிறேன்.] [ஏற்கெனவே—(தேதி)—யில்............எண் தஸ்தாவேஜாக ............சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில் நான் பதிவு செய்து வைத்திருக்கும் உயில் என்னுடைய மற்ருெரு சொத்தைப்பற்றிய தாகையால் அதை நான் இதனல் ரத்து செய்யவில்லை.]

இந்தப்படிக்கு என் மனப்பூர்வமாய் நான் எழுதி வைத்த உயில் சாஸனம்.

"எ" ஷெடியூல்

............

"பி" ஷெடியூல்

............

"சி" ஷெடியூல்

............

சாக்ஷிகள்.

உயில் எழுதியவர்.

### உதாரணம் (32)—உயில் WILL

கடவுளுக்கு கொடுத்தல்

............வருஷம்.........மாதம்...........தேதி......... ல் இருக்கும காலஞ் சென்ற பாரியாள் (இன்னர்) என்கிற நான் திரிகரண சுத்தியாயும் நல்ல நினைவுடனும் என் மனப்பூர்வமாய் எழுதி வைத்த உயில் சாஸனம் என்னவென்ருல் :—

1. எனக்கு இப்பொழுது வயது...........ஆகிறது. எனக்கு ஆண் பெண் சந்ததிகள் ஒன்றும் கிடையாது. என்

கணவர்—(இத்தனை)—வருஷங்களுக்கு முன் கீழ் ஷெடியூலில் கண்ட வீடுமனையை மட்டும் வைத்து விட்டு இறந்து விட்டார். அது எனக்கு மட்டுமே சொந்தமாகி என் சுவாதீன அனுபோகத்தில் இருந்து வருகிறது. அதில் என்னைத் தவிற வேறே யாருக்கும் சொந்த பாத்யதை கிடையாது. அதன் வருமானத்தைக் கொண்டு நான் இப்பொழுது என்னை சவரக்ஷணை செய்து கொண்டு வருகிறேன். அந்த சொத்தின் பேரில் இப்பொழுது எவ்வித அடமானமாவது வேறு எவ்வித கலனாவது கிடையாது.

2. நான் குடியிருந்து வரும் திருவல்லிக்கேணி என்கிற புண்ய தளத்தில கம்பீர தோற்றத்துடன் தோன்றி ஞான ஒளி வீசி வரும் முதற் பொருளும் என்றும் பொருளுமாய் விளங்கும் பார்த்தசாரதி கடவுள் என் ஜீவதசைக்குப் பிறகு ஷை சொத்தை சாஸ்வதமாயும் சர்வ சுதந்திரமாயும் அடைய வேண்டியது. அவர் கோயில் கொண்டிருக்கும் தேவஸ்தானத்தின் டிரஸ்டிகள் மேற்படி சொத்தை என் ஜீவ தசைக்குப் பிறகு கைப்பற்றி அதன் பூரா வருமானத்தையும் கடவுள் பணிகளுக்கே சிலவு செய்து கொண்டு வர வேண்டியது.

3. இதில் கண்ட யாவும் என் ஜீவ தசைக்குப் பிறகு அமுலுக்கு வர வேண்டியது. இதை மாற்றவும் ரத்து செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு. ஆனால் அப்படி எதுவும் நான் செய்ய மாட்டேன்.

இப்படிக்கு என் மனப் பூர்வமாய் எழுதி வைத்த உயில் சாஸனம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

உயில் செய்பவர்

### உதாரணம் (33)—உயிலில் கார்டியன் நியமித்தல்

### WILL APPOINTING GUARDIAN

...........வருஷம்...........மாதம்...........தேதி..........

............ல் இருக்கும் காலஞ் சென்ற—(இன்னார்)—குமாரர் (இன்னார்)—என்கிற நான் திரிகரண சுத்தியாயும் நல்ல நினைவுடன எழுதிவைத்த உயில் சாஸனமாவது என்னவென்றால் :—

1. எனக்கு—(இன்னார்)—என்கிற ஒரே குமாரன் இருக்கிறான். அவனுக்கு இப்பொழுது 10 வயதாகிறது. அவனுக்கு அவன் தாயார் கொடுத்த கீழ் ஷெடியூலில் கண்ட

வீடு மனை ஒன்று மட்டும் இருக்கிறது, அவன் தாயார் இறந்தது முதல் மேற்படி சொத்தில் வரும் வாடகைகளை வசூல் செய்து வரிகட்டி கார்டியனாக அவனை சவரக்ஷணை செய்து வருகிறேன். என் உடல் நிலை சரியாக இல்லாததால் என் ஜீவதசைக்குப் பிறகு அவன் சொத்தை பரிபாலித்து வர ஒரு ஏற்பாடு செய்யவேண்டியதாய் இருக்கிறது. ஆகையால் என் இளைய சகோதரன் (இன்னார்) என்பவனை மேற்படி என் மைனர் குமாரனுக்கும் அவன் சொத்துக்கும் கார்டியனாக இதனால் நியமித்திருக்கிறேன். என் ஜீவதசைக்குப் பிறகு மேற்படி என் சகோதரன் மேற்படி சொத்தை கைப்பற்றி வாடகைகளை வசூல் செய்து கொண்டு வரி கட்டி என் குமாரனுக்கு படிப்பு முதலியது சொல்லி வைத்து அவனை சவரக்ஷணை செய்து காப்பாற்றி வரவேண்டியது. அவன் மேஜரானவுடன் மேற்படி சொத்தை என் சகோதரன் அவனிடம் ஒப்புவித்துவிட வேண்டியது.

2. இதில் கண்ட யாவும் என் ஜீவதசைக்குப் பிறகு அமுலுக்கு வரவேண்டியது. இதை மாற்றவும் ரத்து செய்யவும் எனக்கு அதிகாரம் உண்டு.

இந்தப் படிக்கு நான் எழுதிவைத்த உயில் சாஸனம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்.**

உயில் செய்பவர்

# அத்தியாயம் 5

## பொது நலனுக்கில்லாது நம்பிக்கையால் ஒப்படைப்பு—PRIVATE TRUST

**சட்டம் :—**"டிரஸ்ட்" என்பது ஒரு சொத்தில் உள்ள சொந்த உறிமையைச் சேர்ந்த கடமை. பிறருடைய அனுகூலத்திற்கோ, அல்லது பிறருடையவும் தன்னுடையவும் அனுகூலத்திற்கோ நம்பிக்கையால் தனக்கு கொடுத்து ஒப்புக் கொள்ளப்பட்டது.

[டிரஸ்ட் சட்டம் பிரிவு 3]

அசையா சொத்தை பற்றியதானல் ரிஜிஸ்டரான பத்திர மூலம்தான் "டிரஸ்ட்" செய்யவேண்டும். உயில் மூலம் செய்வதானல் ரிஜிஸ்டர் செய்யவேண்டிய அவசியம் இல்லை. அசையும் சொத்தானல் மேற் கண்ட படியாவது சொத்தில் சேர்ந்த பாத்யதையை மாற்றியாவது செய்யலாம்.

[டிரஸ்ட் சட்டம் பிரிவு 5]

உயில் மூலம் செய்த டிரஸ்டை எப்பொழுது வேண்டுமானலும் ரத்து செய்துவிடலாம். வேறு விதமாக ஏற்படுத்தியதை நன்மை அடைகிறவர்கள் ஒப்புக் கொண்டாலாவது அலலது டிரஸ்ட் பத்திரத்தில் அதை ரத்து செய்ய உறிமை இருந்தாலாவது அதை ரத்து செய்து விடலாம்.

[டிரஸ்ட் சட்டம் பிரிவு 78]

## உதாரணம் (34)—நம்பிக்கை ஒப்படைப்பு பத்திரம்

## TRUST DEED

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. எனக்கு இப்பொழுது............வயதும்............வயதும் உள்ள இரண்டு மைனர் குமாரர்கள் இருக்கிருர்கள். என் உடல் நிலை சரியில்லாமல் இருந்து வருவதால் நான் அவர்களை கவனித்து சவரக்ஷணை செய்து வரமுடியாமல் இருந்து வருகிறது. இதனல் என் தங்கையான நீ அவர்களை இப்பொழுது அன்போடு கவனித்து வளர்த்து வருகிருய். அவர்கள் தாயார் ஏற்கெனவே இறந்து விட்டபடியால் அவர்களை காப்பாற்றி வர உன்னைத்தவிற வேறு யாரும் கிடையாது. உன்பேரில் எனக்குள்ள நம்பிக்கையால் கீழ் ஷெடியூலில் கண்ட இரண்டு வீடு மனைகளுக்கும் உன்னை டிரஸ்டியாக நியமித்து உனக்கு அவைகளை இதனல் மாற்றிக் கொடுத்து உன் சுவாதீனம் செய்திருக்கிறேன்.

2. இன்று முதல் மேற்படி வீடு மனைகளில் வரும் வாடகைகளை நீ வசூல் செய்து கொண்டு வரி, ரிப்பேர் செலவுகள் போக மிகுதி தொகையை மேற்படி என் மைனர் குமாரர்கள் (தேதி)—ல் பிறந்திருக்கும் — (இன்னர்) — என்பவனையும்

(தேதி)—ல் பிறந்திருக்கும்—(இன்னார்) என்பவனையும் உன்னிடமே வைத்துக் கொண்டு போஷித்து படிப்பு முதலியது சொல்லி வைத்து சவரக்ஷணை செய்து காப்பாற்றி வரவேண்டியது.

3, மேற்படி என் மைனர் குமாரர்களில் மூத்தவனான—(இன்னார்)—க்கு 25 வயது முடிந்ததும் கீழ் "எ" ஷெடியூலில் கண்ட சொத்தை நீ மாற்றுதல் பத்திரம் ரிஜிஸ்டர் செய்து அவனிடம் ஒப்புவித்து விட வேண்டியது. அதே போல் என் இளைய குமாரனான—(இன்னார்)—க்கு 25 வயது முடிந்ததும் கீழ் "பி" ஷெடியூலில் கண்ட சொத்தை நீ மாற்றுதல் பத்திரம் ரிஜிஸ்டர் செய்து அவனிடம் ஒப்புவித்து விடவேண்டியது.

4. நீ அவர்களை காப்பாற்றி வந்த காலத்திய மேற்படி சொத்துக்களின் வருமானத்தைப்பற்றி உன்னை கேழ்க அவர்களுக்கு பாத்யதை கிடையாது.

இந்தப்படிக்கு நான் எழுதிக்கொடுத்த டிரஸ்ட் பத்திரம்.

"எ" ஷெடியூல்

............

"பி" ஷெடியூல்

............

**சாக்ஷிகள்**

டிரஸ்ட் செய்பவர்

## *பினாமிதார் சொந்தகாரருக்கு மாற்றுதல்*

## TRANSFER BY BENAMIDAR TO OWNER

**சட்டம்:**—ஒருவர் பணம் கொடுத்து சொத்தை மற்றொருவர் பெயரில் கிரயம் பெற்றால் பணம் கொடுத்தது அந்த மற்றொருவர் அனுகூலத்திற்கு என்று தெரியாவிட்டால் அவர் பணம் கொடுத்தவர் அனுகூலத்திற்கு சொத்தை வைத்திருக்க வேண்டும்.

### உதாரணம் (35)—*பினாமிதார் மாற்றுதல்*

### TRANSFER BY BENAMIDAR

தேதி—இன்னாருக்கு இன்னார்—எழுதிக் கொடுப்பது

1. நீங்கள் உங்கள் பாரியாளான என் பெயரில் கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை உங்களுக்கு ரிஜிஸ்டரான பாகப் பிரிவினை பத்திரம் (உயில், கிரயம் செய்தது, தானம் பெற்றது) மூலமாக கிடைத்த தொகையைக் கொண்டு கிரயம் பெற்றிருக்கிறீர்கள். அந்த கிரயப்பத்திரம்............ சப்ரிஜிஸ்டிரரார் ஆபீசு புஸ்தகம் 1 வால்யூம் ........... பைல் ............ பக்கங்கள்...........ல்...........நெ. தஸ்தாவேஜாக —(தேதி)—ல் ரிஜிஸ்டராகியிருக்கிறது.

2. மேற்கண்டபடி நீங்கள் என் பெயரில் கிரயம் பெற்றிருக்கும் சொத்தும் அதைச் சேர்ந்த பத்திரங்களும் கிரயத் தேதியிலிருந்தே உங்கள் சுவாதீனத்தில் இருந்து வருகின்றன. அதற்கு வரிகளேயும் நீங்களே கட்டிக் கொண்டும் வாடகைகளே வசூல் செய்து எடுத்துக் கொண்டும் வருகிறீர்கள். இப்பொழுது மேற்படி சொத்தை உங்களுக்கு மாற்றிக் கொடுக்கும்படி கேட்டதால் இந்த பத்திரம் எழுதிக் கொடுக்கலானேன்.

3. நீங்கள் மேற்கண்டபடி என் பெயரில் கிரயம் பெற்றிருக்கும் கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை நான் இதனுல் உங்களுக்கு மாற்றுதல் செய்திருக்கிறேன்.

4. மேற்கண்டபடி பினுமியாக என் பெயரில் கிரயம் பெற்ற சொத்து உங்களுடையதாகையால் அதைதான் எவ்வித பராதீனத்திருக்கும் உட்படுத்தவில்லே. கலன் இருந்தால் நானே அதை தீர்த்துக் கொடுக்க கடவேன்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த மாற்றுதல் பத்திரம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்.**

மாற்றுதல் செய்பவர்

## உதாரணம் (36)—*ஏலம் எடுத்தவர் மாற்றுதல்*

## TRANSFER BY AUCTION PURCHASER

**தேதி—இன்னுருக்கு இன்னுர்—எழுதிக் கொடுப்பது.**

1. மதருஸ் சிடிசிவில் கோர்டு ஒ. எஸ். நெ............ல் இ. பி. நெ.............ல் கீழ் ஷெடியூலில் கண்ட சொத்து ............தேதியில் ஏலத்திற்கு வந்த போது நீங்கள் வெளி நாடுகளுக்கு போய் இருந்ததால் உங்கள் தொகை ரூ. /- கொண்டு நீங்கள் சொல்லியபடி என் பெயரில் ஷெ சொத்தை நான் ஏலத்தில் எடுத்து என் பெயரில் கோர்டு கிரய சர்டிபி கேட்டும் பெற்றிருக்கிறேன். அது உங்களுக்கு சொந்தமானது.

2. நீங்கள் இப்பொழுது வெளிநாடுகளுக்குப் போய் திரும்பி வந்துவிட்ட படியால் உங்கள் தொகையைக் கொண்டு மேற் கண்டபடி என் பெயரில் கிரயம் பெற்றிருக்கும் கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை நான் இதனுல் உங்களுக்கு மாற்றுதல் செய்து கொடுத்திருக்கிறேன்.

இந்தப் படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த மாற்றுதல் பத்திரம்,

ஷெடியூல் (சொத்து விவரம்)

சாக்ஷிகள்.

மாற்றுதல் செய்பவர்

உதாரணம் (37)—டிரஸ்ட்பத்திரபடி மாற்றுதல்

**TRANSFER BY TRUSTEE TO BENEFICIARY**

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. என் மூத்த சகோதரர் (இன்னர்) என்பவர் என்னை டிரஸ்டியாக நியமித்து தன்னுடைய இரண்டு சொத்துக்களை யும் எனக்கு மாற்றி என் சுவாதீனம் செய்து கொடுத்து அப்பொழுது மைனராயிருந்த உன்னையும் உன் தம்பியையும் என்னிடம் ஒப்புவித்து உங்களை நான் காப்பாற்றி படிப்பு முதலியது சொல்லி வைத்து வளர்த்து வரவேண்டியதென் றும், உங்கள் ஒவ்வொருவருக்கும் 25 வயது முடிந்ததும் ஷை சொத்துக்களில் ஒன்ருகிய கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை உனக்கும் மற்றதை உன் தம்பிக்கும் நான் கொடுத்துவிட வேண்டுமென்றும் சொல்லி ஒரு டிரஸ்ட் பத்திரம் எழுதி அதை............தேதியில்............சப் ரிஜிஸ் டிரார் ஆபீசில் ............ நெ. டாகுமென்டு ஆக ரிஜிஸ்டர் செய்து கொடுத்திருக்கிருர்.

2. அதில் கண்டபடி நான் உன்னை காப்பாற்றி வந்து உனக்கு இப்பொழுது 25 வயதாகி விட்டபடியால் உனக்கு கொடுக்கும்படி சொல்லி யிருக்கும் கீழ் ஷெடியூலில் கண்ட வீடு மனையை நான் இதனுல் உனக்கு மாற்றுதல் செய்து கொடுத்து அதை இன்று உன் சுவாதீனமும் செய்து விட்டேன். அதைச் சேர்ந்த பத்திரங்களையும் இப்பொழுது உன்னிடம் ஒப்புவித்து விட்டேன். இனி நீயே ஷை சொத்தை சர்வ சுதந்திரமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த டிரஸ்ட்படி மாற்றுதல் பத்திரம்.

ஷெடியூல் (சொத்து விவரம்)

............

சாக்ஷிகள்.

டிரஸ்ட் பெற்றவர்

# அத்தியாயம் 6

## பாகப்பிரிவினை—PARTITION

### ஹிந்து வாரீசு முறை—HINDU SUCCESSION

**சட்டம்:**—ஒரு ஹிந்து ஆண் நபர் உயில் செய்யாது இறந்துவிடடால் அவர் சொத்து அடியில் கண்ட அவர் வாரீசுகளை சேரும்.

| | | |
|---|---|---|
| 1. | முதலில் கீழ் ஷெடியூலில் 1வது வகுப்பில் கண்ட உறவினர்கள். | இவர்கள் இல்லா விட்டால் |
| 2. | இரண்டாவதாக கீழ் 2வது வகுப்பில் கண்ட உறவினர்கள். | " |
| 3. | மூன்றுவதாக, தந்தைவழி உறவினர்கள் | " |
| 4. | கடைசியாக முற்றிலும் ஆண்வழி இல்லாத உறவினர்கள். | " |

### ஷெடியூல்

#### 1வது வகுப்பு வாரீசுகள்

1. மகன் 2. மகள் 3. விதவை 4. தாயார் 5. இறந்த மகனின் மகன் 6. இறந்த மகனின் மகள் 7. இறந்த மகளின் மகன் 8. இறந்த மகளின் மகள் (9) இறந்த மகனின் விதவை 10. இறந்த மகனின் இறந்த மகனின் மகன் 11. இறந்த மகனின் இறந்த மகனின் மகள் 12. இறந்த மகனின் இறந்த மகனின் விதவை. } இவர்கள் ஒரே சமயத்தில் அடைவார்கள்

மேற்படி 1வது வகுப்பு வாரீசுகளில் (i) விதவை, விதவைகள் மொத்தமாக ஒரு பங்கு அடைவர். (ii) உயிருடன் உள்ள மகன்களும், மகள்களும், தாயாரும் ஒவ்வொருவரும் தனித் தனியே ஒரு பங்கு அடைவர். (iii) ஒவ்வொரு இறந்த மகனின் வாரீசுகளும், ஒவ்வொரு இறந்த மகளின் வாரீசுகளும் அவரவர் களுக்குள் உயிருடன் உள்ள மகன், மகள் போல ஒரு பங்கு அடைவர். (iv) இறந்த மகனின் வாரீசுகளுள் விதவை அல்லது விதவைகள் உயிருடன் உள்ள மகன்கள் மகள் களுடன் சமமாக அடைவர். அதேபோல் இறந்த மகளின் வாரீசுகள் அடைவர்.

[ஹிந்து வாரீசு சட்டம் பிரிவு 10 படி]

#### 2வது வகுப்பு வாரீசுகள்

I. தகப்பனர்............ ............. இல்லா விட்டால்

| | | | |
|---|---|---|---|
| **II.** | 1. மகனின் மகளின் மகன்<br>2. மகனின் மகளின் மகள்<br>3, சகோதரன்<br>4. சகோதரி | இவர்கள் சமமாக அடைவர் | ,, |
| **III.** | மகளின் மகனின் மகன்<br>,, ,, மகள்<br>மகளின் மகளின் மகன்<br>மகளின் மகளின் மகள் | ,, | ,, |
| **IV.** | சகோதரனின் மகன்<br>சகோதரியின் ,,<br>சகோதரனின் மகள்<br>சகோதரியின் ,, | ,, | ,, |
| **V.** | தகப்பனாரின் தகப்பனார்<br>தகப்பனாரின் தாயார் | இவர்கள் சமமாக அடைவர் | இல்லா விட்டால் |
| **VI.** | தகப்பனாரின் விதவை<br>சகோதரரின் விதவை | ,, | ,, |
| **VII.** | தகப்பனாரின் சகோதரர்<br>தகப்பனாரின் சகோதரி | ,, | ,, |
| **VIII.** | தாயாரின் தகப்பனார்<br>தாயாரின் தாயார் | ,, | ,, |
| **IX.** | தாயாரின் சகோதார்<br>தாயாரின் சகோதரி | ,, | ,, |

[ஹிந்து வாரீசு சட்டம் பிரிவு 8, 9, 11 படி]

ஒரு பெண்நபர் உயில் செய்யாது இறந்து விட்டால் அவர் சொத்து கீழ்கண்ட வாரீசுகளை சேரும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | மகன்கள்<br>மகள்கள்<br>இறந்த மகனின் குழந்தைகள்<br>,, மகளின் ,,<br>கணவர் | இல்லா விட்டால் | |
| 2. | கணவரின் வாரீசுகள் | ,, | ,, |
| 3. | தாயார் தகப்பனார் | ,, | ,, |
| 4. | தகப்பனாரின் வாரீசுகள் | ,, | ,, |
| 5. | தாயாரின் வாரீசுகள் | ,, | ,, |

ஆனால் ஒருபெண்நபர் தன் தகப்பனார் அல்லது தாயாரிடமிருந்து வாரீசு முறையில் சொத்து அடைந்திருந்தால் அது கீழ்கண்ட அவள் வாரீசுகளை சேரும்,

NADU AR... No. L082...
Z 211, 98:1

1. மகன்கள், மகள்கள், இறந்த மகளின் குழந்தைகள் இறந்த மகனின் குழந்தைகள். } ,,

2. தகப்பனாரின் வாரீசுகள்.

ஒரு பெண்நபர் தன் கணவர் அல்லது மாமனாரிடமிருந்து வாரீசு முறையில் சொத்து அடைந்திருந்தால் அது கீழ் கண்ட அவள் வாரீசுகளே சேரும்.

1. மகன்கள், மகள்கள் இறந்த மகனின் குழந்தைகள் இறந்த மகளின் குழந்தைகள் } இல்லா விட்டால்

2. கணவரின் வாரீசுகள்.
[ஹிந்து வாரீசு சட்டம் பிரிவு 15, 16 படி]

## மிதாக்ஷா குடும்ப சொத்து

1956 ஹிந்து வாரீசு சட்டத்திற்கு பிறகு ஒரு ஆண் இறந்தால் ஹிந்து மிதாக்ஷா குடும்ப சொத்தில் அவர் பாகம் மிகுதியிருக்கும் குடும்ப பாகஸ்தர்களே சேரும், ஆனல் இறந்தவருக்கு பெண் வாரீசாவது அல்லது அவள் மூலம் ஆண் வாரீசாவது இருந்தால் குடும்பசொத்தில் இறந்தவரின் பாகம் ஹிந்து வாரீசு சட்டப்படி போகும்.

[ஹிந்து வாரீசு சட்ட்ம் பிரிவு 6 படி]

ஷை ஹிந்து வாரீசு சட்ட பிரிவுகள் ஆங்கில பாஷையில் 5வது அனுபந்தத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதையும் பார்க்கவும்.)

## சட்டம் :—முஹம்மதியர் வாரீசு முறை

## (ஹனபி—சுன்னி)

## MUSLIM SUCCESSION

முஹம்மதிய விதிகள்படி வாரீசுகள் 3 வகைப்படுவர். (1) **Sharers** (பாகஸ்தர்கள்) (2) **Residuaries** (மிகுதியை அடைபவர்கள்) (3) **Distant kindred** (தூர உறவினர்கள்)

ஒரு இறந்த முஹம்மதியரின் சொத்து அவருடைய உத்தரகிரியை சிலவுகள், கடன்கள், உயிலில் அடங்கிய சொத்து இவை போக மிகுதியிருப்பவை கீழ்கண்டபடி அவர் வாரிசுகளே சேரும். முதலில் பாகஸ்தர்களுக்கு அவரவருக்கு உறிய பாகத்தை கொடுக்க வேண்டும். பாகஸ்தர்கள் இல்லாவிட்டாலும், பாகஸ்தர்கள் தொகை போக மிச்சம் இருந்தாலும் அது "மிகுதியை அடைகிறவர்"களே சேரும். அவர்களும் இல்லாவிட்டால் "தூர உறவினர்" களே சேரும்.

பாகஸ்தர்கள் இருந்து "மிகுதியை அடைகிறவர்கள்" இல்லாவிட்டால் மிச்சமுள்ள பாகமும் பாகஸ்தர்களுக்கே அவர்கள் பாகாசாரப்படி சேரும். பாகஸ்தர்களின் மொத்த பாகம் 1க்கு அதிகமானுல் அவைகளை 1 ஆகும்படி சராசரி குறைத்து விட வேண்டும்.

பாகஸ்தர்கள் விவரம் (**Sharers**)

(இது ஆங்கில பாஷையிலும் விஸ்தரித்து 5வது அனுபந்தத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறது.)

| பாகஸ்தர்கள் | எப்படியானுல் வாரிசு ஆவர் | பாக விகிதம் |
|---|---|---|
| 1) மகள் | மகன் இல்லாவிட்டால் | $\frac{1}{2}$ |
| 1க்கு மேல் ஆனுல் | ,, ,, | $\frac{2}{3}$ |
| | மகன் இருந்தால் ரெசிடியுவரியாக ஒவ்வொரு மகள் 1 பாகமாகவும் ஒவ்வொரு மகன் 2 பாகமாகவும் அடைவர். | |
| 2) மனைவி மனைவிகள் | குழந்தை அல்லது மகனின் குழந்தை எத்தனை கீழ்வரிசையில் ஆனுலும் இருந்தால் | $\frac{1}{8}$ |
| ,, | இல்லா விட்டால்............................... | $\frac{1}{4}$ |
| 3) கணவர் | குழந்தை அல்லது மகனின் குழந்தை எத்தனை கீழ் வரிசையானுலும் இருந்தால் | $\frac{1}{4}$ |
| ,, | இல்லா விட்டால் | $\frac{1}{2}$ |
| 4) தாயார் | ஷை குழந்தை அல்லது மகனின் குழந்தை எத்தனை கீழ் வரிசையானுலும் இருந்தால் அல்லது சகோதரர் சகோதரிகள் இருந்தால் | $\frac{1}{6}$ |
| ,, | ஷை குழந்தை இல்லாவிட்டாலும் 1 சகோதரர் சகோதரிக்கு மேல் இல்லாவிட்டாலும் | $\frac{1}{4}$ |

| பாகஸ்தர் கள் | எப்படியானுல் வாரிசு ஆவர் | பாக விகிதம் |
|---|---|---|
| | (ஆனுல் கணவர் அல்லது மனைவி யும் தகப்பனுரும் இருந்தால் மனைவி அல்லது கணவர் பாகம்போக மிகுதி யில் ⅓ பாகம்). | |
| 5) தகப்ப னுர் | மேற்படி குழந்தை அல்லது மகனின் குழந்தை எத்தனை கீழ் வரிசையானு லும் இருந்தால் இல்லாவிட்டால் ரெசிடியூவரியாக அடைவர். | ½ |
| 6) சகோதரி | குழந்தை மகனின் குழந்தை எத் தனை கீழ் வரிசையானுலும் தகப் பனுர், சகோதரர், சரியான பாட்ட னுர் இல்லாவிட்டால் | ½ |
| 1க்கு மேல் ஆனுல் | ,, ,, ,, | ⅔ |
| | சகோதரர் இருந்தால் ரெசிடியூவரியாக அடைவர் | |
| 7) மகனின் மகள் எத் தனை கீழ் வரிசையா னுலும் | மகன், மகள், உயர்ந்த, மகனின் மகன், உயர்ந்த மகனின் மகள், சம மான மகனின் மகன் இல்லா விட் டால் | ½ |
| 1க்கு மேல் ஆனுல் | ...... ...... ...... | ⅔ |
| (i) மகனின் மகள் | மகன், மகள், மகனின் மகன் இல்லா விட்டால் | ½ |
| 1க்கு மேல் ஆனுல் | ,, ,, ,, [சமமான மகனின் மகனுடன் ரெசிடி யுவரியாக அடைவர்] | ⅔ |
| (ii) மகனின் மகனின் மகள் | மகன், மகள், மகனின் மகன், மக னின் மகள், மகனின் மகனின் மகன் இல்லாவிட்டால் ...... ...... | ½ |

| பாகஸ்தர் கள் | எப்படியானுல் வாரிசு ஆவர் | பாக விகிதம் |
|---|---|---|
| 1க்கு மேல் ஆனுல் | ...... ...... ...... | $\frac{2}{3}$ |
| ,, | ஒரே மகள் இருந்தால் மகளின் மகள் எத்தனை நபர் ஆனுலும் மகன், மகனின் மகன் இல்லா விட்டால் | $\frac{1}{6}$ |
| | மகனின் மகன் இருந்தால் அவனுடன் ரெசிடியுவரியாக அடைவர். | |
| 8) தாயாரின் வேறு கணவர் மூலம் உள்ள சகோதரர் (9)சகோதரி | குழந்தை, மகனின் குழந்தை எத்தனை கீழ் வரிசையில் ஆனுலும், தகப்பனுர், சரியான பாட்டனுர் இல்லாவிட்டால் | $\frac{1}{6}$ |
| ஷ 1க்கு மேல் ஆனுல் | ,, ,, ,, | $\frac{1}{3}$ |
| 10) மணவழி இல்லா சகோதரி | குழந்தை, மகனின் குழந்தை எத்தனை கீழ் வரிசையானுலும், தகப்பனுர். சரியான பாட்டனுர், சகோதரர், சகோதரி, மணவழி இல்லா சகோதரர், இல்லாவிட்டால் ...... ...... | $\frac{1}{2}$ |
| | 1க்கு மேல் ஆனுல் ...... | $\frac{2}{3}$ |
| | மணவழி இல்லா சகோதரருடன் ரெசிடியுவரியாக அடைவர் | |
| | ஒரே சகோதரி இருந்தால் பாகஸ்தராக $\frac{1}{6}$ அடைவர். | |
| 11) சரியான பாட்டனுர் | குழந்தை, மகனின் குழந்தை எத்தனை கீழ் வரிசையானுலும் இருந்து தகப்பனுர் மேலும் நெருங்கின பாட்டனுர் இல்லாவிட்டால் | $\frac{1}{6}$ |

| பாகஸ்தர்கள் | எப்படியானல் வாரிசு ஆவர் | பாக விகிதம் |
|---|---|---|
| | குழந்தை, ஷ மகனின் குழந்தை, தகப்பனர், அல்லது நெருங்கின பாட்டனர் இல்லா விட்டால்—ரெசிடியுவரியாக அடைவர். | |
| 12) சரியான பாட்டியார் | தாய் வழியானல்—தாயார், நெருங்கின சரியான பாட்டியார் இல்லா விட்டால்—தகப்பனர் வழியானல் தாயார், தகப்பனர், நெருங்கின பாட்டியார், நடுத்தர சரியான பாட்டனர்—இல்லா விட்டால் | $\frac{1}{6}$ |
| 1க்கு மேல் ஆனலும் | ...... ...... ...... | $\frac{1}{6}$ |

(மற்றபடி ஷேர் மாறுதலுக்கு அனுபந்தம் 5 ஆங்கிலத்தில் உள்ளதை பார்க்கவும்)

மிகுதியை அடைபவர்கள் **(Residuaries)**

1. மகன் ,, ,, (இல்லா விட்டால்
2. மகனின் மகன் ,, ,, ,,
3. தகப்பனர் ,, ,, ,,
4. சரியான பாட்டனர் ,, ,, ,,
5. சகோதரர் ,, ,, ,,
6. சகோதரி ,, ,, ,,
7. மணவழி இல்லா சகோதரர் ,, ,,
8. ,, சகோதரி ,, ,,
9. சகோதரனின் மகன் ,, ,,
10. மணவழி இல்லா சகோதரனின் மகன் ,,
11. சகோதரனின் மகனின் மகன் ,,
12. மணவழி இல்லா சகோதரனின் மகனின் மகன் ,,
13. தகப்பனர் மூலம் மாமன்.
14. மணவழி இல்லா தகப்பனர் மூலம் மாமன்.

15. தகப்பனுர் மூலம் மாமனின் மகன்.
16. மணவழி இல்லா தகப்பனுர் மூலம் மாமனின் மகன்.
17. தகப்பனுர் மூலம் மாமனின் மகனின் மகன்.
18. மணவழி இல்லா மாமனின் மகனின் மகன்.

### தூர உறவினர்கள் (**Distant kindred**)

பாகஸ்தர்கள், மிகுதி அடைபவர்கள் இல்லாவிட்டால் :—

| | | |
|---|---|---|
| 1. | கீழ் பரம்பரை வரிசை கிரமமாக | (இல்லாவிட்டால்) |
| 2. | மேல் பரம்பரை வரிசை கிரமமாக | ,, |
| 3. | தகப்பனுர் தாயாரின் கீழ் பரம்பரை வரிசை கிரமமாக | ,, |
| 4. | பாட்டனுர் பாட்டியாரின் கீழ் பரம்பரை வரிசை கிரமமாக | ,, |

### உதாரணம் (38) பாகப் பிரிவினை பத்திரம்

### PARTITION DEED

............வருஷம்............மாதம்..........தேதி.........ல் இருக்கும் (இன்னுர்) குமாரர் (இன்னுர்) —1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ,, | ,, | ,, | ,, | ,, | —2 |
| ,, | ,, | ,, | ,, | ,, | —3 |
| ,, | ,, | ,, | ,, | ,, | —4 |
| ,, | ,, | ,, | ,, | ,, | —5 |

ஆக நாங்கள் ஐவர்களும் செய்து கொண்ட பாகப் பிரிவினை பத்திரமாவது என்ன வென்ருல் :—

1. நம்மில் 1வது நபர் மற்ற நபர்களின் தகப்பனுர். நாம் எல்லோரும் இப்பொழுது ஒரே ஹிந்து கூட்டு குடும்பமாக இருந்து வருகிறோம். நம்மில் 1வது நபருக்கு அதிக வயதாகி விட்டபடியால் அவர் ஜீவதசைக்குப் பிறகு நம் குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் இல்லாமல் இருக்கும் பொருட்டு இப்பொழுதே நம் குடும்ப சொத்துக்களை பிரித்து கொள்வது நலம் என்று தோன்றியதால் இந்த பாகப்பிரிவினை செய்துக் கொள்ளலானேம்.

2. நம்மில் 1வது நபருக்கும் அவர் சகோதர்களுக்கும் ஏற்பட்ட பிரிவினை பத்திரப்படி நமக்கு பிதுரார்ஜிதமாய் பாத்யப்பட்ட வீடு மனை கீழ் "எ" ஷெடியூலில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதன் மதிப்பு ரூ. 12,000/- நாம் எல்லோரும்

சேர்ந்து கஷ்டப்பட்டு சம்பாதித்த சொத்துக்கள் கீழ் "பி" "சி" "டி" ஷெடியூல்களில் குறிக்கப் பட்டுள்ளன. அவைகளின் மதிப்பு முறையே ரூ. 8000/-, ரூ. 6000/- ரூ. 4000/. ஆக சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ. 30,000/- (கால மதிப்பு எதுவோ அதை குறித்துக் கொள்ளவும்).

3. நாம் பொதுவில் கொடுக்க வேண்டிய கடன் "எ" ஷெடியூல் சொத்தின்பேரில் ஏற்பட்டுள்ள அடமானக்கடன் கீழ் "இ" ஷெடியூலில் குறிக்கப்பட்டிருக்கிறது. இதில் இப் பொழுது பாக்கி செலுத்த வேண்டி இருப்பது ரூ. 6000/- இந்த கடன்போக நாம் பிரித்துக்கொள்ள வேண்டிய சொத்து களின் மொத்த மதிப்பு ரூ. 24,000/- இதில் நாம் 2, 3, 4, 5 நபர்கள் ஒவ்வொருவரும் அடைய வேண்டிய பாகத்தின் மதிப்பு ரூ. 6000/-.

4. நம்மில் 1வது நபருக்கு அதிக தள்ளாமையாய் விட்ட படியாலும் அவர் குமாரர்களான நம்மில் மற்ற நபர்கள் அவரை சரிவர காப்பாற்றி வருவதாலும் அவர் தனக்கு பாகம் வேண்டியதில்லை என்று சொன்னதின் பேரில் நம்மில் மற்ற நபர்கள் ஷை சொத்துக்களை கீழ் கண்டபடி பிரித்துக் கொண்டோம். ஷை சொத்துக்களின் மொத்த மதிப்பில் ஒவ் வொரு பாகஸ்தரும் அடைய வேண்டிய சொத்து மதிப்பு ரூ. 6000/- (ரூபாய் ஆருயிரம்).

5. நம்மில் 2, 3, 4, 5 நபர்கள் பாகித்துக் கொண்ட விவரமாவது:—

(i) நம்மில் 2வது நபராகிய நான் என் பாகத்திற்கு ரூ. 12,000/- மதிப்புள்ள கீழ் "எ" ஷெடியூலில் கண்ட சொத்தை சர்வ சுதந்திரமாய் அடைந்து அதன் பேரில் உள்ள அடமானக்கடன் ரூ. 6000/-த்தை நான் கட்டிக்கொள் ளக்கடவேன். இப்படியாக நம்மில் 2வது நபர் ஆகிய நான் அடைந்த பாக மதிப்பு ரூ. 6000/-.

(ii) நம்மில் 3வது நபராகிய நான் என் பாகத்திற்கு ரூ. 8000/- மதிப்புள்ள கீழ் "பி" ஷெடியூலில் கண்ட சொத்தை சர்வ சுதந்திரமாய் அடைந்து நம்மில் 5வது நப ருக்கு ரூ. 2000/- கொடுத்து விட வேண்டியது. அதன்படி 3வது நபராகிய நான் 5வது நபருக்கு இன்று ரூ. 2000/- செலுத்தி விட்டபடியால் நம்மில் 3வது நபர் ஆகிய நான் அடைந்த பாக மதிப்பு ரூ. 6000/-.

(iii) நம்மில் 4வது நபராகிய நான் ரூ. 6000/- மதிப்புள்ள கீழ் "சி" ஷெடியூலில் கண்ட சொத்தை என் பாகத்திற்கு சர்வ சுதந்திரமாய் அடைந்து கொண்ட படியால் 4வது நபரான என்பாக மதிப்பும் ரூ. 6000/-.

(iv) நம்மில் 5வது நபராகிய நான் ரூ. 4000/- மதிப் புள்ள கீழ் "டி" ஷெடியூலில் கண்ட சொத்தையும் நம்மில்

3வது நபர் கொடுத்த ரூ. 2000/-த்தையும் சர்வசுதந்திரமாய் அடைந்து கொண்டபடியால் 5வது நபரான நான் அடைந்த பாகத்தின் மதிப்பும் ரூ. 6000/-.

6. மேற்கண்டபடி நாம் அடைந்த சொத்துக்களை நாம் தனித்தனியே நம் சுவாதீனம் செய்து கொண்டோம். அவைகளை நாம் தனித்தனியே சொந்தமாய் எல்லாவகை மாற்றங்களும் செய்ய உறித்தாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளக் கடவோம்.

7. மேற் கொண்டும் நாம் பிரித்துக்கொள்ள வேண்டிய சொத்துக்களாவது கடன்களாவது ஒன்றும் கிடையாது. நம்மில் யாராவது தனிமையில் கடன் பட்டிருந்தால் அதை அவரே தீர்த்துக்கொள்ள வேண்டியது. இனி நமக்குள் சுப மங்கள சூதக பாத்யமே தவிற தனருண பாத்யதை ஒன்றும் கிடையாது.

8. இதனால் நாம் தனித்தனியே அடைந்த சொத்துக்கு கார்பொரேஷனில் சொந்தக்காரார் என்று பதிவு செய்து கொள்ளவும், பட்டா மாற்றிக் கொள்ளவும் நம்மில் மற்ற நபர்கள் தேவையான கையெழுத்து செய்து உதவி செய்ய சம்மதிக்கிறோம்.

9. நாம் இதனால் அடைந்த சொத்தைச் சேர்ந்த பத்திரங்களையும் நாம் பிரித்து எடுத்துக் கொண்டு விட்டோம். இந்த பாகப் பிரிவினை அசல் பத்திரம் நம்மில் 2 வது நபரிடம் இருக்க வேண்டியது. மற்ற நபர்கன் டியூப்ளிகேட் அல்லது நகல் வைத்துக் கொள்ள வேண்டியது.

இந்தப்படிக்கு நாம் மனப்பூர்வமாய் சம்மதித்து செய்து கொண்ட பாகப்பிரிவினை பத்திரம்.

**" எ " ஷெடியூல் (சொத்து விவரம்)**

.............

**" பி " ஷெடியூல் (சொத்து விவரம்)**

.............

**,, சி " ஷெடியூல் (சொத்து விவரம்)**

.............

**" டி " ஷெடியூல் (சொத்து விவரம்)**

.............

**" இ " ஷெடியூல் (கடன் விவரம்)**

**சாக்ஷிகள்.**

பாகித்துக் கொள்பவர்கள்

**குறிப்புகள்**

(i) ஒரே சொத்தை பல நபர்கள் பிரித்து கொண்டால் மொத்த சொத்துக்கும் பிளான் வரைந்து அதில் ஒவ்வொருவர் எடுத்துக் கொள்ளும் பாகத்தை வெவ்வேறு வர்ணமிட்டு

அளவுகளுடன் காண்பித்து அவரவர் அடையும் பாகத்தை யும் தனித்தனி ஷெடியூலில் விவரித்து எழுதுவது அவசிய மாகும்.

(ii) ஒரு பாகத்திலேயே குழாய், த. பா. க., சாக்கடை, மின்சார மீடர் இருந்தால் மற்ற பாகஸ்தர்கள் தங்கள் பாகத் தில் அவைகளை போட்டுக் கொள்ள வேண்டிய கால தவணை யையும், பிரிவினை சுவர் எங்கெங்கேயும், அதை யார் சிலவிலும் போட்டுக் கொள்ள வேண்டும் என்பதையும் எங்கெந்த எல்லை சுவர்கள் யார் யாருக்கு சொந்தமாகும் என் பதையும் குறித்து எழுதிக் கொள்ள வேண்டும்.

(iii) ஒருவர் பாகம் பின்னல் இருக்கும் பாகமானல் அதிலிருந்து தெருவுக்குப் போக விட்டிருக்கும் சந்து வழியை அளவுகளுடன் பிளானில் காண்பித்து ஷெடியூலிலும் குறித் துக்கொள்ளவும். அந்த சந்து வழி யார் யாருக்கு பொதுவா யிருக்கும் என்பதையும் அல்லது சொந்தமாகும் என்பதையும் குறித்துக் கொள்ளவும்.

(iv) பாகத் தொகை பின்னல் கொடுப்பதானல் கொடுக்கும்போது ரசீது ரிஜிஸ்டர் செய்து கொள்ளவும். பாகப் பிரிவினை பத்திரம் ரிஜிஸ்டராகும்போதே அதை கொடுத்து விட்டால் பத்திரத்தில் அதை எழுதி விடவும்.

(v) ஒரே சொத்தை பலர் பிரித்துக் கொண்டால் அதைச் சேர்ந்த பழைய பத்திரங்களை யார் வைத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் வைத்துக் கொள்பவர் மற்ற நபர் களுக்கு வேண்டியபோது காண்பிக்க வேண்டும் என்பதையும் எழுதிக் கொள்ளவும்.

(vi) பாகப்பிரிவினை பத்திரத்திற்கு முத்திரை கட்டணம் அதிக மதிப்பு பாகத்திலிருந்து பிரிந்த பாகம் அல்லது பாகங் களுக்கு வாங்க வேண்டும். பூரா சொத்தின் மதிப்பில் அட மானக் கடன்களை மட்டும் வட்டி பாக்கியுடன் கழித்து பாக மதிப்பை நிர்ணயித்து சமபாகத்துடன் 5 நபர்களில் ஒருவர் பிரிந்தால் 1 பாக மதிப்பிற்கும், 2 நபர் பிரிந்தால் 2 பாக மதிப் பிற்கும், 3 நபர் பிரிந்தால் 3 பாக மதிப்பிற்கும், 4 நபர்கள் அதாவது எல்லோரும் பிரிந்தால் 1 பாகம் நீக்கி மற்ற 4 பாகங் களுக்கும் முத்திரை கட்டணம் வாங்க வேண்டும். பிரிந்த பாகங்கள் சம மதிப்பாக இல்லா விட்டால் அதிக மதிப்பு பாகத்தை நீக்கி மற்ற பிரிந்த பாகங்களின் மொத்த மதிப் பிற்கும் கட்டணம் வாங்க வேண்டும்.

## உதாரணம் (39) பாக பாத்யதை விடுதலை பத்திரம்

## RELEASE OF PARTITION RIGHT

தேதி—இன்னருக்கு—இன்னர்—எழுதி கொடுப்பது.

1. உங்களில் 1 வது நபரின் கணவரும் என்னுடையவும் உங்களில் 2 வது நபருடையவும் தகப்பனருமான—(இன்னர்)

—கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை—(தேதி)—ல் டாகுமென்ட் நெ. ......... மூலமாக கிறயம் பெற்று அவர் ஆண்டு அனுபவித்து வந்து—(தேதி)—ல் இறந்து விட்டார். அது முதல் ஷெ சொத்தானது ஹிந்து வாரீசு சட்டப்படி நம் மூவர் களுக்கும் சொந்தமாய் நம் சுவாதீன அனுபோகத்தில் இருந்து வருகிறது, அதில் உங்கள் ஒவ்வொருவருக்கும் 3ல் 1 பாகமும் எனக்கு 3ல் 1 பாகமும் இருந்து வருகிறது.

2. என் வியாபார அபிவிருத்திக்காக [நான் வேறு வீடு வாங்கிக் கொள்ள] ஷெ என் பாக மதிப்பை எனக்கு ரொக்கமாக கொடுக்கும்படி நான் கேட்டு நீங்கள் அதன் படியே கொடுக்க ஒப்புக் கொண்டீர்கள். பூரா சொத்து மதிப்பு ரூ. /-ல் என்பாக மதிப்பு ரூ. /-

3. [இந்த விடுதலை பத்திரம் ரிஜிஸ்டராகும்போது சப் ரிஜிஸ்டிரார் அவர்கள் முன்னிலையில்] இந்த விடுதலை பத்திரத்தில் நான் கையெழுத்து செய்ததும் ஷெ என் பாக மதிப்பு தொகை ரூ. /- இதை நீங்கள் எனக்கு செலுத்தி நான் பெற்றுக் கொண்டு விட்டபடியால் கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தில் எனக்குள்ள பாக பாத்யதையை நான் இதனால் உங்களுக்கு ரிலீஸ் செய்து கொடுத்து விட்டேன்.

4. ஆகையால் இன்று முதல் மேற்படி சொத்தில் எனக்கு எவவித பாக பாத்யதையும் கிடையாது. இனி நீங்களே மேற்படி சொத்தில் என் பாகத்தையும் சேர்த்து சர்வ சுதந்திரமாய் ஆண்டு அனுபவித்துக் கொள்ளவும். இதில் எவ்வித கலனுமில்லை. ஏதாவது இருந்தால் நானே அதை தீர்க்க கடவேன்.

இந்தப்படிக்கு நான் எழுதிக் கொடுத்த ரிலீஸ் என்கிற விடுதலை பத்திரம்.

**சாக்ஷிகள்** விடுதலை செய்பவர்

### உதாரணம் (40) கருதப்படும் பாக பாத்யதை ரிலீஸ்

### RELEASE OF ALLEGED PARTITION RIGHT

தேதி—இன்னார்க்கு இன்னார்—எழுதிக் கொடுப்பது

**1.** நான் உங்களுடைய இளைய சகோதரன், நம் இருவர் களுக்கும் பொதுவாய் நாம் பிரித்துக் கொள்ளக்கூடிய பிதுரார்ஜித சொத்துக்களாவது சுயார்ஜித சொத்துக் களாவது ஒன்றும் கிடையாது. நீங்கள் (இன்னது) கடை வைத்து சுயார்ஜிதமாய் சம்பாதித்த தொகையைக் கொண்டு கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை வாங்கி ஆண்டு அனுப வித்து வருகிறீர்கள். அதில் எனக்கு எவ்வித பாத்யதையும் கிடையாது.

2. மேற்படி உங்கள் கடையில் நான் கூலி பெற்று வேலை செய்து வருகிறேன். ஆனால் நான் உங்கள் சகோதரனாபடியால் ஷை உங்கள் சொத்தில் எனக்கு பாகம் உண்டென கருதப்படுகிறது. இது உண்மை இல்லையானாலும் சந்தேகத்தை நிவர்த்தி செய்ய நீங்கள் என்னை ரிலீஸ் பத்திரம் ரிஜிஸ்டர் செய்து கொடுக்கும்படி கேட்டதற்கு ரூ. /- கொடுத்தால் அப்படி செய்து கொடுப்பதாக நான் ஒப்புக் கொண்டேன்.

3. அதன்படி இந்த ரிலீஸ் பத்திரத்தில் நான் கையெழுத்து செய்ததும் நீங்கள் எனக்கு ரூ. /- கொடுத்து விட்டீர்கள்.

4. ஆகையால் கீழ் ஷெடியூலில் கண்ட உங்களுடைய சொத்தில் எனக்கு எவ்வித பாத்யதையும் இல்லாவிட்டாலும் இருப்பதாக கருதப்படுவதால் சந்தேகத்தை நிவரத்தி செய்ய அதில் எனக்கு உண்டென கருதப்படும் பாக பாத்யதையை நான் இதனால் உங்களுக்கு ரிலீஸ் செய்து கொடுத்து விட்டேன்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த ரிலீஸ் பத்திரம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்.**

ரிலீஸ் செய்பவர்

# அத்தியாயம்—7

## கூட்டு ஒப்பந்தம்

## PARTNERSHIP

**சட்டம் :** 20 நபர்களுக்கு மேற்படாமல் ஒன்று சேர்ந்து அவர்கள் எல்லோருமாவது அவர்களில் எவர்களாவது அவர்கள் பொது நலனுக்கு செய்யும் வேலையிலிருந்து வரும் லாபத்தை பிரித்துக் கொள்ள ஒப்புக்கொள்வது கூட்டு ஒப்பந்தம்.

(இந்திய கூட்டு சட்டம் பிரிவு 4 படி)

(இந்திய கம்பெனி சட்டம் பிரிவு 4 படி)

ஒப்பந்தம் வேறு விதமாக இல்லாவிட்டால் கூட்டு சேர்ந்தவர்கள் லாபத்தையும் நஷ்டத்தையும் சமபாகமாக பிரித்துக்கொள்ளவேண்டும்.

(இந்திய கூட்டு சட்டம் பிரிவு 13 படி)

கூட்டு ஒப்பந்தத்தை "கூட்டு ரிஜிஸ்டிரார்" ஆபீசில் பதிவுசெய்து கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் கூட்டாளிகூட்டின் பேரிலும் மற்ற கூட்டாளிகள் பேரிலும் தாவா செய்ய முடியாது. கூட்டுக்காகவும் வெளியார் பேரில் தாவா செய்ய முடியாது.

(இந்திய கூட்டு சட்டம் பிரிவு 69 (1) (2) படி)

### உதாரணம் (41)—கூட்டு ஒப்பந்தம்

### PARTNERSHIP DEED

……………வருஷம்……………மாதம்……………தேதி

…………ல் இருக்கும் (இன்னார்) குமாரர் (இன்னார்) —1

" " " " " —2

" " " " " —3

" " " " " —4

" " " " " —5

ஆக நாங்கள் ஐவர்களும் சேர்ந்து செய்துக் கொண்ட கூட்டு ஒப்பந்தமாவது என்னவென்றால் :—

1. இன்று முதல் நாம் கூட்டாக (இன்னது) வாங்கி விற்பனை செய்வது, [(இன்னது) பொருள் உற்பத்தி செய்து விற்பனை செய்வது] கட்டிடம், தொழில்சாலை கட்டிக் கொடுப்பது, [பட்டரை வைத்து இயந்திர தொழில் வேலை செய்வது]

(வேறு தொழிலானுல் அதை குறிக்கவும்) என்பது இந்த கூட்டின் முக்கிய நோக்கமாகும்.

2. இந்த கூட்டின் பெயர் ......................

3. இதன் அலுவலகம் இப்பொழுது (ஊர், தெருவு, கதவு எண் ............)ல் அமைக்கப்பட்டிருக்கிறது. இதை வேறு இடத்திற்கு நாம் தேவையானபோது மாற்றிக் கொள்ளலாம்.

4. இந்த கூட்டை நாம் எப்பொழுது வேண்டுமானுலும் கலைத்துக் கொள்ளலாம். [இந்த கூட்டு......வருஷங்களுக்கு நீடித்திருக்க வேண்டியது)

5. இதற்கு மூலதனம் செலுத்தியது—

| | | | |
|---|---|---|---|
| 1வது நபர் (இன்னுர்) | | ரூ. | /- |
| 2வது நபர் | ,, | ரூ. | /- |
| 3வது நபர் | ,, | ரூ, | /- |
| 4வது நபர் | ,, | ரூ. | /- |
| 5வது நபர் | ,, | ரூ. | /- |

6. பிரதி வருஷம் மார்ச்சு மீ 31ம் தேதி இந்த கூட்டு வியாபாரத்தின் லாப நஷ்ட கணக்கை நாம் இப்பொழுது நியமித்துக் கொண்டிருக்கும் ஆடிடர் மூலமாக தயார் செய்து அந்த அறிக்கைபடி லாப நஷ்டத்தை நாம் அடைந்து கொள்ள வேண்டியது.

7. அப்படி ஏற்படும் லாப நஷ்டத்தை நம் மூலதன பாகாசாரபடி நாம் பிரித்து எடுத்துக் கொள்ள வேண்டியது. நஷடம் ஏற்பட்டிருந்தால் அதையும் நம் மூலதன பாகாசாரப்படி வியாபாரத்திற்கு நாம் திருப்பிக் கொடுப்பதை பற்றி பிரதி வருஷமும் ஏப்ரல் மாதம்முடிவதற்குள் நாம் கூடி தீர்மானித்து அதன்படி செய்யவேண்டியது.

8. இப்பொழுது நாம் நியமித்துக் கொண்டுள்ளபடி நம்மில் 1வது நபர் மானேஜராகவும், 2வது நபர் பொக்கிஷதாராகவும் இருந்து இந்த கூட்டு வியாபாரத்தை நடத்திவரவேண்டியது. இந்த ஏற்பாட்டை பிரதி வருஷமும் ஏப்ரல் மாதத்தில் கூடும் போது யோசித்து மாற்றிக் கொள்ளலாம். மானேஜரும், பொக்கிஷதாரும் ஒவ்வொருவரும் சம்பளமாக ரூ. /- பிரதி மாதமும் எடுத்துக் கொள்ளலாம்.

9. இந்த கூட்டு வியாபாரத்திற்காக வாங்கப்படும் விற்கப்படும் சரக்குகளையும், அவைகளின் விவரத்தையும் தொகைகளையும், குமாஸ்தா வேலை யாட்கள் இவர்கள் சம்பளம் கூலி, வண்டி சத்தம், போகவர சிலவு, கமிஷன், விற்பனைவரி, கடை வாடகை, வருமானவரி மற்றும் வியாபாரத்தை பற்றிய

சிலவுகளையும், தொகைகளையும் அப்போதைக்கப் போது மானேஜர் நேரிலும் குமாஸ்தாக்கள் மூலமாகவும் தகுந்த புஸ்தகங்களில் பதிவு செய்து கொண்டு வரவேண்டியது.

10. இந்த கூட்டு வியாபாரத்தில் வரும் செக்குகள், டிராப்டுகள், பில்கள், ரொக்க தொகைகள் இவைகளை வியாபாரகூட்டு பெயரில் உள்ள பாங்கு கணக்கில் பொக்கிஷதார் கையில் ரொக்கம் ரூ. /-க்கு மேல் வைத்துக் கொள்ளாமல் அப்போதைக்கப் போது போட்டுக் கொண்டு வர வேண்டியது. வியாபாரத்திலிருந்து வெளியாருக்கு செலுத்த வேண்டிய தொகைகளை ரொக்க மாகவோ செக்கு மூலமாகவோ மானேஜர் பொக்கிஷதார் மூலமாக கொடுத்துக் கொண்டு வரவேண்டியது. இவைகளையும் கணக்கு புஸ்தகங்களில் உடனுக்குடன் பதிவு செய்து கொண்டு வரவேண்டியது. பிரதி தினமும் கடையை மூடும் போது அன்றுடும் நடந்த ரொக்க வரவு சிலவுகளை சரிபார்த்து தினக்குறிப் பேட்டில் மானேஜரும் பொக்கிஷதாரும் கையெழுத்து செய்து வரவேண்டியது.

11. இந்த வியாபாரத்திற்கு நிரந்திரமாய் வேண்டிய குமாஸ்தாக்கள், வேலையாட்கள் முதலியவர்களை நம்மில் மெஜாரிடியார் இஷ்டப்படி சம்பளம் நிர்ணயித்து அமர்திக் கொள்ள வேண்டியது. அவர்களை வேலையிலிருந்து நீக்குவதானுலும் மறுபடியும வேலைக்கு வைத்துக் கொள்வதானுலும் நம்மில் மெஜாரிடி இஷ்டப்படியே செய்யவேண்டியது. சொற்ப கால வேலைக்கு வேண்டியவர்களை மானேஜரும் பொக்கிஷதாரும் நியமித்துக் கொள்ளலாம்.

12. நம்மில் எந்த நபரின் பெயரில் "கான்டிரேக்டு" எடுத்தாலும் அதை நம்கூட்டு வியாபாரத்தின் மூலமாகவே முடித்துக்கொள்ள வேண்டியது.

13. இந்த கூட்டு வியாபாரம் நடக்கும் வரையில் நம்மில் எவரும் தனிமையாகவோ வேறுகூட்டாகவோ சேர்ந்து இதே வியாபாரத்தை நடத்தக்கூடாது. இந்த கூட்டு வியாபாரத்தை நாம் நம்முடைய பொது நலனை கருதி ஒற்றுமையாக நடத்தி வரவேண்டியது. இந்த கூட்டின் வியாபார விவரங்களை நாம் ஒருவருக்கொருவர் எதையும் ஒளிக்காமல் உண்மையாக தெரிவித்துக் கொள்ள வேண்டியது.

14. இந்த கூட்டு வியாபாரத்தின் பேரிலாவது அதைச் சேர்ந்த சொத்துக்களின் பேரிலாவது நம்மில் எவரும் தனிமையாக கடன் வாங்ககூடாது. வேண்டுமானுல் நாம் எல்லோரும் சேர்ந்து கையெழுத்து செய்து கடன் வாங்கி கொள்ளலாம்.

15. இந்த கூட்டிலிருந்து நம்மில் யாராவது ஒருவர் விலகிக்கொள்ள விரும்பினுல் ஒரு மாதம் முன்னதாகவே மற்ற

கூட்டு நபர்களுக்கு தெரிவித்து தனக்கு சேரவேண்டிய மூல தனத்தையும் விலக மனு செய்த தேதிவரை லாபம் சேர வேண்டியதையும் பெற்றுக் கொண்டு விலகிக்கொள்ள வேண்டியது. நஷ்டம் ஏற்பட்டிருந்தால் அதை மூலதன பாகாசாரப்படி செலுத்த வேண்டியதை கழித்து பெற்றுக் கொள்ள வேண்டியது.

16. இந்த கூட்டு வியாபாரம் முடிவு பெற்றதும் இதைச் சேர்ந்த சரக்குகள், சொத்துக்கள், கையிருப்பு ரொக்கம், பாங்கியில் உள்ள தொகை, வெளியிலிருந்து வரவேண்டிய பணம், கணக்குபடி வரவேண்டிய பாக்கிகள், கூட்டின் நற் பெயர், இவைகளை விற்ருே வசூல் செய்தோ மதிப்பிட்டோ வரும் தொகையிலிருந்து நாம் கூட்டிற்காக வெளியாருக்கு கொடுக்கவேண்டிய தொகைகளை செலுத்தி விட்டு மிகுதியுள் ளதை நம்மூலதன பாகாசாரப்படி நாம் பிரித்து எடுத்துக் கொள்ள வேண்டியது.

இந்தப் படிக்கு நாம் செய்து கொண்ட கூட்டு வியாபார ஒப்பந்தம்.

**சாக்ஷிகள்**

1.
2.
3.
4.
5.

கூட்டாளிகள்.

### உதாரணம் (42)—கூட்டு கலைத்தல் பத்திரம்

### DEED OF PARTNERSHIP DISSOLUTION

............வருஷம்............மாதம்.........தேதி .........ல்

இருக்கும் (இன்னுர் குமாரர்) (இன்னுர்) —1
,, ,, ,, ,, ,, —2
,, ,, ,, ,, ,, —3
,, ,, ,, ,, ,, —4
,, ,, ,, ,, ,, —5

ஆக நாங்கள் செய்து கொண்ட கூட்டு வியாபார கலைத் தல் பத்திரமாவது என்ன வென்ருல் :—

1. .........தேதியில் நாம் ஐவர்களும் சேர்ந்து செய்து கொண்ட கூட்டு ஒப்பந்தப்படி.........என்ற பெயரில்......... இடத்தில்............வியாபாரம் கூட்டாக நடத்தி வருகிருேம். அதிலிருந்து நம்மில் 4, 5 நபர்கள் விலகிக் கொள்வதாய்

தெரியப்படுத்திய படியால்..................தேதியில் ஷ வியாபா ரத்தை நிறுத்தி கூட்டிலிருந்து 4, 5, நபர்களுக்கு சேரவேண் டியதை செலுத்தி விட்டு பிறகு நம்மில் மற்ற 1, 2, 3 நபர்கள் அதை நடத்து வதாய் ஒப்புக்கொண்டோம்.

2. அதன்படி நம் கூட்டின் சரக்குகள், சொத்துக்கள், கடையிலும் பாங்கிலும் உள்ள தொகைகள், வரவேண்டிய பாக்கிகள், கூட்டின் நற்பெயர் இவைகளை மதிப்பிட்டு அதி லிருந்து வெளியாருக்கு கொடுக்க வேண்டிய தொகைகளை கழித்து கணக்கு பார்த்ததில் மூலதனம் லாபம் இவைகளுக் காக வியாபாரத்தை நிறுத்திய தேதியில் பாகாசாரப் படி 4வது நபருக்கு ரூ. /-ம் 5வது நபருக்கு ரூ. /-ம் கூட்டிலிருந்து சேரவேண்டிய தென்று நாம் ஒவ்வொருவரும் ஒப்புக்கொண்டோம்.

3. அதன்படி 4, 5 நபர்களாகிய நாங்கள் ஒவ்வொரு வரும் தனித்தனியே கூட்டிலிருந்து 4வது நபராகிய நான் ரூ. /-ம் 5வது நபராகிய நான் ரூ. /-ம் இன்று பெற்றுக் கொண்டு கூட்டிலிருந்து விலகிக் கொண்டு விட் டோம், இனி கூட்டின் பேரிலாவது 1, 2, 3 நபர்களின் பேரி லாவது 4, 5 நபர்களாகிய எங்களுக்கு எவ்வித தாவாவும் கிடையாது. 1, 2, 3 நபர்களாகிய நாங்கள் இந்த கூட்டி லிருந்தும் அதன் கடன்களிலிருந்தும் 4, 5 நபர்களை இதனல் விடுதலை செய்து விட்டோம்.

4. இதுவரை ஏற்பட்டுள்ள கூட்டு கடன்களை 1, 2, 3 நபர்களாகிய நாங்களே இனி கட்டிக் கொள்ளகடவோம். அவைகளுக்காக 4, 5 நபர்கள் பேரிலும் வியாஜ்ஜியம் ஏற்பட்டால் 1, 2, 3 நபர்களாகிய நாங்கள் அதை தீர்த்து வைக்க சம்மதிக்கிறோம்.

இந்தப்படிக்கு நாம் செய்து கொண்ட கூட்டு கலைத்தல் பத்திரம்.

**சாக்ஷிகள்**

1.
2.
3.
4.
5.

கூட்டாளிகள்.

## பவர் (அதிகார) பத்திரம்

## POWER OF ATTORNEY

**சட்டம் :—**ஒருவர் தன் அசையும் அல்லது அசையா சொத்தை பற்றி தனக்காக தன் பெயரில் ஒன்று அல்லது பல காரியங்கள் செய்ய மற்றொரு வருக்கு அதிகாரம் கொடுப்பது பவர் பத்திரமாகும்,

பவர் கொடுத்தவர் அதை எப்பொழுது வேண்டுமானாலும் ரத்து செய்து விடலாம். ஆனால் பவர் பெற்றவருக்கு பவர் மூலம் ஏதாவது பாத்யதை இருந்தால் அதற்கு கெடுதலாகும்படி பவரை ரத்து செய்ய முடியாது.

[இந்திய ஒப்பந்த சட்டம் பிரிவு 201, 202 படி]

ஒருவர் கையெழுத்து செய்த பத்திரத்தை மற்றொருவர் ரிஜிஸ்டிரார் ஆபீசில் தாக்கல் செய்து ரிஜிஸ்டர் செய்ய வேண்டுமானால் அதற்கு ரிஜிஸ்டிரார் முன்னிலையில் கையெழுத்து செய்து அத்தாக்ஷி செய்த பவர் பத்திரம் வேண்டும். பவர் கொடுப்பவர் ரிஜிஸ்டிரேஷன் சட்டம் இல்லாத இடத்தில் இருந்தால் மாஜிஸ்டிரேட் அத்தாக்ஷி செய்த பவர் பத்திரம் போதும். வெளி நாடுகளில் இருந்தால் நோடரி பப்ளிக், ஜட்ஜ், மாஜிஸ்டிரேட், பிரமாண கமிஷனர், கான்சல்ஜெனரல் இவர்கள் யாராவது அத்தாக்ஷி செய்த பவர்போதும்.

[ரிஜிஸ்டிரேஷன் சட்டம் பிரிவு 32, 33 படி]

## உதாரணம் (43)—பொது அதிகாரம் (பல காரியங்களுக்கு)

## GENERAL POWER OF ATTORNEY

தேதி—இன்னாருக்கு இன்னார்—எழுதிக்கொடுப்பது.

எனக்காக என் பெயரில் கீழ்கண்ட காரியங்களை செய்ய நான் இதனால் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன்,

1. எனக்கு சொத்து பொறுப்பின் பேரிலும் பொறுப்பு இல்லாமலும் வர வேண்டிய தொகைகளை கேழ்க்கவும், வசூல் செய்து ரசீது கொடுக்கவும், அடமானமானால் பத்திரத்தில் வரவு வைத்து கையெழுத்து செய்து கொடுக்கவும். வேண்டுமானால் "தீர்ப்பு குறிப்பு" ரிஜிஸ்டர் செய்யவும், பண உறுதி சீட்டானால் அதில் வரவு வைத்து திருப்பிக் கொடுத்து விடவும், பாக்கிகளை கொடுக்காவிட்டால் நோடீஸ் கொடுத்து தாவா செய்து வசூல் செய்யவும்,

2. என் அடமானப் பத்திரத்தில் சொத்தை விற்பனை செய்ய அதிகாரமிருந்தால் ஏல கம்பெனி மூலம் அடமான சொத்தை ஏலம் போடவும், ஏலத் தொகையிலிருந்து அடமான பாக்கியை ஏல சிலவுடன் வசூல் செய்யவும், ஏலத்தில் எடுப்பவருக்கு கிரயப்பத்திரம் ரிஜிஸ்டர் செய்து கொடுக்கவும், வாடகைகளை வசூல் செய்யவும், குடக்கூலிக்காரர்களை காலி செய்யவும், அவைகளுக்கான கோர்ட்டு நடவடிக்கைகள் எடுக்கவும், காலி செய்து சொத்தை சுவாதீனம் பெறவும், வேறு குடி வைக்கவும்,

4. எனக்கு சொந்தமான நிலங்களை பயிர் செய்ய குத்தகைக்கு விடவும், குத்தகையை கொடுக்காவிட்டால் தாவா செய்து வசூல் செய்யவும். வசூலான தானியத்தை அரசாங்க அனுமதி பெற்று என் இடத்தில் சேர்ப்பிக்கவும், குத்தகை

பெறுபவர்களை காலி செய்யவும், வேறு குத்தகைகாரர்கள் நியமித்து சொத்தை ஒப்படைக்கவும், குத்தகை தவணை முடிந்ததும் சொத்தை மறு சுவாதீனம் பெறவும்,

5. என் அசையா சொத்துக்களை நான் சொல்வது போல் கிரயம், அடமானம், மற்றும் எந்த வகை மாற்றுதலும் செய்யவும், அவைகளுக்காக பத்திரம் எழுதி எனக்காக என்று சொல்லி நீங்கள் கையெழுத்து செய்த பத்திரங்களையும், நான் கையெழுத்து செய்து கொடுக்கும் பத்திரங்களையும் சரியான சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில் தாக்கல் செய்து நான் கையெழுத்து செய்ததானல் என் கையெழுத்தை ஒப்புக் கொண்டும், குறிப்புகளிலும், பட்டா மனுவிலும், தேவையான விண்ணப்பங்களிலும், வாக்கு மூலங்களிலும் ரிஜிஸ்டிரேஷன் என்டார்ஸ்மென்டிலும் கையெழுத்து செய்து தொகைகளை பத்திர வாசகப்படி பெற்றுக் கொண்டும் ரிஜிஸ்டிரேஷனை பூர்த்தி செய்யவும்,

6. எனக்கு வரவேண்டிய சொத்துக்களுக்கு கோர்டில் தாவா செய்யவும், அவைகளைப்பற்றி என் பேரில் தாவா ஏற்பட்டால் அவைகளை தடுத்து நடத்தவும், அப்பீல், ரிவிஷன் மனு தாக்கல் செய்யவும், அவைகளை தடுத்து நடத்தவும், டிகிரி பெறவும், அவைகளை நிறைவேற்றவும், சமாதானம் செய்து கொள்ளவும்,

7. எனக்காக செய்யும் வியாஜ்ஜியங்களுக்கும் என் பேரில் ஏற்படும் வியாஜ்ஜியங்களுக்கும் அட்வொகேட் நியமிக்கவும், அட்வொகேட்டை மாற்றவும், வக்காலத்து பிராது, எழுதின வாக்கு மூலம், எதிர்வாதம், மனு பிரமாண வாக்கு மூலம் இவைகளை கைஎழுத்து செய்து தாக்கல் செய்து நடத்தவும்,

8. எல்லா கோர்டுகளிலும், அரசாங்க அதிகாரிகளிடமும், மாஜிஸ்டிரேட், போர்டு, கார்பொரேஷன், பஞ்சாயத்து, யூனியன் இவைகளிலும் எனக்காக ஆஜராகி வியாஜ்ஜியங்களையும் விவகாரங்களையும் நடத்தவும், எதிர்வாதம் செய்யவும்,

9. கோர்டு டிகிரிகளையும், உத்தரவுகளையும் நிறைவேற்றி சொத்துக்களையும் தொகைகளையும் வசூல் செய்யவும், கோர்டில் கட்டப்படும் தொகைகளை வாங்கவும், சொத்துக்களை சுவாதீனம் பெறவும், கோர்டு நடவடிக்கைகளில் சமாதானம் செய்யவும்,

10. நான் அடமானங்களின் பேரிலும், பொறுப்பு இல்லாமலும் வாங்கியிருக்கும் கடன்களை எனக்காக வசூலாகும் என்னுடைய தொகையிலிருந்து தீர்க்கவும், ரசீது பெறவும், "அடமான தீர்ப்பு குறிப்பு" ரிஜீஸ்டர் செய்து பெறவும், பத்திரஙகளையும், சொத்துக்களையும் சுவாதீனம் பெற்றுக் கொள்ளவும்,

11. எனக்காக வசூலாகும் தொகைக்கு வரவு சிலவு கணக்கு வைத்துக் கொண்டு வசூலாகும் தொகையிலிருந்து

சிலவுகள் போக மிகுதி தொகையில் நீங்கள் ரூ. 100/-க்கு ரூ. /-ஆக எடுத்துக் கொண்டு மிகுதியை பிரதி மாதமும் எனக்கு கணக்கு விவரத்துடன் அனுப்பி வைக்கவும், [என்............பாங்கி கணக்கில் கட்டவும்]

12. மேற்கண்டபடியும் ஷை காரியங்களுக்கும் நீங்கள் எனக்காக செய்வதை நானே நேரில் இருந்து செய்ததாக ஒப்புக்கொள்வேனுகவும்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த பல அதிகாரங்களுக்கான பொதுபவர் பத்திரம்.

**சாக்ஷிகள்** பவர்கொடுப்பவர்.

**குறிப்பு**:—பவர் கொடுப்பவர் வேறு அதிகாரம் எது வேண்டுமானுலும் சேர்த்து எழுதிக் கொள்ளலாம்.

## உதாரணம் (44) கடை நடத்த அதிகாரம்

## AGENCY TO CONDUCT BUSINESS

தேதி—இன்னுருக்கு இன்னுர்—எழுதிக் கொடுப்பது.

1. நான் இப்பொழுது சென்னையில்......(இடம்)......ல் ஒரு ஜவுளி கடை சொந்தமாக...............பெயரில் நடத்தி வருகிறேன். அதை விருத்தி செய்ய—(இடம்)—ல் ஒரு கிளை கடை வைத்து நடத்த தீர்மானித்து அதற்கு உங்களை என் ஏஜென்டாக இதனுல் நியமித்திருக்கிறேன்.

2. ஷை கிளை கடைக்கு நான் அனுப்பும் சரக்குகளை நான் குறிக்கும் விலைக்கு குறையாமல் கூடுமானவரை நல்ல விலைக்கு நீங்கள் விற்பனை செய்து கடையை நடத்தி வர வேண்டியது. நீங்களும் கடைக்காக சரக்குகள் வாங்கி விற்றுக் கொண்டு வரலாம். ஷை கிளை கடை இப்பொழுது—(ஊர், தெருவு, கதவு எண்............)—ல் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

3. ஷை கடையை நடத்த தேவையான லைஸென்சு பெற்று அரசாங்க விதிகளுக்கு உட்பட்டு நீங்கள் கடையை நடத்தி வரவேண்டியது.

4. மேற்படி கடையை நடத்த தேவையான குமாஸ்தாக்களையும், விற்பனையாளர்களையும், வேலையாட்களையும் நீங்களே நியமித்துக் கொண்டு அவர்களுக்கு கொடுக்க வேண்டிய சம்பளத்தையும் கூலியையும் நிர்ணயித்து கொடுத்துக் கொண்டு வர வேண்டியது.

5. அன்றுடம் நடக்கும் விற்பனைகளையும், வாங்குதலையும், வரவு சிலவுகளையும் தகுந்த கணக்கு புஸ்தகங்களில் பதிவு செய்து கொண்டு பிரதி மாதமும் கடைசி நாள் கணக்கெடுத்து லாப நஷ்டத்தை குறித்துக் கொண்டு வர வேண்டியது,

6. கடையில் வரும் தொகைகளையும் செக், டிராப்ட், ரொக்கம் இவைகளையும் இந்தியன் பாங் பிராஞ்சில் கடை

பெயரில் கணக்கு வைத்துக் கொண்டு அதில் கட்டிக் கொண்டு வரவேண்டியது. அந்த கணக்கிலிருந்து தேவை யானபோது கடைக்காக பணம் வாங்கியோ, வெளியாருக்கு அதை கொடுத்தோ, செக் கொடுத்தோ நீங்கள் கடையை நடத்தி வர வேண்டியது.

7. மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரதி வருஷமும் ஜனவரி 1ம் தேதி முதல் கடையின் வரவு சிலவு கணக்குகளை லாப—நஷ்ட குறிப்புடன் எனக்கு தெரியப்படுத்திக் கொண்டு வர வேண்டியது. அதை பார்த்து நான் சொல்வதுபோல் மேற்கொண்டு கடையை நீங்கள் நடத்தி வரவேண்டியது.

8. கடைக்காக ஏற்படும் விற்பனை வரி, முதலியதையும், கடை வாடகையையும் தவருமல் செலுத்திக் கொண்டும், கடைக்கான சிலவுகளையும் அப்போதைக்கப்போது செய்து கடையை நடத்திவர வேண்டியது.

9. கடைக்கு சேரவேண்டிய தொகைகளை சகஜ மாகவோ, கோர்டு மூலமாகவோ வசூல் செய்து, அதற்காக அட்வொகேட் வைத்து வியாஜ்ஜியம் நடத்தவும், கடைபேரில் ஏற்படும் வியாஜ்ஜியத்தை தடுத்து நடத்தவும் உங்களுக்கு இதனல் அதிகாரம் கொடுத்திருக்கிறேன்.

10. மேற்கண்டபடி கடையை நடத்த நீங்கள் பிரதி மாதமும் ரூ. /- மட்டும் சம்பளமாக எடுத்துக் கொள்ள வேண்டியது. ஒரு வருஷமானதும் லாப நஷ்டத்தின்படி உங்கள் சம்பளத்தை அதிகரித்தோ குறைத்தோ கொடுக்க எனக்கு பாத்யதை உண்டு.

11. பிரதி வருஷமும் ஏப்ரல் மீ 1ம் தேதி கடையில் உள்ள சரக்குகளை கணக்கெடுத்தும், வரவு செலவு கணக்கு படி தொகை இருப்பையும், லாப நஷ்டத்தையும் அறிந்து பதிவு செய்து கொண்டு வரவேண்டியது,

12. இந்த அதிகாரம் இன்று முதல் ............... வருஷங் களுக்கு நீடித்திருக்கும். அதற்கு மேல் நாம் இருவரும் இஷ் டப்பட்டால் இதை புதுப்பித்துக் கொள்ளலாம். இஷ்டப்படா விட்டால் நீங்கள் ஷி கீளை கடையை என்னிடம் ஒப்புவித்து விட வேண்டியது.

இந்தப்படிக்கு நான் எழுதிக் கொடுத்த கடை நடத்த அதிகாரப் பத்திரம்.

**சாக்ஷிகள்.** பவர் கொடுப்பவர்

நானும் மேற்கண்டபடி ஒப்புக் கொண்டேன்.

பவர் பெற்றவர்

## உதாரணம் (45)—ஒரு காரியம் செய்ய அதிகாரம்

## SPECIAL POWER OF ATTORNEY

தேதி—இன்னருக்கு—இன்னர்—எழுதிக் கொடுப்பது

(ஏஜெண்டு கையெழுத்து செய்ய வேண்டியதானல்)

1. எனக்கு சொந்தமான கீழ் ஷெட்யூலில் கண்ட வீடு மனை [நஞ்சை புஞ்சை நிலம்] [மேல் கூரை வீடு அடிநில லீஸ் ஹோல்டு பாத்யதை கூடிய] சொத்தை எனக்காக நீங்களே—(இடம்)—ல் இருக்கும்—(இன்னார்)—குமாரர்—(இன்னார்)—க்கு ரூ. /-க்கு சுத்தக்கிரயம் செய்து [அடமானம் வைத்து ரூ. 100/-க்கு மாதம் 1க்கு வட்டி ரூ. /- ஆக சேர்த்து கேழ்க்கும் போது (............வருஷங்களுக்குள்) திருப்பிக் கொடுக்க ஒப்புக்கொண்டு] அதற்கு பத்திரம் எழுதி அதில் எனக்காக என்று சொல்லி நீங்களே கையெழுத்து செய்து அதை சரியான சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில் தாக்கல் செய்து பத்திர வாசகப்படி தொகை பெற்றுக் கொண்டு குறிப்புகளிலும், பட்டா மாற்றுதல் மனுவிலும், விண்ணப்பங்களிலும், வாக்கு மூலங்களிலும், மற்றும் தேவையானதிலும் என்டார்ஸ் மென்டுகளிலும் கையெழுத்து செய்து கிரயத்தை [அடமானத்தை] ரிஜிஸ்டர் செய்து கொடுக்க நான் இதனால் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன்.

(முதல்வர் கையெழுத்து செய்ததானால்)

1. எனக்கு சொந்தமான கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை—(தேதி)—யில்............ல் இருக்கும் (இன்னார்) குமாரர் (இன்னார்)க்கு ரூ. /-க்கு நான் கிரயம் (அடமானம்) செய்து அதற்கு பத்திரம் எழுதி நான் அதில் கையெழுத்து செய்திருக்கிறேன, அதை சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில் தாக்கல் செய்து ரிஜிஸ்டர் செய்து கொடுக்க என்னால் முடியாமல் இருப்பதால் அதை செய்ய நான் உங்களை என் ஏஜென்டாக இதனால் நியமித்திருக்கிறேன். நான் கையெழுத்து செய்துள்ள ஷ பத்திரத்தை சரியான சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில் நீங்கள் தாக்கல் செய்து நான் கையெழுத்து செய்திருப்பதை ஒப்புக்கொண்டு, பத்திர வாசகப்படி தொகையும் பெற்றுக் கொண்டு குறிப்புகளிலும் பட்டா மனுவிலும், விண்ணப்பங்களிலும், வாக்கு மூலங்களிலும், மற்றும் தேவையானதிலும், என்டார்ஸ் மென்டிலும் கையெழுத்து செய்து ஷ பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்து கொடுக்க நான் இதனால் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன்.

2. மேற் கண்டபடி நீங்கள் செய்யும் காரியத்தை நானே நேரில் இருந்து செய்ததாக ஒப்புக்கொள்வேனாகவும்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்,**

இப்படிக்கு

அதிகாரம் கொடுப்பவர்

**குறிப்பு :**—ரிஜிஸ்டர் செய்ய வேண்டிய பத்திரம் கிறயம், அடமானம் இல்லாது வேறுவகையானால் அதன் இயல்பை குறித்துக் கொண்டு மேற்கண்டதை தகுந்தபடி மாற்றி எழுதிக்கொள்ளவும்.

# அத்தியாயம்—8

## பலவகை பத்திரங்கள்—MISCELLANEOUS

### தத்து எடுப்பு—ADOPTION

**சட்டம் :**—15 வயது முடியாமலும், கல்யாணமாகாமலும், ஏற்கெனவே தத்து எடுக்கப்படாமலும் இருக்கும் ஆண், பெண் எவரையும் ஒரு ஹிந்து தத்து எடுத்துக் கொள்ளலாம்.

[ஹிந்து தத்து சட்டம் பிரிவு 10 படி]

தத்து கொடுப்பதும் எடுப்பதும் உண்மையாகவே நடந்திருக்க வேண்டும். தத்த ஹோமம் செய்வது அவசியமில்லை. ஆண் குழந்தையை தத்து எடுப்பதானால் எடுப்பவருக்கு மகனோ, மகனின் மகனோ, மகனின் மகனின் மகனோ இருக்ககூடாது. பெண் குழந்தையை தத்து எடுப்பதானால் எடுப்பவருக்கு மகளோ அல்லது மகனின் மகளோ இருக்ககூடாது, ஒரு ஆண் நபர் பெண்ணை தத்து எடுத்துக் கொள்வதானாலும் ஒரு பெண் நபர் ஆண் குழந்தையை தத்து எடுப்பதானாலும் எடுப்பவருக்கு எடுக்கப்படும் குழந்தையை விட 21 வயது அதிகமாக இருக்க வேண்டும், ஒரே குழந்தையை பலர் ஒரே சமயத்தில் தத்து எடுத்துக் கொள்ள கூடாது.

[ஹிந்து தத்து சட்டம் பிரிவு 11 படி]

மைனராக இல்லாத எவரும் ஆண் குழந்தையையோ பெண் குழந்தையையோ தத்து எடுத்துக் கொள்ளலாம். ஆனால் எடுப்பவருக்கு மனைவியிருந்தால் அவர் அனுமதியின்றி தத்து எடுக்ககூடாது.

[ஹிந்து தத்து சட்டம் பிரிவு 7 படி]

ஒரு பெண் தத்து எடுப்பதானால் அவள் மைனராகவோ கல்யாணம் ஆனவளாகவோ இருக்க கூடாது. கல்யாணமாகி யிருந்தால் புருஷனை இழந்தவளாகவோ, கல்யாணம் ரத்து செய்து கொண்டவளாகவோ, புருஷன் மதம் மாறியோ உலகத்தை துறந்தோ இருக்கவேண்டும்.

[ஹிந்து தத்து சட்டம் பிரிவு 8 படி]

தகப்பனார், தாயார், குழந்தையின் கார்டியன் இவர்களை தவிற வேறு யாருக்கும் தத்து கொடுக்க பாத்யதை இல்லை. தகப்பனார் தத்து கொடுப்பதானால் அவர் தன் மனைவியின் அனுமதியின் பேரில் கொடுக்கவேண்டும், தகப்பனார் இறந்திருந்தால் தாயார் தத்து கொடுக்கலாம். இவர்கள் இருவரும் இல்லாவிட்டால் குழந்தையின் கார்டியன் கோர்டு உத்தரவு பெற்று தத்து கொடுக்கலாம்.

[ஹிந்து தத்து சட்டம் பிரிவு 9 படி]

## உதாரணம் (46) தத்து எடுப்பு பத்திரம்

## ADOPTION DEED

தேதி—இன்னுருக்கு இன்னுர்—எழுதிக் கொடுப்பது

1. உங்களுக்கு மனைவி இறந்து விட்டபடியாலும் உங்களுக்கு ஆண் பெண் சந்ததிகள் ஒன்றும் கிடையாதாகையாலும் நீங்கள் எங்களை கேட்டுக் கொண்டதன் பேரில் எங்கள் மகன் கல்யாணமாகாத சுமார் ........ வயதுள்ள (இன்னுர்) என்பவனை உங்களுக்கு தத்து மகனுக இருக்கும்படி............தேதி சுபதினத்தில் எங்களில் 2வது நபரின் அனுமதியின் பேரில் எங்களில் 1வது நபர் உங்களுக்கு கொடுத்து நீங்கள் பெற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அது முதல் மேற்படி...............என்பவன் உங்கள் தத்து மகனுக இருந்து வருகிருன்.

2. மேற்கண்டபடி நாங்கள் தத்து கொடுத்து நீங்கள் எடுத்துக் கொண்டதை நாங்கள் இதனுல் பதிவு செய்து கொடுக்கிருேம்.

இந்தப் படிக்கு நாங்கள் எழுதிக் கொடுத்த தத்து எடுப்பு பத்திரம்.

1.
2.

**சாக்ஷிகள்**

தத்து கொடுத்தவர்
தத்து பெறுபவர்

## ஈஸ்மென்ட் (ஒ. கா. தா. வ. த. உறிமைகள்)

## (EASEMENT RIGHTS)

**சட்டம்:**—ஒருவன் தனக்கு சொந்தமான அல்லது தன் அனுபோகத்தில் உள்ள நிலத்தை அனுகூலமாய் அனுபவிப்பதற்கு தனக்கு சொந்தமாயில்லாத வேருெருவர் நிலத்தில் ஏதாவது செய்வது, செய்து வருவதை செய்து கொண்டே போவது, அல்லது செய்து வருவதை தடுப்பது, தடுத்து வருவதை தடுத்துக் கொண்டே போவது என்ற பாத்யதை "ஈஸ்மென்ட்" எனப்படும்,

அந்த பாத்யதை உடைய சொத்து ஆளும் சொத்து என்றும் அதற்கு உட்பட்டது ஆளப்படும் சொத்து என்றும் சொல்லப்படும்.

மேற்படி "நிலம்" என்பது அதோடு சாஸ்வதமாய் சேர்க்கப்பட்டதான வீடு போன்றதையும் குறிக்கும்:

[ஈஸ்மென்ட் சட்டம் பிரிவு 4 படி]

ஈஸ்மென்ட் பாத்யதை தடங்கல் இல்லாத 20 வருஷ அனுபோகத்தால் சாஸ்வதமாகி விடுகிறது.

[ஈஸ்மென்ட் சட்டம் பிரிவு 15 படி]

## உதாரணம் (47)—ஒளி காற்று ஈஸ்மெண்ட் ஒப்பந்தம்

## AGREEMENT RE-EASEMENT OF LIGHT AND AIR

1. உங்களுக்கு சொந்தமான (ஊர், தெருவு, கதவு எண் ............) வீடு மனையானது எனக்கு சொந்தமான (ஊர், தெருவு கதவு எண் ............) வீடு மனைக்கு பின் (மேற்கு புறத்தில் இருக்கிறது. நம் இரண்டு வீடுகளுக்கும் இடையே உள்ள என் (மேற்கு) சுவற்றில் நான் இப்பொழுது ............ ஜென்னல்களும் ............ வென்டிலேடர்களும் வைத்து கட்டியிருக்கிறேன். அவைகளை அடைத்து விடும் படி நீங்கள் கேட்ட பிறகு நாம் இருவரும் சமரசமாய் பேசி கீழ்கண்டபடி ஒப்புக்கொண்டிருக்கிறோம்.

2. இன்று முதல் மூன்று வருஷத்திற்கு மேல் நீங்கள் கேழ்க்கும்போது நான் மேற்படி ஜென்னல்களையும் வென்டி லேடர்களையும் அடைத்துவிட சம்மதிக்கிறேன். அதுவரை மட்டும் அவைகளால் ஏற்படும் வசதிகளை நான் அனுபவித்து கொண்டுவர நீங்கள் எவ்வித தடங்கலும் செய்யக்கூடாது. மேற்படி மூன்று வருஷம் முடிந்ததும் நான் அவைகளை அடைக்க தவறினல் நீங்களே உங்கள் இடத்தில் சுவர் எழுப்பியோ அல்லது தகடுகள் நிறுத்தியோ அடைத்து விடலாம்.

என் வீடு கீழ் "எ" ஷெடியூலிலும் உங்கள் வீடு கீழ் "பி" ஷெடியூலிலும் குறிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த ஒளி, காற்று ஈஸ்மென்ட ஒப்பந்தம்.

"எ" ஷெடியூல்

............

"பி" ஷெடியூல்

............

எழுதி கொடுப்பவர்

மேற்கண்டபடி "பி" ஷெடியூல் சொந்தக்காரரான நானும் ஒப்புக்கொண்டேன்.

"பி" ஷெடியூல்தார்

சாக்ஷிகள்.

## வாடகை—கிரய ஒப்பந்தம்

## HIRE—PURCHASE AGREEMENT

**சட்டம் :—** பொருள்கள் வாடகைக்கு விடப்பட்டு வாடகைக்கு எடுத் தவர் இஷ்டப்பட்டால் அவைகளை ஒப்பந்தபடி கிரயம் செய்ததாக அடைய செய்துகொள்ளும் ஒப்பந்தம். "வாடகை கிரய ஒப்பந்தம்" எனப்படும்.

(1) வாடகைக்கு எடுத்துக் கொண்டவர் ஒப்புக்கொண்ட தொகையை தவணை முறையில் கட்டுவதாக சொன்னதின் பேரில் சொந்தக்காரர் பொருளை அவரிடம் ஒப்படைப்பதும்,

(ii) கடைசி தவணை முடிய கட்டிய பிறகு பொருளில் சொந்த பாத்யதை வாடகைக்கு எடுத்தவருக்கு மாறும் என்பதும்,

(iii) அப்படி சொந்த பாத்யதை மாறுவதற்குள் இந்த ஒப்பந்தத்தை வாடகைக்கு எடுத்தவர் முடிவுகட்ட பாத்யதையும்—வாடகை-கிரய ஒப்பந்தத்தில் அடங்கியது.

[வாடகை-கிரய சட்டம் 1972 பிரிவு 2 (C) படி]

அந்த ஒப்பந்தம் எழுத்து மூலமாகவே இருக்க வேண்டும். அதை வாடகைக்கு எடுப்பவரும், பொருள் சொந்தக்காரரும் ஜாமீன்தார் இருந்தால் அவரும் கையெழுத்து செய்ய வேண்டும். அப்படி செய்யாவிட்டால் ஒப்பந்தம் செல்லாது.

[ஷை வாடகை-கிரய சட்டம் பிரிவு 3 படி]

அந்த ஒப்பந்தத்தில் (1) வாடகை கிரயவிலை (2) உடன் ரொக்க கிரய விலை (3) ஒப்பந்தம் ஆரம்ப தேதி (4) வாடகை-கிரயத் தொகையை செலுத்த வேண்டிய தவணைகளும், தவணைகளின் தொகையும், அதை கட்ட வேண்டிய தேதியையும், யாரிடத்திலும் எந்த இடத்திலும் என்பதையும் (5) வாடகை பொருளின் விவரமும் குறிக்க வேண்டும்.

[ஷை வாடகை=கிரய சட்டம் பிரிவு 4 (1) படி]

மேற்கண்டபடி வாடகைக்கு எடுத்தவர் அந்த ஒப்பந்தத்தை வேறு எவருக்கும் சொந்தக்காரரின் அனுமதியின் பேரில் மாற்றலாம். தகுந்த காரணமின்றி சொந்தக்காரர் அனுமதி தர மறுக்ககூடாது.

[ஷை வாடகை-கிரய சட்டம் பிரிவு 12 (1) படி]

பொருள் சொந்தக்காரர் வாடகைக்கு எடுப்பவருக்கும், ஜாமீன்தாரருக்கும் வாடகை-கிரய ஒப்பந்தத்தின் நகலை கையெழுத்து செய்து கொடுக்க வேண்டும்.

[ஷைவாடகை—கிரய சட்டம் பிரிவு 23 (1) படி]

ஷை சட்டம் 1-9-1973ல் அமுலுக்கு வரும்.

## உதாரணம் (48)—வாடகை—கிரய ஒப்பந்தம்

## HIRE PURCHASE AGREEMENT

தேதி—இன்னாருக்கு இன்னார்—எழுதிகொடுப்பது

1. நான் உங்களிடமிருந்து கீழ் ஷெடியூலில் விவரமாய் குறித்துள்ள (மோட்டார் வண்டி) (தையல்/டைப் மெஷீன்) .........—நெ. கொண்ட பொருளை உபயோகப்படுத்திக் கொள்ள அதன் உடன் விலை ரூ. /- ஆகவும், தவணை முறை விலை ரூ. /-ஆகவும் பேசிக் கொண்டு வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

2. மேற்படி தவணை முறை விலையை வாடகையாக மாதம் 1க்கு ரூ. /- ஆக செலுத்திக் கொண்டு வரக் கடவேன். பிரதி இங்கிலீஷ் மாத வாடகையை அந்தந்த

மாதத்திலேயே ............ தேதிக்குள் உங்களிடம் தவருமல் செலுத்தி ரசீது பெற்றுக் கொண்டு வர சம்மதிக்கிறேன்.

3. மேற்கண்டபடி மாத வாடகையை ஒரு தவணைக்கு அதிகமாக நான் கட்டத் தவறினல் எனக்கு இரண்டு வாரம் முன்னதாகவே தெரிவித்து இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து விடலாம். அந்த இரண்டு வாரத்திற்குள் தவணைகள் பாக்கியை ரூ. 100-க்கு மாதம் 1க்கு வட்டி ரூ. / சேர்த்து நான் கட்டி விட்டால் நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டியது.

4. இந்த ஒப்பந்தத்தை நான் வேறு யாருக்காவது மாற்றி விட எனக்கு பாத்யதை உண்டு. எனக்குப் பிறகு என் வாரீசுதாரர்களுக்கும் இந்த ஒப்பந்தப்படி நடந்து கொள்ள பாத்யதை உண்டு.

5. நான் வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கும் பொருளை என்னிடத்திலேயே வைத்துக் கொண்டு அதற்கு எவ்வித குறைவாவது பழுதாவது ஏற்படாதபடி பார்த்துவரக் கடவேன். அப்படி ஏதாவது ஏற்பட்டால் அதனுல் உண்டாகும் நஷ்டத்தை நான் உங்களுக்கு கட்டிக் கொடுக்க சம்மதிக்கிறேன்.

6. ஷ தவணைகள் முடிவதற்கு முந்தியே நான் கிரயத்தை பூர்த்தி செய்து கொள்ள இஷ்டப்பட்டு 14 நாட்கள் முன்னதாகவே உங்களுக்கு தெரிவித்தால் நீங்கள் தள்ளு போக பாக்கி தவணைகள் தொகையை பெற்றுக் கொண்டு எனக்கு கிரயம் செய்துவிட வேண்டியது.

7. இந்த ஒப்பந்தம் முடிவதற்கு முந்தியே எனக்கு வாடகை பொருள் தேவையில்லா விட்டால் 14 நாட்களுக்கு முந்தியே உங்களுக்கு தெரிவித்து அதை திருப்பிக் கொடுத்து விட எனக்கு பாத்யதை உண்டு. அப்பொழுது தவணை பாக்கிகளையும் நஷ்டத்திற்காக ரூ. /-ம் நான் உங்களுக்கு செலுத்த கடவேன்.

8. நான் ஒரு தவணைக்கு அதிகமாக வாடகையை செலுத்த தவறியிருந்தால் நீங்கள் எனக்கு முன்னதாகவே தெரிவித்து இந்த ஒப்பந்தத்தை ரத்து செய்து வாடகை பொருளை என்னிடமிருந்து பிடித்துக் கொள்ள உங்களுக்கு பாத்யதை உண்டு.

9. இத்த ஒப்பந்தப்படி நான் கிரயத்தை பூர்த்தி செய்து கொள்ளும்வரை வாடகை பொருள் என்னிடமிருந்தாலும் அது உங்களுக்கே சொந்தமாகவே இருக்கும்.

இந்தப்படிக்கு நான் எழுதிக் கொடுத்த ஒப்பந்தம்.

**ஷெடியூல்**

............

**சாக்ஷிகள்**

வாடகைக்கு எடுத்தவர்
சொந்தக்காரார்

## நஷ்ட ஈடு—INDEMNITY

**சட்டம் :**—ஒருவர் மற்ெருருவருக்கு தன்னுடைய நடத்தையாலோ, வேறு யாருடைய நடத்தையாலோ ஏற்படக்கூடிய நஷ்டத்தை கட்டிக் கொடுக்க ஒப்புக்கொள்வது நஷ்ட ஈடு அல்லது "இன்டெம்னிடி" எனப் படும்.

[இந்திய ஒப்பந்த சட்டம் 124 படி]

### உதாரணம் (49)—மைனர் தொகைக்கு இன்டெம்னிடி

### INDEMNITY FOR MINOR'S SHARE

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. நீங்கள் உங்களுக்கு சொந்தமான—(சொத்து விவரம்)—வீடுமனை (புஞ்சை நஞ்சை நிலம்) கூடிய சொத்தை ............ தேதியில் ............ சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு டாகுமென்ட் நெ. ......... மூலமாக—(இன்னர்)—யிடம் ஈடுகாட்டி அடமானம் வைத்து ரூ.        /- கடன் வாங்கியிருக்கிறீர்கள். அப்படி உங்களுக்கு கடன் கொடுத்தவர் இறந்துவிட்டபடியால் அந்த அடமான தொகை அவர் வாரீசுகளான—பாரியாள் எங்களில் 1வது நபருக்கும்—குமாரனை எங்களில் 2வது நபருக்கும்—குமாரத்தி மைனர் சுமார் ............ வயதுள்ள (இன்னர்)க்கும் சேர வேண்டியதாய் இருக்கிறது. அதை பூராவாய் மைனரின் பாகத்தையும் சேர்த்து எங்களிடம் செலுத்தும்படி நாங்கள் கேட்டதற்கு மைனர் பாகத் தொகைக்கு இன்டெம்னிடி கொடுத்தால் கொடுப்பதாக ஒப்புக் கொண்டீர்கள்.

2. அதன்படி ஷை அடமான பூராபாக்கி தொகையில் ஷை மைனர் பாகத்தை அவர் தாயாரும் கார்டியனுமான எங்களில் 1வது நபரிடம் நீங்கள் செலுத்தி விட்டபடியால் ஷை மைனர் பாகத் தொகை ரூ.        /- க்கு கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தில் எங்களுக்குள்ள பாக பாத்யதையை நாங்கள் இதனல் உங்களுக்கு இன்டெம்னிடியாக (நஷ்ட ஈடாக) கொடுத்திருக்கிறேம். மைனர் பாகத் தொகையை எங்களில் 1வது நபரிடம் செலுத்தியதை ஆக்ஷேபித்து தாவா ஏற்பட்டால் அதனல் உண்டாகக் கூடிய நஷ்டத்தை நீங்கள் எங்களிடமிருந்தும் கீழ்கண்ட இன்டெம்னிடி சொத்திலிருந்தும் சிலவுடன் வசூல் செய்து கொள்ளவும். இந்த இன்டெம்னிடி சொத்தின் பேரில் இப்பொழுது எவ்வித கலனும் கிடையாது.

இந்தப்படிக்கு நாங்கள் சம்மதித்து எழுதிக் கொடுத்த நஷ்டஈடு உறுதி பத்திரம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

.............

**சாக்ஷிகள்**

நஷ்டஈடு கொடுப்பவர்**கள்**

## உதாரணம் (50)—பத்திரம் காணுமல் போனதற்கு நஷ்டஈடு

## INDEMNITY FOR LOSS OF DOCUMENT

1. ............ தேதியில் ஏற்பட்ட ............ சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு டாகுமென்ட் நெ.................. மூலமாக உங்களுடைய—(சொத்து விவரம்)—வீடு மனையை நீங்கள் என்னிடம் ஈடுகாட்டி அடமானம் வைத்து ரூ. /- கடன் வாங்கி யிருக்கிறீர்கள். அந்தக் கடனை திருப்பிக் கொடுப்பதாக சொல்லி பத்திரங்களை நீங்கள் என்னை வாபீசு செய்யும் படி கேட்டீர்கள். நீங்கள் எனக்கு எழுதிக் கொடுத்த அடமான பத்திரம் காணுமல் போய்விட்டபடியால் அதை திருப்பிக் கொடுக்க முடியாமல் இருக்கிறது. இதை அறிந்து நஷ்ட ஈடு ரிஜிஸ்டர் செய்து கொடுத்தால் அடமானத் தொகையை கொடுப்பதாக நீங்கள் சொன்னீர்கள்,

2. அதன்படி இந்த இன்டெம்னிடி பத்திரம் ரிஜிஸ்டராகும்போது சப்ரிஜிஸ்டிரார் அவர்கள் முன்னிலையில் மேற்படி அடமான பாக்கி தொகை ரூ. /- இதை நீங்கள் என்னிடம் செலுத்திவிட்டபடியால் எனக்கு சொந்தமான கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை மேற்படி தொகைக்கு இதனுல் உங்களுக்கு இன்டெம்னிடியாக கொடுத்திருக்கிறேன். உங்கள் அடமானப் பத்திரத்தை நான் திருப்பிக் கொடுக்காததால் உங்களுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டால் அதை இந்த இன்டெம்னிடி சொத்தின் பேரிலும் என் பேரிலும் தொடர்ந்து வசூல் செய்து கொள்ளவும்,

3. அடமானப் பத்திரம் தவிற மற்ற பத்திரங்களை உங்களிடம் கொடுத்து விட்டேன். அடமானப் பத்திரம் அகப்பட்டால் அதை உங்களிடம் கொடுத்து விடுகிறேன்.

4. மேற்படி அடமான தொகைக்கு ............ வருஷங்களுக்கு இந்த இன்டெம்னிடி அமுலில் இருக்க வேண்டியது

இந்தப்படிக்கு நான் எழுதிக் கொடுத்த இன்டெம்னிடி—நஷ்ட ஈடு பத்திரம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

**சாக்ஷிகள்**

இன்டெம்னிடி கொடுப்பவர்

## உதாரணம் (51)—இன்டெம்னிடி ரிலீஸ் பத்திரம்

## RELEASE OF INDEMNITY RIGHT

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. ............தேதியில் ஏற்பட்ட...........சப் ரிஜிஸ்டிரார் ஆபீசு..............எண் தஸ்தாவேஜு மூலமாக உங்களு

டைய வீடு மனையை நஞ்சை புஞ்சை நிலத்தை (விவரம் குறிக்கவும்) உங்களில் 1வது நபர் தனக்காகவும் உங்களில் 2, 3 நபர்களுக்கு கார்டியன் முறையிலும் சேர்ந்து எனக்கு கிரயம் செய்து கொடுத்தீர்கள். ஷை கிரயத்தொகை பூராவையும் உங்களில் 2, 3 நபர்கள் பாகம் உள்பட உங்களில் 1வது நபர் பெற்றுக் கொண்டு அதற்கு கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை கிரயபத்திரத்தில் "பி" ஷெடியூலாக காண்பித்து எனக்கு இன்டெம்னிடியாக கொடுத்தீர்கள்.

2. உங்களில் 2, 3 நபர்கள் இப்பொழுது மேஜராகி ஷை கிரய சொத்தைக் குறித்து எனக்கு ரிலீஸ் பத்திரம் ரிஜிஸ்டர் செய்து கொடுத்து விட்டபடியால் கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தின் பேரில் எனக்கு நீங்கள் கொடுத்த இன்டெம்னிடி பாத்யதையை நான் இதனால் உங்களுக்கு ரிலீஸ் செய்து கொடுத்து விட்டேன். இனி கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தில் எனக்கு இன்டெம்னிடி பாத்யதை எதுவும் கிடையாது.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த இன்டெம்னிடி என்கிற நஷ்டஈடு விடுதலை பத்திரம்.

**ஷெடியூல் (சொத்து விவரம்)**

............

**சாக்ஷிகள்**

## உதாரணம் (52)—ஆயுள் பாத்யதையை அடுத்தவருக்கு சரண் (ரிலீஸ்) செய்தல்

## SURRENDER (RELEASE) OF LIFE INTEREST TO NEXT IN INTEREST

தேதி—இன்னாருக்கு இன்னார்—எழுதிக் கொடுப்பது.

1. எனக்கு சொந்தமாயிருந்த கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை நான் எவ்வித பராதீனமும் செய்யாமல் என் ஜீவதசைவரை அனுபவித்து வரக்கடவேன் என்றும், என் ஜீவதசைக்குப் பிறகு என் குமாரத்தியும் என் மருமகனுமான நீங்கள் இருவர்களும் என்னைப்போலவே எவ்வித பராதீனமும் செய்யாமல் அனுபவித்து வரவேண்டியதென்றும், உங்கள் இருவர்களுடைய ஜீவதசைக்குப் பிறகு உங்களுடைய ஆண் பெண் சந்ததிகள் ஷை சொத்தை சர்வ சுதந்திரமாய் அடையவேண்டியதென்றும் சொல்லி ஒரு செடில்மென்டு பத்திரம் எழுதி அதை............சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில்.........எண் தஸ்தாவேஜாக நான் ரிஜிஸ்டர் செய்து வைத்திருக்கிறேன். எனக்கு இப்பொழுது தள்ளாமையாகி விட்டபடியாலும் உங்கள் பேரில் எனக்குள்ள இயல்பான அன்பினாலும் பிரியத்தாலும் ஷை சொத்தில் இப்பொழுது எனக்குள்ள ஆயுள்வரை அனுபவிக்கும் பாத்யதையை எனக்குப்பின் அடையப்போகும் உங்களுக்கு நான் இதனால் சரண்செய்து மேற்படி சொத்தை இன்று உங்கள் சுவாதீனம் செய்து விட்டேன்.

2. ஆகையால் இன்று முதற்கொண்டே ஷெ செட்டில் மென்டு பத்திரப்படி நீங்கள் மேற்படி சொத்தை என்முன் ஆயுள் பாத்யதையின்றி அனுபவித்துக் கொள்ளவும், இனி மேற்படி சொத்தில் எனக்கு எவ்வித பாத்யதையும் கிடையாது. இதில் எவ்வித கலனுமில்லை.

இந்தப் படிக்கு நான் சம்மதித்து எழுதிக்கொடுத்த சரண் என்கிற ரிலீஸ் பத்திரம்.

ஷெடியூல் (சொத்து விவரம்)

............

**சாக்ஷிகள்.** ரலீஸ் செய்பவர்

## உதாரணம் (53)—மேஜரான பிறகு கார்டியனை விடுதலை செய்தல்

## RELEASE OF GUARDIAN AFTER MAJORITY

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக்கொடுப்பது

1. என் தகப்பனர் காலஞ் சென்ற—(இன்னர்)—ஒரு உயில் எழுதி அதை ............ சப்ரிஜிஸ்டிரார் ஆபீசில் புஸ்தகம் 3ல் .................... எண் தஸ்தாவேஜாக ரிஜிஸ்டர் செய்து வைத்தார். அப்பொழுது நான் மைனராக இருந்தபடியால் அதில் உங்களை எனக்கு கார்டியனுக நியமித்து என் சொத்தை நீங்கள் பரிபாலித்தும் என்னை சவரக்ஷணை செய்தும் படிப்பு முதலியது சொல்லி வைத்தும் என்னை காப்பாற்றி வரவேண்டுமென்றும், நான் மேஜரானவுடன் மேற்படி சொத்தை நீங்கள் என்னிடம் ஒப்புவித்துவிட வேண்டுமென்றும் கண்டிருக்கிறது. அதன்படி நீங்கள் செய்து வந்து இப்பொழுது நான் மேஜராகி விட்டபடியால் மேற்படி சொத்தை நீங்கள் இன்று என்னிடம் ஒப்புவித்து என் சுவாதீனம் செய்து விட்டீர்கள். இனி உங்களிடமிருந்து எனக்கு சேர வேண்டியது ஒன்றும் கிடையாது.

2. ஆகையால் எனக்கு கார்டியன் என்ற முறையிலிருந்து நான் உங்களை இதனல் விடுதலை (ரிலீஸ்) செய்து விட்டேன்.

**சாக்ஷிகள்.** விடுதலை செய்பவர்.

## உதாரணம் (54)—பணி செய்ய ஒப்பந்தம்

## SERVICE AGREEMENT

தேதி—இன்னருக்கு இன்னர்—எழுதிக் கொடுப்பது

1. நீங்கள் பட்டரை வைத்து நடத்தி வரும் தொழிற்சாலையில் நான் இப்பொழுது பிட்டர் ஆக வேலை செய்து வருகிறேன். என் அவசர குடும்ப சிலவிற்காக நான்

உங்களை ரூ. /- கடன் கேட்டதற்கு வேலை செய்து கழிப்பதானல் கொடுப்பதாக சொன்னீர்கள். அப்படியே நானும் செய்ய ஒப்புக்கொண்டு இன்று உங்களிடமிருந்து ரூ. /- கடன் பெற்றுக் கொண்டிருக்கிறேன். நாளை முதல் உங்கள் பட்டரையில் நான் தவருமல் வேலை செய்து வருகிறேன் என்றும், என் கூலியிலிருந்து பிரதி தினமும் ரூ. /- ஆக மேற்படி கடனுக்கு நீங்கள் எடுத்துக் கொண்டு மிகுதி ஏற்படும் கூலியை நான் உங்களிடமிருந்து பெற்றுக்கொண்டு வருகிறேன் என்றும் உறுதி கூறுகிறேன்.

2, மேற்கண்டபடி வேலை செய்து கடனை தீர்க்காமல் நான் நின்று விட்டால் உங்களை ஏமாற்றிய குற்றத்திற்கு நான் உட்படுவதும் தவிர நான் நின்றதால் உங்களுக்கு ஏற்படும் நஷ்டங்களையும் மேற்படி கடனுடன் சேர்த்துக் கொடுக்க சம்மதிக்கிறேன்.

இந்தப்படிக்கு நான் சம்மதித்து எழுதிக் கொடுத்த பணி செய்ய ஒப்பந்தம்.

**சாக்ஷிகள்.**

பணி செய்பவர்

# அத்தியாயம் 9

## உறுதி, ரசீது, திருத்தல் பத்திரங்கள்

## RATIFICATION, RECEIPT AND RECTIFICATION

### உதாரணம் (55)—மேஜரானவர் கிறய உறுதி செய்தல்

### RATIFICATION OF SALE AFTER MAJORITY

தேதி—இன்னருக்கு—இன்னர்—எழுதி கொடுப்பது.

1. —(தேதி)—யில் ஏற்பட்ட............சப்ரிஜிஸ்டிரார் ஆபீசு புஸ்தகம் 1 வால்யூம் (பைல்).........பக்கங்கள்.........ல் பதிவாயிருக்கும் தஸ்தாவேஜு எண்...........மூலமாக கீழ் ஷெடியூலில் கண்ட சொத்தை நான் மைனராக இருந்த போது என் தாயார் (இன்னர்) எனக்கு கார்டியனகவும் சேர்ந்து ரூ. /-க்கு உங்களுக்கு சுத்தக்கிரயம் செய்து கொடுத்தார்.

2. இப்பொழுது நான் மேஜராகிவிட்ட படியால் மேற் கண்டபடி என்தாயார் என்கார்டியனக செய்த ஷ கிரயத்தை நான் இதனல் ஒப்புக்கொண்டு உறுதி செய்து எனக்கு ஷ சொத்தில் இருந்த பாத்யதையை உங்களுக்கு ரிலீஸ் செய்துவிட்டேன்.

இந்தப்படிக்கு நான் எழுதிக்கொடுத்த கிரய உறுதி—ரிலீஸ் பத்திரம்.

